
2012, September 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்



- சீன -இலங்கை உறவுகள் எங்கே போகின்றன?
- வடமாகாண தேர்தலை அரசு தாமதிப்பது ஏன்?
- ஜெயலலிதாவின் நாற்பதும் நமதே கோஷம்
- மன்மோகன் சிங் அரசை உலுக்கும் கோல்கேட்
- உச்சக்கட்டத்தில் அரபு வசந்தம்
- அமெரிக்காவில் சீக்கியர்களை ஏன் கொல்கிறார்கள்?



# வெளியேற வழி என்ன?

- சச்சினுக்கு எப்போது ஓய்வு?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 150.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

9 772279 203000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கான
பிரத்தியேக திருமணசேவை


THIRUMANAM.LK™
இருமனம் சேர்ந்தால் திருமணம்

இன்றே உங்கள் அங்கத்துவத்தைப் பதிவு செய்து
வாழ்க்கை துணையை தெரிவுசெய்யுங்கள்...

www.thirumanam.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Rs.285/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

எமது விருந்தினர்
சுமணசிறி லியனகே 10

இலங்கை-சீன உறவுகள்
எங்கே போகின்றன?
என்.சத்தியமூர்த்தி 13

அரச பயங்கரவாதத்தின் ஆயுதம் புலி 17
எஸ்.எம்.கோபாலரத்தினம்

இலங்கை எதிர்நோக்கும்
ஆட்சி முறை சவால் 18
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

ஜெயலலிதாவின்
நாற்பதும் நமதே கோஷம் 22
எம்.காசிநாதன்

டில்லி டயறி 25
எம்.பி.வித்தியாதரன்

அசாஞ் வெளியேற வழி என்ன? 32


உச்சக்கட்டத்தில் அரபு வசந்தம் 38
கலாநிதி குமார் டேவிட்

அமெரிக்காவில் சீக்கியர்களை
ஏன் தாக்குகிறார்கள்? 44

நீல் ஆம்ஸ்ரோங் 47

சச்சின் - ஓய்வு பெறும் எண்ணமில்லை 56

கடைசி பக்கம் 64
தெ.ஈஸ்வரன்




32


38


44



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2012, செப்டெம்பர் 01-15


13


18


25


22


12


47


64

ஆசிரியரிடமிருந்து...

# அணிசேரா இயக்க உச்சி மகாநாடு

அணிசேரா இயக்கம் அதன் 16ஆவது உச்சிமகாநாட்டை ஈரானியத் தலைநகர் தெஹ்ரானில் கடந்தவாரம் நடத்தி முடித்திருக்கிறது.

கெடுபிடியுத்த காலகட்டத்தின் ஒரு நினைவுச் சின்னமாக வர்ணிக்கப்படும் இந்த இயக்கம் தற்போதைய காலகட்டத்துக்கு பொருத்தப்பாடுடையதாக எந்தளவுக்கு இருக்கிறது என்ற ஆராய்ச்சியைச் செய்வதற்கு அரசியல் அவதானிகளுக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்த அதேவேளை, அதன் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டை நடத்தி தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் ஈரானுக்கு தங்களின் ஒருமைப்பாட்டை வெளிக்காட்டியதன் மூலகமாக பொருத்தப்பாடொன்றை நிரூபிக்க முயன்றிருக்கிறார்கள்.

அணுத்திட்டம் தொடர்பாக ஈரானுடன் தகராறில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கா அதன் பொருளாதாரத் தடைகளின் மூலமாகத் தெஹ்ரானைத் தண்டிப்பதற்கு தன்னாலியன்றதைச் செய்து கொண்டிருக்கும் நிலையில், அணிசேரா இயக்கம் அந்தத் தடைகளைக் கண்டனம் செய்ததுடன் மாத்திரம் நின்றுவிடாமல், அணுசக்தியைப் பெறுவதற்கான ஈரானின் உரிமையையும் ஏகமனதாக அங்கீகரித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அணுத்திட்டத் தகராறு தொடர் பில் ஈரான் தனிமைப்படுத்தப் பட்டுவிட்டதாக வாஷிங்டன் அடிக்கடி கூறிக்கொண்டிருக்கின்ற போதிலும், சுமார் 120 நாடுகள் தெஹ்ரான் உச்சிமகாநாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்றிருந்தன.

ஈரானைப் பொறுத்தவரை இதை ஒரு வெற்றியென்று கூறமுடியுமென்ற போதிலும், அணிசேரா இயக்கத்தினால் காட்டப்பட்டிருக்கும் ஒருமைப்பாடு ஐக்கிய நாடுகள் சபையில் வாக்குகளாக மாறுமா என்பது விவாதத்துக்குரிய விடயமாகும். கடந்த காலத்தில் இந்த இயக்கத்தின் பல நாடுகள் (இந்தியா உட்பட) ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அல்லதுபொதுச் சபையில் ஈரானுக்கு எதிராகவே வாக்களித்து வந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உண்மைகளை அடிப்படையாக வைத்தே உச்சிமகாநாட்டுத் தீர்மானத்தின் மூலமாக வெளிக்காட்டப்பட்ட ஒருமைப்பாட்டின் பயனுடைத் தன்மையின் தகுதியை ஆராயவேண்டும்.

அணிசேரா இயக்கத்தை ஸ்தாபித்த நாடுகளில் ஒன்றான எகிப்தின் சார்பில், முதற்தடவையாக ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி முஹமட் முர்சி பங்கேற்றமையும் தீவிரமடைந்திருக்கும் சிரிய உள்நாட்டுப் போரில் ஜனாதிபதி அசாத்தை ஆதரிக்கும் ஈரான் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றதும் இந்த உச்சிமகாநாட்டின் பால் அவதானிகளின் கவனத்தை ஈர்த்த முக்கியமான இரு அம்சங்களாகும். அமெரிக்காவிடமிருந்தும் இஸ்ரேலிடமிருந்தும் வந்த நெருக்குதல்களையும் பொருட்படுத்தாமல் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அசாத்தை சிரியாவின் ஆக்கிரமிப்பாளர் என்று எகிப்திய ஜனாதிபதி செய்த வர்ணனையும் ஐ.நா.வின் கோரிக்கைகளுக்கு ஈரான் இணங்கிச் செயற்படாவிட்டால் தனிமைப்படுத்தப்படக்கூடிய ஆபத்தை எதிர்கொள்ளவேண்டுமென்று பான் கீ மூன் தெரிவித்த கருத்தும் ஈரானிய ஜனாதிபதியின் காதுகளில் இனிப்பாக ஒலித்திருக்கப்போவதில்லை.

மகாநாட்டின் இறுதிப் பிரகடனத்திலே சர்வதேச நிதி நெருக்கடி தொடக்கம் காலநிலை மாற்றம், ஆயுதப் பரிகரணம் மற்றும் பாலஸ்தீனப் பிரச்சினை வரை அபிவிருத்தியடைந்த நாடுகளின் அக்கறைக்குரிய சகல உலகளாவிய பிரச்சினைகள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பிரகடனத்தை அணிசேரா இயக்கத்தின் உறுப்பு நாடுகளும் ஏனைய நாடுகளும் அடுத்துவரும் நாட்களில் எந்தளவுக்கு அக்கறையுடன் நோக்கப்போகின்றன என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

சர்வதேச அரசியல் ஆய்வாளர் ஒருவர் வர்ணித்ததைப் போன்று அணிசேரா இயக்கம் விண்ணில் தோன்றும் வால் நட்சத்திரத்தைப்போன்று இடைக்கிடை தோன்றிக் காட்சி தந்து விட்டு மறைந்துவிடும். உண்மையிலேயே, மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட்டுவருகின்ற இந்த இயக்கத்தின் உச்சிமகாநாடும் அதன் பிரகடனமும் சில தினங்களுக்கு மாத்திரமே செய்திகளில் அடிபடும். பின்னர் மறக்கப்பட்டுவிடும். மீண்டும் ஒரு உச்சி மகாநாடு நடைபெறும்போது தான் ஊடகங்களின் கவனத்தை அணிசேரா இயக்கம் தன்பால் ஈர்க்கும். அணிசேரா இயக்கம் அரசியல் ரீதியில் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாக இருந்த காலகட்டத்தில் சில முன்னணி உறுப்பு நாடுகள் அவற்றுக்கு அனுகூலம் இல்லாவிட்டாலும் கூட சர்வதேச விவகாரங்களில் துணிச்சலான நிலைப்பாடுகளை எடுத்து மூன்றாம் உலகின் ஒருமைப்பாட்டுக்கு முன்னுரிமை கொடுத்தன. ஆனால், இன்று உறுப்புநாடுகள் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற முரணான போக்குகள் உலகமயமாக்கலுக்கு வசதி செய்து அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வளங்கள் அபகரிக்கப்படும் ஆபத்தான சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கின்றன. உலகமயமாக்கலின் ஆபத்துகளில் இருந்து மூன்றாம் உலக நாடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஐக்கியம் அவசியமாகும். தனித்து நின்று இன்றைய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க முடியாது.

அணிசேரா இயக்கம் இன்றைய புதிய சூழ்நிலைகளின் கீழ் இதுவிடயத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் குறிப்பாக மூன்றாம் உலகின் குரலாக ஒலிப்பதற்கு தன்னைத் தயார்படுத்துவது அதன் இருப்புக்கான பொருத்தப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதாக இருக்கும். ஆனால், அவ்வாறு செயற்படுவதற்கு இந்த இயக்கத்துக்கு வழிகாட்டக்கூடியதாக உறுப்பு நாடுகளின் அரசியல் தலைமைத்துவங்கள் இல்லை. ஆக, மீண்டும் ஒரு மூன்று வருடங்களுக்குப் பிறகு அணிசேரா இயக்கம் குறித்து பேசுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நோக்கு

தரமான விடயங்களுடன் சிறப்பான வடிவமைப்பில் வெளிவரும் சமகாலம் சஞ்சிகை தொடர்பில் அதன் வெளியீட்டாளர்களான எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டட்டாருக்கும் சஞ்சிகையின் ஆசிரியபீடத்தினருக்கும் முதலாவது எனது பாராட்டுக்களை தெரிவிப்ப துடன், தங்களிடம் வாசகர்கள் சார் பில் கோரிக்கை ஒன்றையும் முன்வைக்க விரும்புகின்றேன். அதாவது தங்கள் சமகாலம் சஞ்சிகை தொடர்பில் நான் எனது வெளியூர் நண்பர்கள் சிலருடன் சிலாகிக்க முற்பட்ட போது அவர்கள் தமது ஊர்களுக்கு சமகாலம் சஞ்சிகை வருவதில்லை. அதனால் அதனை தம்மால் படித்துப்பார்க்க முடிய வில்லையென ஆதங்கப்பட்டனர்.

எனவே இவ்வாறானதொரு அருமையான அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய சஞ்சிகையை சகல இடங்களிலும் பெறக்கூடிய வழிவகைகளை செய்யுமாறு வெளியீட்டாளர்களிடமும் ஆசிரியரிடமும் வேண்டிக்கொள்கிறேன். சமகாலம் சஞ்சிகை தமிழ் பேசும் மக்களால் கண்டிப்பாக படிக்கப்பட வேண்டிய சஞ்சிகை என்பதாலேயே இக்கோரிக்கையை உங்கள் முன் வைக்கிறேன்.

பா.வசீகரன்
கல்கிசை

## சமகாலத்தின் தனித்துவம்

சமகாலத்தில் ஆக்கபூர்வமான படைப்புகளுடன் வெளிவந்து கொண்டிருக்கிறது சமகாலம். எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் வெளியீடாக மிகச் சில பதிப்புகளே வெளிவந்திருந்தாலும் அதன் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் மிகவும் பயனுறுதியுடையனவாக இருக்கின்றன. இலங்கையில் இவ்வாறானதொரு தகவல் பரம்பலுடன் வெளிவரும் தமிழ்ச்செய்தி அரசியல் சஞ்சிகையாக சமகாலம் தான் இருக்க முடியும்.

அரசியல், சினிமா, விளையாட்டு, அறிவியல் என எந்தத் துறை பற்றிய விடயமாக இருந்தாலும் அது வெறுமனே தகவலாக மட்டுமல்லாது கைதேர்ந்த படைப்பாளிகளின் ஆராய்ச்சிப் பார்வையுடன் இதன் ஆக்கங்கள் அமைந்திருப்பது சமகாலத்தின் சிறப்பம்சமாகும். தொடர்ந்தும் சிறந்த படைப்புகளைத் தரா சமகாலத்துக்கு எமது வாழ்த்துக்கள்.

கோ.தர்மசிலன்
கொழும்பு. 14

## வாசகர் கடிதங்கள்

## சிந்தனையில் திருப்புமுனை

அண்மைக்காலமாக சமகாலம் என்னும் மாதம் இருமுறை வெளியாகும் சஞ்சிகை இளம் சமூகத்தினரிடையே பிரபலமடைந்து வருகின்றது.

அண்மைக்கால அரசியல் நிலைமைகளை சகல மட்டத்தினரும்,ஆர்வத்துடன் அறிந்து கொள்ளும் வகையில் இதில் கட்டுரைகள் பிரசுரமாகின்றமை வரவேற்கத்தக்கதாகும். தொடர்ந்தும் எவ்வித பக்கச்சார்பும் இல்லாது, ஒவ்வொரு இனத்தின் தனித்துவமான வளர்ச்சிக்கு உறுதுணையாக ஆக்கங்கள் வெளியாக வேண்டும்.

அதேவேளை இளம் சமூகமே நாளைய தலைவர்கள். எனவே,அவர்கள் சார்ந்து எழும் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமளித்து அச்சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவவேண்டும். அத்துடன் பெண்களின் வளர்ச்சிக்குச் சான்றாக என்றும் சமகாலம் என்னும் பெயருக்கேற்பதாகவும் இருக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வழிகாட்டுவதாக தொடர்ந்தும் வரவேண்டும் சமகாலம்.

எஸ்.தேவராஜா
யாழ்நகர்




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 05

**2012, செப்டெம்பர் 01 - 15**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு–14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ–மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்கள்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்.....

நான் ஒரு தமிழன். ஆனால், கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களுக்கு சேவை செய்வதில் இருந்து நான் ஒருபோதுமே ஒதுங்கியிருந்ததில்லை. கிழக்கு முஸ்லிம்களின் நல்வாழ்வில் நிறையவே அக்கறை கொண்டவன். முஸ்லிம்களின் தேவைகளை முழுமனதுடன் நான் நிறைவேற்றியிருக்கிறேன். முஸ்லிம் முதலமைச்சர் இல்லை என்ற குறையை அவர்கள் உணராத அளவுக்கு நான் திருப்திகரமான சேவையைச் செய்திருக்கிறேன்.



**சிவனேசதுரை சந்திரகாந்தன்**
கிழக்கு மாகாண முதலமைச்சர்

கோவில் மதகுருமார் எனக்கு எதிராக தேங்காய்களை உடைத்து, சபித்து மந்திரங்களையும் உச்சரிக்கிறார்கள். ஆனால், அவை என்னைப் பாதிக்கப்போவதில்லை. முன்னேஸ்வரம் காளி கோவிலுக்கு நான் 40 வருடங்களாக சென்று வழிபட்டுவருகின்றேன். எனக்குத் தெரிந்த வரையில் நான் வழிபடுகின்ற காளி மிருக பலியை ஒருபோதுமே ஆதரிக்கப்போவதில்லை. நான் செய்கின்ற காரியங்களுக்கு காளியின் ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. நான் உயிருடன் இருக்கும் வரை, இந்த நாட்டில் எவருமே தங்களுடைய தவறான நிகழ்ச்சி நிரலின்படி செயற்பட அனுமதிக்கமாட்டேன், எதிர்காலத்தில் நான் சந்நியாசி வாழ்க்கைக்குள் பிரவேசிக்கக்கூடும். ஆனால், எனது உடலின் சகல அவயவங்களும் உகந்தமுறையில் இயங்கும்வரை நான் சந்நியாசம் பூணமாட்டேன்.



**மேர்வின் சில்வா**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணத்தில் தமிழ் முதலமைச்சர் ஒருவர் வரவேண்டுமென்று பிரசாரம் செய்கிறது. முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் வரவேண்டுமென்று பிரசாரம் செய்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள முதலமைச்சர் வேண்டும் என்று பிரசாரம் செய்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாத்திரமே கிழக்குமாகாண மக்களுக்கு ஏற்புடைய, அபிவிருத்தியை முன்னெடுக்கக்கூடிய ஒரு முதலமைச்சர் வேண்டும் என்று பிரசாரம் செய்கிறது.



**அமைச்சர் டலஸ் அழகப்பெரும**
அமைச்சர் - இளைஞர் விவகார ஆற்றல் மேம்பாட்டு

இன்றைய நவீன தொழில் நுட்ப முன்னேற்ற யுகத்தில் இலங்கையில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் வறுமையில் வாட அனுமதிக்கக் கூடாது. கேகாலையில் உள்ள இறப்பர் தோட்டமொன்றுக்கு நான் சென்ற போது தோட்டத் தொழிலாளர்களின் படு மோசமான வாழ்க்கை முறையை நேரில் பார்க்கக் கூடியதாக இருந்தது. ஒரு தனியறைக்குள் பத்துப்பேரைக் கொண்ட குடும்பம் அடைந்து கிடக்கிறது. பத்துக் குடும்பங்கள் ஒரு மலசல கூடத்தைப் பயன்படுத்துகின்றன. 21ஆம் நூற்றாண்டில் இத்தகையதொரு மோசமான வறுமை நிலையில் தோட்டத் தொழிலாளர்களை விடவேண்டிய தேவையில்லை.

**ஜெரோம் வைற்**
அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சி உறுப்பினர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களின்போது ஈழத்தைப் பற்றித் தெரிவித்துவரும் கருத்துகள் தமிழ் மக்கள் மத்தியில் அவர்களுக்கு இருக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச ஆதரவையும் இல்லாமற் செய்து விடப் போகிறது.



**வாசுதேவ நாணயக்கார**
தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு

மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு வரவேண்டும் என்ற அரசியலமைப்பு ஏற்பாட்டின் விளைவாக, அவர் வருகின்ற தினத்திலாவது பாராளுமன்றத்தில் தங்கள் பிரசன்னத்தை உறுதிப் படுத்த வேண்டுமென்ற அக்கறை எம்.பி.க்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.



**சமல் ராஜபக்ஷ**
சபாநாயகர்

இருவாரங்களாக பாரதிய ஜனதா கட்சி எம்.பி.க்கள் பாராளுமன்றக் கூட்டங்களைக் குழப்பியடித்துக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த பொதுத்தேர்தல்வரை நாம் இந்தியாவை ஆட்சிசெய்வதற்கு அவர்கள் அனுமதிக்கவேண்டும். ஐந்து வருட பதவிக்காலத்துக்கு நாட்டை ஆட்சி செய்வதற்கே எம்மை மக்கள் தெரிவுசெய்திருக்கிறார்கள். மக்களின் தீர்ப்பை மதித்து பாரதிய ஜனதா கட்சி பாராளுமன்றத்தை இயங்க அனுமதிக்கும் என்று நம்புகிறேன்.



**மன்மோகன்சிங்**
இந்தியப் பிரதமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 மாதங்களில் 21,500 வீதிவிபத்துகள்



இலங்கையில் 2012 முதல் 7 மாதங்களிலும் 21,506 வீதி விபத்துகள் இடம்பெற்றிருப்பதாகவும் இவற்றில் 1363 பேர் பலியானதாகவும் வாகனப்போக்குவரத்து நிருவாகம், மற்றும் வீதிப்பாதுகாப்புப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் கே.அரசரத்தினம் சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

பெரும்பான்மையான விபத்துகளுக்கு மனிதத் தவறுகளே காரணமாக இருந்ததாகக் கூறியிருக்கும் அவர், வீதிப்போக்குவரத்துச் சட்டங்களை உறுதியாகப் பின்பற்றியிருந்தால் இவ்விபத்துகளைத் தவிர்த்திருக்க முடியும் என்றும் மக்கள் மத்தியில் வீதிவிபத்துகளினால் மனிதவாழ்வுக்கு ஏற்படுகின்ற பேராபத்துகளைப் பற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கவனக்குறைவும் மதுபோதையில் தாறுமாறாக வாகனத்தைச் செலுத்துவதுமே விபத்துகளுக்கு பிரதான காரணங்களாக இருக்கின்றன. வாகனத்தை ஓட்டும்போதும் வீதிகளைக் குறுக்காகக் கடந்து செல்லும்போதும் கைத்தொலைபேசிகளில் பேசிக்கொண்டு செல்வதும் விபத்துகளுக்கான அடுத்த பிரதான காரணமாகின்றது.

வீதிவிபத்துகளைத் தடுப்பது எவ்வாறு என்பது குறித்து போக்குவரத்துப் பொலிஸார்பெருவாரியானசெயற்திட்டங்களை நடத்துகிறார்கள். 24 மணி நேரமும் வீதிப்பாதுகாப்புச் சேவையில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் அரசரத்தினம் கூறினார்.

பொலிஸ் அறிக்கைகளின் பிரகாரம் இவ்வருடத்தின் முதல் 7 மாதங்களிலும் பாதசாரிகளுக்கும் பயணிகளுக்கும் படுமோசமான காயங்களை ஏற்படுத்திய 2565 வீதிவிபத்துகளும் சிறுகாயங்களை ஏற்படுத்திய 7540 வீதிவிபத்துகளும் இடம்பெற்றிருக்கும் அதே வேளை, உடைமைகளுக்குச் சேதத்தை ஏற்படுத்திய 10,039 விபத்துகள் இடம்பெற்றிருந்தன.

இவ்வருடத்தின் முதல் அரைப்பகுதியில் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறியவர்களிடமிருந்து பொலிஸார் தண்டப்பணமாக 100 கோடி 82 இலட்சத்து 95 ஆயிரத்து 283 ரூபாவை சேகரித்திருக்கிறார்கள் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அரசரத்தினம் கூறியிருக்கிறார்.



# அரசியலில் அணுவிஞ்ஞானி

உலகப்புகழ் பெற்ற முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் கப்டன் இம்ரான் கான் தோல்வி கண்ட விவகாரத்தில் தன்னால் சாதித்துக்காட்ட முடியுமென்ற நம்பிக்கையில் இறங்கியிருக்கிறார் அந்நாட்டு அணுவிஞ்ஞானி அப்துல் கதீர்கான்.

பாகிஸ்தான் அணுகுண்டின் தந்தையென்று போற்றப்படுகின்ற 76 வயதான கதீர்கான், ஈரான், வடகொரியா, லிபியா ஆகிய நாடுகளுக்கு அணு இரகசியங்களை விற்றதாக 2004 ஆம் ஆண்டில் ஒத்துக்கொண்டார். அவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்ட போதிலும் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்பின் அரசாங்கம் வீட்டுக்காவலில் வைத்தது.

2009ஆம் ஆண்டில் கதீர்கான் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டபோதிலும் இன்னமும் கூட, அவரின் நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது.

தங்கள் நாட்டின் அணுத்திட்டங்களுக்கு எதிரான சர்வதேச சதித் திட்டமொன்றின் விளைவாகவே கதீர்கான் அவமதிப்புக்குள்ளாக வேண்டியிருந்தது என்றே பெரும்பாலான பாகிஸ்தானியர்கள் நம்புகிறார்கள்.

சில தினங்களுக்கு முன்னர் தெஹ்பீக்-ஈ- தஹாபுல் (பாகிஸ்தானைப் பாதுகாப்பதற்கான இயக்கம்) என்ற இயக்கத்தை ஆரம்பித்த அணுவிஞ்ஞானி ராய்ட்டர்ஸ் செய்தியாளருக்கு அளித்த பேட்டியொன்றில், தங்கள் அரசியல் தலைவர்கள் மீது கடுமையான அதிருப்தியுற்றிருக்கும் பாகிஸ்தானிய மக்களுக்கு உதவுவதற்காக மாறுதல்களைக் கொண்டுவரக் கூடிய மார்க்கத்தில் அரசியலில் ஈடுபட விரும்புவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

கதீர்கானின் இயக்கத்துக்கு பாகிஸ்தானின் வர்த்தகத் தலைநகரம் என்று வர்ணிக்கப்படும் கராச்சியில் வர்த்தகர்கள் மத்தியில் ஆதரவு பெருகிவருவதாகக் கூறப்படுகிறது.

தனது இயக்கம் மக்களின் ஆதரவைப் பெறத்தொடங்கியதும் அதை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யவிருப்பதாகக் கூறியிருக்கும் கதீர்கான், 1974ஆம் ஆண்டில் இந்தியா அணு வெடிப்பு பரிசோதனையை வெற்றிகரமாகச் செய்ததையடுத்து பதிலுக்கு பாகிஸ்தானும் அவ்வாறு செய்வதற்கு தனது உதவி தேவைப்பட்டது போன்று தற்போதும் தனது உதவி பாகிஸ்தானுக்குத் தேவைப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசுர முன்அனுமதி நடைமுறை ரத்து



மியன்மார் அரசாங்கம் அரசியல் சீர்திருத்தங்களைத் தீவிரப்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஒரு வருடத்திற்கு முன்னர் எவருமே நினைத்துப்பார்த்திருக்க முடியாத மாறுதல்கள் இப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

எந்தவொரு செய்தியையும் கட்டுரையையும் பத்திரிகைகள் பிரசுரிக்க வேண்டுமானால், பத்திரிகை கண்காணிப்பு மற்றும் பதிவுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்து முன் அனுமதியைப் பெறவேண்டுமென்ற நடைமுறை கடந்த 5 தசாப்தங்களாக மியன்மாரில் இருந்துவந்தது. இந்த நடைமுறை கடந்தவாரம் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஊடகங்கள் தொடர்பான சட்டவிதிகளை தற்போதைய நிலைவரங்களுக்குப் பொருத்தமான முறையில் மாற்றியமைக்கும் திட்டத்தின் ஒரு அங்கமாகவே பிரசுர முன் அனுமதி நடைமுறை விலக்கிக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து ஜனாதிபதி தீய்ன்சீனின் அரசாங்கம் ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாக முன்னெடுத்துவரும் அரசியல் சீர்திருத்தங்களுக்கு வெளியுலகில் நம்பகத்தன்மை பெருமளவில் கிடைக்க ஆரம்பித்திருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

# குஜராத்தியர்கள் சைவ சாப்பாட்டுக்காரரா?



இந்தியாவின் குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடி அடுத்த பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அண்மைக்காலமாக செய்திகள் அடிபடுகின்றன அல்லவா?

தனது மாநிலத்தில் மக்கள் மத்தியில் நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாடு பற்றி பொறுப்பற்ற முறையில் கருத்துத் தெரிவித்தமைக்காக அவர் மீது கடுமையான கண்டன விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அமெரிக்காவின் வோல் ஸ்பீட் ஜேர்னல் பத்திரிகைக்கு சிலதினங்களுக்கு முன்னர் பேட்டியொன்றை அளித்த நரேந்திர மோடியிடம், அவரது மாநிலத்தில் தொடர்ந்து உயர்வீதத்தில் ஊட்டச் சத்துக் குறைபாடு நிலவுவது பற்றிக் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் குஜராத் பெருமளவுக்கு புலால் உண்ணாதவர்களைக் கொண்டமாநிலம். அத்துடன் அது மத்தியதர வர்க்கத்தவர்களையும் பெருமளவில் கொண்ட மாநிலம். மத்தியதர வர்க்கத்தவர்கள் ஆரோக்கியத்தைவிட அழகில் அக்கறை கொண்டவர்கள். இது ஒரு பெரிய சவாலாக இருக்கிறது. ஒரு தாயார் மகளைப் பால் குடிக்குமாறு கேட்டால், அவர்களுக்கிடையே தகராறு ஏற்படுகிறது. பால் குடித்தால் உடலில் கொழுப்பு அதிகமாகும். அதனால் தன்னால் பால் குடிக்க முடியாது என்று மகள் கூறுவாள் என்று குறிப்பிட்டிருந்தார்.

குஜராத்தில் காணப்படும் ஊட்டச் சத்துக்குறைபாடு அந்த மாநில மக்களின் வாழ்க்கை முறையுடன் தொடர்புடையது என்பதை அறிந்துகொள்வதற்கு செய்யப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தான் மோடி இவ்வாறு கூறுகிறாரா என்ற கேள்வியை ஊடகங்கள் கிளப்பியிருக்கின்றன.

இந்தியாவின் முக்கியமான தேசிய நாளிதழ்கள் மோடியைக் கண்டித்து ஆசிரிய தலையங்கங்களைத் தீட்டியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆள்வீத வருமானத்தை உயர்வாகக் கொண்ட இந்திய மாநிலங்களில் ஊட்டச் சத்துக் குறைபாட்டினால் கூடுதலான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருப்பது குஜராத்தே என்று 2011 மனித அபிவிருத்தி அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அபிவிருத்தி குன்றிய மாநிலங்களான ஒரிசா, உத்தரப் பிரதேசம், மேற்குவங்காளம் ஆகியவற்றையும் விட குஜராத்தில் ஊட்டச்சத்து குறைபாடு கூடுதலானதாக இருக்கிறது.

குஜராத்தில் 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் மத்தியிலான ஊட்டச்சத்துக் குறைபாட்டு வீதம் 44.6 ஆகவும், 41 சத வீதத்தினர் எடை குறைவானவர்களாகவும், 55 சதவீதமான பெண்கள் இரத்தச் சோகையினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்று மனித அபிவிருத்தி அறிக்கை கூறுகிறது.

நிலைமை இவ்வாறிருக்கும்போது, உண்மை நிலைமையைப் பற்றிய பிரக்ஞை எதுவுமேயில்லாமல் பொறுப்பற்ற முறையில் மோடி பேசியது மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுட்காலச் சிறை....?



நோர்வேயின் அண்மைக்காலச் சரித்திரத்தில் மிகவும் இருண்டதொரு அத்தியாயம் முடிவுக்கு வந்திருக்கிறது.

2011 ஜுலை 22 தலைநகர் ஒஸ்லோவில் குண்டை வெடிக்க வைத்ததுடன், அண்மையில் உள்ள உடோயா தீவில் கோடைகால முகாமில் 77 பேரைச் சுட்டுக்கொன்ற 33 வயதான அன்டெரஸ் பிரிவீக்கிற்கு ஒஸ்லோ நீதிமன்றம் 21 வருடச் சிறைத்தண்டனை வழங்கி இரு வாரங்களுக்கு முன்னர் தீர்ப்பளித்தது.

பிரிவீக் புத்திசுவாதீனமுடைய நிலையிலேயே இப்படுகொலைகளைச் செய்ததாகவும், நீதிபதிகள் தீர்ப்பில் தெரிவித்திருக்கிறார்கள். அவனுக்கு தாங்கள் விரும்பிய தீர்ப்பே கிடைத்திருப்பதாக பெரும்பாலான நோர்வேஜியர்கள் கூறுகிறார்கள்.


தீர்ப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் நீதிமன்றத்தின் அதிகாரத்தைத் தான் அங்கீகரிக்கப் போவதில்லையென்றும் அதே வேளை. தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதில்லை, ஏனென்றால், அது கூட நீதிமன்றத்தை ஏற்றுக்கொண்டதாகப் போய்விடுமென்று பிரிவீக் மன்றில் கூறினார்.

முழுஉலகினதும் கவனத்தை ஈர்த்த இத்தகையதொரு பரபரப்பான வழக்கொன்று பலதசாப்தங்களில் முன்னென்றும் நோர்வேயில் நடைபெற்றதில்லை. இவ்வழக்கு பல்கலாசாரவாதம் (Multi culturalism) தொடர்பில் தீவிரமான வாதப்பிரதிவாதங்களையும் மூளைவைத்திருந்தது.

பிரிவீக்கின் அட்டகாசத்தில் உயிர் தப்பியவர்களும் பலியானவர்களின் உறவினர்களும்நீதிமன்றத்தீர்ப்பைவரவேற்றிருக்கிறார்கள். 13 மாதங்களுக்குப் பிறகு தங்களால் வாழ்க்கையைத் தொடருவது குறித்து சிந்திக்கக் கூடியதாக இருக்கிறது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் 10-20 வயதுக்கிடைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிகபட்சத் தண்டனையாக பிரிவீக்கிற்கு 21 வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், முன்னெச்சரிக்கை தடுப்புக்காவல் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அவன் சமுதாயத்துக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்குவதாக மேற்கொண்டும்கருதப்படுவானேயன்று சிறைத் தண்டனையை 21 வருடங்களுக்கு அப்பாலும் நீடிக்க முடியும். அதனால், பிரிவீக் விடுதலைப் பாதைக்கான வாய்ப்புகள் இல்லை என்றே தோன்றுகிறது.

அவன் தனது வாழ்நாளைச் சிறையிலேயே கழிக்கப்போகிறான் என்றே கூறவேண்டியிருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தினர் பக்கம்

## வடமாகாணசபைத் தேர்தலும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவும்

சுமணசிறி லியனகே



தற்போதைய அரசியலமைப்பு வரையறையின் கீழ் வட மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் விரும்புவதாக இல்லை என்பதே எனது சந்தேகம்

வடமாகாணசபைத்தேர்தலை 2013 செப்டெம்பரில் நடத்த விரும்புவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இந்தியாவின் பிரபல தேசிய ஆங்கிலத் தினசரிகளில் ஒன்றான சென்னை இந்துவுக்கு அளித்த பேட்டியிலும் ஜனாதிபதி ராஜபக்ஷ இதை ஒருதடவை தெரிவித்திருந்தார். திட்டமிட்டமுறையில் இந்தத் தேர்தல்களை நடத்துவதை நோக்கி செயற்பட்டுக் கொண்டிருப்பதாக அவர் கூறியிருந்தார். ஜனாதிபதி ராஜபக்ஷவைப் பொறுத்தவரை எந்த மட்டத்திலான தேர்தல்கள் என்றாலும் அவற்றை அடிக்கடிநடத்துவதில் மிகவும் விருப்பம் கொண்ட ஒருவர். தற்போதுகூட கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இன்னும் சில தினங்களில் நடைபெறவிருக்கின்றன. ஆனால் வடமாகாணசபைத் தேர்தலை மாத்திரம் நடத்துவதில் அரசாங்கத்துக்கு ஒரு தயக்கம். உள்நாட்டுப் போர் முடிவிற்கு வந்து மூன்று வருடங்களுக்கும் கூடுதலான காலம் கடந்து விட்ட போதிலும் பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறி வடமாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் தாமதித்து வந்திருக்கிறது.

போரினால் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தில் வழமை நிலையை ஏற்படுத்துவதை நோக்கி முன்னெடுக்கப்படவேண்டிய செயல் முறைகளில் பிர -தானமானவற்றில் ஒன்று ஜனநாயக ரீதியான தேர்தல்களைநடத்துவதாகவே இருக்கமுடியும். அதற்கான சூழ்நிலைகள் கனியாதபட்சத்திலும் கூட அவ்வாறு செய் வதே உகந்த அணுகுமுறையாக இருக்கும் என்று கருதப்படுகிறது. கிழக்குமாகாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆட்சேபனைக்கு மத்தியிலும்கூட போர் முற்றுமுழுதாக முடிவிற்கு கொண்டுவரப்படுவதற்கு முன்னதாகவே 2008 மேயில் ஜனாதிபதி ராஜபக்ஷ தேர்தல்களை நடத்துவதற்கு தயக்கம் காட்டவில்லை. அந்தத் தேர்தலை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பகிஷ்கரித்தது சகலருக்கும் தெரியும். மக்களினால் ஜனநாயகரீதியாக தெரிவுசெய்யப்பட்ட கிழக்குமாகாணசபையின் செயற்பாடுகளை சீர்குலைப்பதற்கு ஆளுநர் அரசியலமைப்பு ரீதியான தந்திரோபாயங்களை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்தார் என்பதையும் நாம் அறிவோம்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் அரசாங்கப் படைகள் வெற்றி கண்டு மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்த நிலையிலும் கூட வடக்கில் தேர்தல்களை நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது என்றே 2013 செப்டெம்பரில் வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசித்து இருப்பதாக அரசாங்கம் விடுத்த அறிவிப்பை அர்த்தப்படுத்தவேண்டியிருக்கிறது. இது பல கேள்விகளைக் கிளப்புகிறது. தேர்தல்களை நடத்துவதற்கு முன்பதாக பல பிரச்சினைக ளுக்கு தீர்வைக் காண வேண்டியிருக்கிறது என்று ஜனாதிபதி ராஜபக்ஷ கூறுகிறார். தேர்தலை தாமதிப்பதற்கு அவர் முன்வைத்திருக்கும் இரு காரணங்கள்;

1. ''முக்கியமான பிரச்சினை தேர்தல் இடாப்பு சம்பந்தப்பட்டது விடுதலைப்புலிகள்ஆதிக்கம்செலுத்திய வேளையிலும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்திலும் வடபகுதியிலிருந்து வெளியேறிய மக்கள் 2009 மேயில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தங்களது நிலத்துக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமைகளுக்கும் உரிமைகோரி திரும்பிவந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மக்களின் பெயர்களும் தேர்தல் இடாப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். வடபகுதியைப்பொறுத்தவரை இறுதித் தேர்தல் இடாப்பு 30 வருடங்களுக்கும் கூடுதலான காலம் பழைமை வாய்ந்தது. அந்த மாகாணத்தில் தற்போது வாக்களிக்கத் தகுதியுடையவர்களுக்கும் அந்த இடாப்புக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.''

2. ''இரண்டாவது பிரச்சினைபுனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வுச் செயல்முறைகளின் பூர்த்தியுடன் சம்பந்தப்பட்டது. சர்வதேசத்தின் உதவியுடன் இந்தச் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விரைவில் அவை பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மக்களின் வாழ்வாதாரப்பிரச்சினைகளும் கவனிக்கப்படவேண்டியவையாக இருக்கின்றன.''

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட இக்காரணங்கள் நம்பகத்தன்மை வாய்ந்தவையாக இல்லை. அதற்கு தெளிவான காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, போரின் முடிவிற்குப் பிறகு 2010 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலும்,ஏப்ரலில் பாராளுமன்றத்தேர்தலும் நடத்தப்பட்டன. அதுமாத்திரமல்லாமல் முப்பது வருடங்களுக்கும்அதிகமானகாலம்பழைமை வாய்ந்தது என்று கூறப்படுகின்ற அதே இடாப்பைப் பயன்படுத்தி உள்ளூராட்சித் தேர்தல்களும் வடக்கில் நடத்தப்பட்டன. வடமாகாணத்தின் உண்மையான நிலைவரத்தை பிரதிபலிக்கக்கூடிய புத்தம்புதிய தேர்தல் இடாப்பை பயன்படுத்தியே அந்த மாகாணசபைக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்று கூறுவதன் மூலம் ஜனாதிபதியும் அரசாங்கமும் வடக்கில் மக்கள்ஏற்கனவேவாக்களித்தமேற்கூறப்பட்ட சகல தேர்தல்களையும்விட மாகாணசபைத்தேர்தல் உயர்வானதே என்று அவர்கள் நினைக்கிறார்களா?

இரண்டாவது, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் ஜனாதிபதியின் கருத்துகள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. அந்தக்கருத்துகள் அவரின் ஒற்றையாட்சிவாத மனநிலையைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இத்தகைய மனநிலையே சமாதானம், நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருங்கிணைப்புக்கு தெளிவாகப்பார்க்கக்கூடிய முட்டுக்கட்டையாக விளங்கி வருகின்றன. புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வுடன் தொடர்புடைய பிரச்சினை காரணமாகவே மக்களால் தெரிவுசெய்யப்படவேண்டிய மாகாணசபையின் அவசியம் எழுகிறது. கடந்த மூன்றுவருடகால அனுபவங்கள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் நிர்வகிக்கப்படுகின்ற திட்டங்களில் உள்ளார்ந்தமாக இருக்கக்கூடியபிழைகளைத் தெளிவாக வெளிக்காட்டுகின்றது.

மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே அவற்றைக் கலைத்து தேர்தல்களை நடத்துகின்ற அதேவேளை, வடமாகாண சபைத்தேர்தலைதொடர்ந்துபிற்போட்டுக் கொண்டுவருவது இயல்பாகவே சந்தேகங்களைக் கிளப்புகிறது. தமிழ்நாட்டின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதிகூட அண்மையில் அடுத்த வருடத்திற்கு வடமாகாண சபைத் தேர்தலை பிற்போடுகின்ற இலங்கை அரசாங்கத்தின் செயல் அந்தரங்க அர்த்தங்களைக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

தேசிய இனப்பிரச்சினை மற்றும் ஜனநாயக, மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இலங்கை அரசாங்கத்தின் கடந்த மூன்றுவருடகால செயற்பாடுகள் அதன் உறுதிமொழிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்கள்கிளம்புவதற்குவழிவகுக்கிறது. இலங்கையில் வாழுகின்ற சிறிய தேசிய இனங்களின் கோரிக்கைகளையும் அபிலாஷைகளையும் கூடுதலான அளவிற்கு அனுசரிக்கக் கூடியதாக அரச கட்டமைப்பை மாற்றுவதற்கு அரசியலமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று அரசாங்க அமைச்சர்கள் உறுதியளித்தார்கள். இந்திய அரசாங்கத்தையும் மேற்குலக நாடுகளையும் ஏமாற்றுவதற்கு 13+ அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலான யோசனையை அரசாங்கம் இதுவரை பயன்படுத்தி வந்திருக்கிறது. 13+ என்பதில் அர்த்தம் என்ன? இந்துவுக்கு அளித்த பேட்டியில் முதற்தடவையாக ஜனாதிபதி இதுபற்றி விளக்கமளித்திருக்கிறார். ''ஒரு செனற்சபையை உருவாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவதே 13+ ஆகும். இந்திய தேசிய பாதுகாப்புஆலோசகர்சிவ்சங்கர்மேனன் என்னுடன் கலந்துரையாடும்போது 13+ என்பதன் ஒரு செனற்சபையை உருவாக்குவதா என்று அவர் என்னிடம் கேட்டார். நான் ஆம் என்றேன்'' என்று ஜனாதிபதி ராஜபக்ஷ கூறியிருந்தார். அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களில் எந்தவொரு குறைப்புமே செய்யப்படாதபட்சத்தில் மாத்திரமே செனற் சபை உருவாக்கமானது 13+ ஆக இருக்க முடியும் என்பதை இங்கு வலியுறுத்தவேண்டியிருக்கிறது. இதுபற்றி இங்கு விரிவாக ஆராய இடம்போதாது.

ஜனாதிபதியின் மனதில் உண்மையில் இருப்பது என்ன என்பதை இந்துவே விளக்கிக்கூறியிருக்கிறது; ''செனற்சபை உருவாக்கமும் இனப்பிரச்சினைக்கு காணப்படவேண்டியிருக்கும் அரசியல் தீர்வும் பாராளுமன்றத்தின் ஊடாகவே வரவேண்டும். இங்குதான் பாராளுமன்றத் தெரிவுக்குழு முக்கியமானதாகிறது என்று ராஜபக்ஷ கூறியிருக்கிறார்''. பாராளுமன்ற தெரிவுக்குழு அதன் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களுக்கும் ஏற்புடையதான தீர்வொன்றை வகுக்காத பட்சத்தில் வடமாகாணசபைக்கான தேர்தல் நடத்தப்படப்போவதில்லை என்பதே ஜனாதிபதியின் மேற்படி கூற்றின் உள்ளார்ந்த அர்த்தமாகும். இதுவரையில் எதிர்க்கட்சிகள் தங்களது சார்பிலான உறுப்பினர்களை தெரிவுக்குழுவிற்கு நியமிக்கவில்லை. தெரிவுக்குழுவில் பங்கேற்கப்போவதில்லை என்று ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தீர்மானித்திருக்கின்ற அதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதே நிலைப்பாட்டை வேறுபட்ட காரணங்களுக்காக எடுத்திருக்கிறது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் விதப்புரைகள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படும்வரை வடமாகாண சபைத்தேர்தலை அரசாங்கம் நடத்தப்போவதில்லை என்ற எனது அனுமானம் சரியானதாக இருக்குமானால், 13ஆவது திருத்தத்தில் உள்ளடங்கியிருக்கும் மாகாணங்களுக்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை கந்தல் கந்தலாக்கி அந்தத் திருத்தத்தை மேலும் பலவீனப்படுத்தக்கூடிய ஒரு அரசியலமைப்புத் திருத்த யோசனையை தெரிவுக்குழு முன்வைக்கக்கூடிய ஒரு சாத்தியக்கூறு இருக்கிறது. அதே போன்றே செனற் பற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தற்போதைய யோசனையும் பிற்போக்கானதாகவே இருக்கிறது. எனவே, 13ஆவது திருத்தம் (தற்போது இருக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் + காணி அதிகாரங்கள்) < 13ஆவது திருத்தம் என்பதே இறுதி விளைவாக வந்து சேரக்கூடும்.

எனவே தற்போதைய அரசியலமைப்பு வரையறையின் கீழ் வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்றும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை செயலிழக்கச் செய்யக்கூடிய புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழ் அத்தேர்தலை நடத்தவிரும்பும் என்றும் நான் ஐயுறுகிறேன். வேறுவார்த்தைகளில் சொல்வதானால் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளுக்கு பரவலாக்கம் செய்யப்பட்டுள்ள அதிகாரங்களுடனான ஒரு வடமாகாண சபையை முன்னைய அரசாங்கங்களைப் போன்றே ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கமும் விரும்புவதாக இல்லை. இது 17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை வலுவிழக்கச் செய்து 18ஆவது திருத்தத்தை கொண்டு வந்ததை ஒத்த ஒரு செயலாகவே பெரும்பாலும் அமையும். எனவே நான் முன்னர் பல தடவைகள் வாதிட்டதைப் போன்று, சிறியதேசியஇனங்களைபிரதிநிதித்துவப் படுத்துகின்ற அரசியல் கட்சிகளும் பாராளுமன்றத்தில் இருக்கின்ற இடதுசாரிகளும் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் மீது உன்னிப்பாக கவனத்தைச் செலுத்தி விழிப்புடன் இருக்காதபட்சத்தில் உத்தேச தெரிவுக்குழு அலுவல்கள் ஒரு பயங்கரமான விளையாட்டாகவே போய்முடியும்.

* பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக வடமாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும்;
* அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தம் முழுமையாக, குறைந்த பட்சம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலாவது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்
* தெரிவுக்குழு அதன் செயற்பாடுகளுக்கான தொடக்க புள்ளியாக மங்கள முனசிங்க அறிக்கையை அல்லது சர்வகட்சி மகாநாட்டு அறிக்கையை பயன்படுத்த வேண்டும்

தேசிய இனப்பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியான தீர்வொன்றைக் காண விரும்புகின்ற கட்சிகளும் குழுக்களும் பின்வரும் முன்னிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் மாத்திரமே பாராளுமன்றத்தின் செயற்பாடுகளில் பங்கேற்கக் கூடியதாக இருக்கும்.

1. பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பதாக வடமாகாணசபைக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
2. அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தம் முழுமையாக குறைந்தபட்சம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலாவது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
3. தெரிவுக்குழு அதன் செயற்பாடுகளுக்கான தொடக்கப் புள்ளியாக மங்கள முனசிங்க அறிக்கையை அல்லது சர்வகட்சிமகாநாட்டு இணக்கப்பாட்டை பயன்படுத்த வேண்டும்.

நேர்மையான கலந்தாலோசனைகளில் முன்னிபந்தனைகள் விதிக்கப்படக் கூடாது என்று வாதிடப்படலாம். ஆனால் மேற்கூறப்பட்ட (1), (2) உண்மையில் முன்னிபந்தனைகளே அல்ல. அவை தற்போது நடைமுறையில் இருக்கின்ற அரசியலமைப்பின் கீழான தேவைகளே. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கெனக் கூறிக்கொண்டு கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட செயல்முறைகள் சகலதுமே கண்ட தோல்வியைப்போன்று இந்த தெரிவுக்குழுவுக்கும் நேராது என்று தங்களது வாக்காளர்களை (சிறிய தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற) அரசியல் கட்சிகள் நம்பவைப்பதற்கு தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக நம்பகத்தன்மையான சில செயற்பாட்டுச்சாதிப்புகள் நிகழ்த்திக்காட்டப்பட வேண்டியது உண்மையில் அவசியமானதேயாகும்.

(சுமணசிறி லியனகே பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான பேராசிரியரும் கொழும்பு, கண்டி மற்றும் நீர்கொழும்பில் இயங்கும் மார்க்ஸ் போதனா நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராவார்) ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய அரசியல்

# இலங்கை–சீன உறவுகள் எங்கே போகின்றன?

இரு நாடுகளின் முட்டுமோதல் சண்டையில் தலையைக் கொடுத்து உயிரை மாய்த்துக்கொண்ட குள்ளநரியின் நிலையில் இலங்கை தன்னை பார்க்க விரும்புமா?

என்.சத்தியமூர்த்தி



சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங்லீ இலங்கை வந்து சென்றதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான இராணுவ மற்றும் பாதுகாப்பு உறவுகள் மேலும் வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம், அந்த உறவு இலங்கைக்கும் அண்டை நாடான இந்தியாவிற்கும் இடையேயான உறவுகளில் எந்தவித தாக்கத்தைஏற்படுத்தும்என்றகேள்வியும் எழுகிறது. அதற்கும் அப்பால் சென்று, மாறி வரும் உலக அரசியல் மற்றும் பாதுகாப்புச்சூழலில், இலங்கை-சீனஉறவுகள் இந்து மகா கடல் பகுதியில் எந்தவித பாதிப்புகளை எழுப்பும் என்று உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன.

இந்து மகா கடல் பகுதியில் இலங்கையின்பூகோளஅமைப்புஅதற்குஇராணுவ உலகத்தில் ஒரு முக்கியத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இரண்டாவது உலகப் போர் காலத்தில், அவ்வாறு தான் இலங்கையை அப்போது ஆண்டு வந்த இங்கிலாந்துஅரசு, கட்டுநாயக்கவிமானத் தளத்தையும் திருகோணமலை துறைமுகப் பகுதியையும் அமைத்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும், இந்த இரண்டு இராணுவத் தளங்களையும் இங்கிலாந்து அரசு தொடர்ந்து தன்வசம் வைத்துக் கொள்வதற்கான உரிமையைக் கேட்டுப் பெற்றுக் கொண்டது. பின்னர் ஆட்சி பொறுப்பேற்ற சொலமன் பண்டாரநாயகா அரசு, தனது உலகளாவிய இடதுசாரி அரசியல் கொள்கை காரணமாக இங்கிலாந்து இராணுவத்தை வெளியேறச் சொன்னது சமகால வரலாறு.

சொலமன் பண்டாரநாயகா காலத்திற்குப் பின்னர் பிரதமராக பதவியேற்ற அவரது மனைவி சிறிமாவோ, இலங்கையை ஒட்டிய இந்து மகா கடல் பிராந்தியத்தை "அமைதிப் பகுதி"யாக உலக நாடுகள் ஏற்றுச் செயல்பட வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினார். அதில் அவர் வெற்றி பெற்றார் என்று சொல்ல முடியாது. ஆனால், அவரது முயற்சிக்கான காரணமே, இந்து மகா கடல் பகுதியில் இலங்கையின் இராணுவ முக்கியத்துவத்தை உணர்த்தியது. அதற்கும் மேலாக, அந்த முக்கியத்துவத்தின் அடிப்படையில் எழும் வல்லரசுகளுக்கு இடையேயான போட்டா-போட்டிகளில் சிக்கிக் கொண்டு இலங்கை காணாமல் போய் விடக்கூடாது என்ற கரிசனமும் இந்த இரு தலைவர்களின் முயற்சிகளிலும் முடிவுகளிலும் தெரிந்தது.



ஆனால், பண்டாரநாயகா தம்பதியினருக்கு பின்னர் வந்த இலங்கை அரசு தலைமை எல்லாம், ஏதோ ஒரு விதத்தில் நாட்டின் இராணுவ முக்கியத்துவத்தை முன்வைத்து, முதல் எடுக்க முயற்சித்தனர். ஏன், ஒரு கட்டத்தில் சிறிமாவோ தலைமையே அவ்வாறாக சிந்திக்கத் தொடங்கியது. அறுபதுகளின் தொடக்கத்தில் இந்தியா–சீன போர் எங்கே இலங்கையை இரு நாடுகளிடையே ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டிய தர்மசங்கடத்திற்கு ஆளாக்கிவிடுமோ என்று சிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவோ தலைமை கவலைப்பட்டது. அதனாலும் கூட, அந்தப் போர் முடிவதற்கான முஸ்தீபுகளை அவரது தலைமையிலான இலங்கை அரசு எடுத்தது.

ஆனால், பத்தாண்டுகளுக்கும் உள்ளாக, 1971-ஆம் ஆண்டு, "வங்கதேச போர்" தோன்றிய போது, இந்தியாவின் கோரிக்கைக்கு எதிராக பாகிஸ்தான் விமானப் படை விமானங்கள் இலங்கையில் தரையிறங்கி, பெற்றோல் நிரப்பிச் செல்ல சிறிமாவோ அரசு சம்மதித்தது. அது, வங்கதேச போர் குறித்த இலங்கை அரசின் கவலைகளைப் பிரதிபலித்தது. தெற்கு ஆசியாவில் மிகப்பெரிய நாடான இந்தியா, அண்டைநாடுகளை கபளீகரம் செய்துவிடுமோ என்ற கவலையில் எழுந்த முடிவு அது.

ஆனால், போருக்குப்பின்னர் உருவான வங்காளதேசம், தனது ஆளுமைக்கும் சர்வதேச உரிமைகளுக்கும் எந்தவித தளர்ச்சியும் ஏற்பட்டு விடாத வகையிலேயே தனது இந்தியா சார்ந்த வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்து வந்துள்ளது. இந்தியாவும் போர் முடிந்த கையோடே, வங்காள தேசத்தில் இருந்து வெறியேறி, புதிய தேசம் தனது போக்கிலேயே செல்வதற்கு வழிவகை செய்தது. இன்னும் சொல்லப் போனால், மாறி-மாறி வரும் வங்காள தேச அரசியல் தலைமையின் அடிப்படையிலேயே, ஐந்து வருடத்திற்கு ஒரு முறை, அந்த நாட்டின் இந்தியாவுடனான உறவுகள் மாறி வந்துள்ளன. அதற்கும் அப்பால் சென்று, எல்லைப் பகுதியை அடையாளம் காணல், நதி நீர்ப் பங்கீடு போன்ற பிரச்சினைகளில், உள்நாட்டு அரசியலுக்கு அப்பால் சென்று வங்காள தேசம் இந்தியாவுடன் தனது நிலைப்பாட்டை வலுவாகவே எடுத்துக்கூறி வந்துள்ளது.

இது ஒரு உதாரணம் தான் என்றாலும், வங்கதேச போருக்குப் பின்னரான இந்தியா குறித்த இலங்கையின் கணிப்பிலும் செயல்பாட்டிலும் மாறுதல்கள் வரத்தான் செய்தன. அது உலக அரங்கில் உச்சக்கட்டத்தில் இருந்த "பனிப் போர்" காலகட்டத்தில் நிகழ்ந்தேறியதும் குறிப்பிடத்தக்கது. ஒரு பக்கத்தில், அமெரிக்கா ஆதரவு நிலை எடுத்த ஜனாதிபதி ஜயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியின் வெளிநாட்டு மற்றும் பாதுகாப்புக் கொள்கை மாற்றங்கள். மறுபக்கத்தில், அதன் பிரதிபலிப்பாகவும் வங்கதேச போரின் பின்னணியிலும் இந்தியா குறித்த இலங்கையின் விசனங்கள்.

இந்த இரண்டும் ஒன்றாகி, இந்தியாவை இலங்கை எதிரி நாடாகவே கருதி அதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கி விட்டது. அந்தக் காலகட்டத்தில் இலங்கை இனப் பிரச்சினை குறித்து இந்தியா கவலைப்பட வேண்டிய சூழல் உருவாகி இருக்கவில்லை. இனப்போர் குறித்து இலங்கை அரசே கூட நினைந்து பார்க்கும் நிலைமை இருக்கவில்லை. அவை அனைத்துமே 1983-ஆம் ஆண்டு இனப்படுகொலைக்குப் பிற்பட்ட சம்பவங்கள். ஆனால், அன்றும் சரி, இன்றும் சரி, இலங்கையில் உள்ள இந்திய எதிர்ப்பாளர்கள் ஒரு விடயத்தை மறந்து போய்விடுகிறார்கள்.

வங்காளதேசம் உருவான மூன்றே ஆண்டுகளுக்குப் பின்னர், 1974-ஆம் ஆண்டு, இந்தியா கச்சதீவுப் பகுதியை இலங்கைக்கு தாரை வார்த்தது. உண்மையிலேயே இந்தியா, இலங்கையைத் துண்டாட வேண்டும் என்றோ, அங்கு உள்நாட்டு குழப்பம் விளைவிக்க வேண்டும் என்றோ நினைத்திருந்தால், இந்தியா அவ்வாறு செய்திருக்காது. மாறாக, அத்தகைய முயற்சிகளுக்கு கச்சதீவு உதவும் என்று கருதி, அந்தப் பகுதியைத் தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கும். ஏன், கச்சதீவு பிரச்சினையே கூட இரு நாட்டு உறவுகளில் விரிசல் ஏற்படுத்தி இருக்கும். மாறாக, இரு நாட்டு உறவுகளுக்கும் எந்தவித சிறு தடங்கல்களும் எற்பட்டு விடக்கூடாது என்று கருதியே இந்தியா, கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்தது என்பதே உண்மை.





### இலங்கையும், இந்திய-சீன உறவுகளும்

சமகாலத்திய இலங்கை-சீன உறவுகள் குறித்துப் பேசும் போது, அதில் இந்தியாவை ஒரு அலகாகக் கருதுவதற்கு காரணம் இருக்கிறது. பனிப் போர் முடிவுற்ற காலம் தொட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அரங்கில் சீனாவின் பொருளாதார வளர்ச்சியும் அது ஏற்படுத்தியுள்ள அலையும் இதற்கு முதல் காரணம். அன்று போல் இன்றும் இந்திய பெருங்கடலும் அதில் இலங்கையும் தொடர்ந்து இராணுவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்துள்ளமை இரண்டாவது காரணம். அதேசமயம், சீனாவைப் போல் இல்லை என்றாலும், பொருளாதார வளர்ச்சியிலும், பாதுகாப்புத் துறையிலும், அவை சார்ந்த ராஜரீக விடயங்களிலும் அண்டை நாடான இந்தியா காட்டிவரும் முன்னேற்றம் மூன்றாவது காரணம். இவை அனைத்தும் உள்ளடக்கிய இந்திய-சீன உறவுகளிடையே தொடர்ந்து வரும் தொய்வு நிலை நான்காவது காரணம்.

இவற்றோடு எல்லாம் சேர்ந்து, இனப்போர் தொடங்கிய காலகட்டத்தில், இலங்கை-இந்திய உறவில் விரிந்த விரிசலை இன்றும் இலங்கையில் சில பாதுகாப்புத் துறை அறிஞர்கள் மறக்க விரும்பாததும் ஒரு புதிய அலகாக மாறியுள்ளது. கடந்த 1983 இனப் படுகொலையைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு இந்தியா இராணுவப் பயிற்சி மற்றும் இராணுவத்தளவாடங்கள் கொடுத்ததும் இலங்கை அரசையும் சிங்களப் பேரினவாதிகளையும் புரட்டிப் போட்டது.

பின்னர், 1987-ஆம் ஆண்டு வடமராட்சியில் இலங்கை இராணுவத் தாக்குதலில் அப்பாவித் தமிழ் மக்களும் அதிக அளவில் பாதிக்கப்பட்ட போது, இந்தியர் "ஆப்பரேஷன் பூமாலை" என்ற மனிதாபிமான இராணுவ முயற்சியை மேற்கொண்ட போது அது இலங்கையின் இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட அறைகூவலாக மட்டுமே சிங்களப் பேரினவாத அரசியல்கட்சிகளும் அரசு தரப்பில் ஒரு சிலரும் கருதினார்கள் என்றாலும், இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பங்கு உறுப்பினர்களைப் பெற்றிருந்த ஜனாதிபதி ஜயவர்த்தன, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை பிரதமர் ராஜீவ் காந்தியுடன் கையெழுத்திட்ட போது, அது இலங்கை அரசின் இறையாண்மைக்கு உட்பட்ட முடிவாகவே நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

இன்று, இனப்போர் முடிந்துள்ள காலகட்டத்தில், பழைய, மறந்து போக வேண்டிய விடயங்களை மனதில் நிறுத்தி, சில சிங்கள அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் அவ்வப்போது தூபம் போடுவது, இறந்து போன உடலுக்கு உயிரூட்டும் முயற்சி மட்டுமே என்றாலும், சீனாவை முன்னிறுத்தி அவர்கள் செய்யவிரும்பும் இராஜதந்திர முயற்சிகள் இந்தியாவை சங்கடத்தில் ஆழ்த்த வேண்டும் என்ற காரணத்தால் மட்டுமே. என்றாலும், அதனையும் கருத்தில் கொண்டே இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் சீனா சம்பந்தப்பட்ட கொள்கைகளை வகுக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

இந்திய-இலங்கை உறவுகளைப் பொறுத்தவரை, பனிப்போர் காலகட்டத்தில் அமெரிக்கா இருந்த இடத்தில் இன்று சீனா இருக்கிறதோ என்ற சந்தேகம் புதுடில்லியில் அரசு ஆள்வோரிடம் உள்ளது. அன்று, இந்தியா, சோவியத் யூனியனின் வளையத்திற்குள் இருந்ததாக மேற்கத்திய நாடுகள் கருதின. அப்படியே இருந்தாலும், அது இலங்கை-இந்திய உறவுகளைப் பாதித்திருக்கக்கூடாது. ஆனால், வங்கதேசப்போர் முடிவை மனதில் வைத்துக் கொண்டு, இந்தியாவிற்கு எதிராக அமெரிக்காவிற்கு பாதுகாப்பு சம்பந்தப்பட்ட வழிகளில் இலங்கை இடம் அளித்தது, அதுவே இந்தியாவை நாடு சந்தேகக் கண்களுடனேயே பார்ப்பதற்கு வழி செய்தது.

திருகோணமலையில் உள்ள பெற்றோலிய எண்ணெய் சேமிப்புக் கிடங்கியை அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு கொடுத்தது, மற்றும் அமெரிக்க அரசின் வானொலி நிலையத்திற்கான அலை பரப்பி என்ற பெயரில் அந்த நாட்டின் சி.ஐ.ஏ உளவு நிறுவனத்திற்கு இந்தியாவை வேவு பார்ப்பதற்கு அனுமதி அளிப்பதற்கான முயற்சி ஆகியவை புதுடில்லியைக் கவலையுற வைத்தது என்னவோ உண்மை. அதனால் தான், பின்னர் ராஜீவ்-ஜயவர்த்தன ஒப்பந்தத்தின் ஷரத்தாக திருகோணமலை சேமிப்புக் கிடங்கிகள் இந்திய அரசு நிறுவனத்திற்கும் அளிக்கப்பட்டது. ஆனால், இந்தக் காரணங்களுக்காக, இந்தியா இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு கொம்பு சீவி விட்டது என்பது தவறு. இந்தத் தவறை திருத்திக் கொள்வதற்கு இலங்கையில் உள்ள ஒரு சிலர் இன்னமும் தயாராக வில்லை என்பதே தற்போதைய சூழ்நிலை உருவாவதற்கான காரணம்.

இந்தப் பின்னணியில் தான், பனிப்போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் உலகளவில், முன்பு சோவியத் யூனியன் இருந்த இடத்தினை சீனா பிடித்தது. குறிப்பாக மேலை நாட்டு பாதுகாப்பு விடயங்கள் குறித்த ஆய்வாளர்கள், சீனாவின் எதிர்காலப் பொருளாதாரம் மற்றும் இராணுவ வளர்ச்சியை சந்தேகக் கண்களுடன் பார்க்கத் துவங்கினார்கள். அறுபதுகளுக்குப் பின் சீனாவுடன் நல்லுறவு இல்லாத இந்தியாவில் அவர்களது அறிவுரைகள் பாதிப்பை ஏற்படுத்தியது எதிர் பார்க்க முடியாத விடயம் அல்ல.

இரு நாடுகளுக்கும் இடையேயான 4,500 கிலோ மீற்றர் எல்லையை முடிவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படாததும் இதற்கு மற்றுமொரு காரணம். அவ்வப்போது, சீனப் படையினர் இந்திய எல்லைக்குள் ஊடுருவல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சீனாவின் மீதான இந்திய அரசின் சந்தேகங்களைக் கூட வலுப்பெறச் செய்துள்ளது. அது போன்றே, திபெத் பிரச்சினையில் தற்போதைய தலாய்லாமாவின் காலத்திற்குப்பின், இந்தியாவின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கும் என்பதும் சீனாவின் கவலை.

இந்தப் பின்னணியில், இலங்கை சீனாவிடம் இருந்து பொருளாதார உதவிகளைப் பெறுவது ஒரு விடயம், சீனாவுடன் இராணுவ உறவுகளை வைத்துக் கொள்வது என்பது பிறிதொரு விடயம் என்ற அளவிலேயே இந்தியா இரு நாட்டு உறவுகளையும் பார்க்கிறது. இன்றைய உலகச் சூழலில் அமெரிக்கா, இந்தியா உட்பட்ட உலகநாடுகளுக்கும் கூட சீனாவே பொருளாதார உறவில் முன்னணி வகிக்கிறது. இலங்கை போன்ற வளரும் நாடுகளுக்கு வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான பெரும் முதலீடுகளை அதிரடியாகச் செய்வதற்கும் சீனாவிற்கு மட்டுமே பண பலம் உள்ளது. இந்த உண்மையை அண்டை நாடான இந்தியாவும் உணர்ந்தே உள்ளது. எனவே தான், அம்பாந்தோட்டைத் துறைமுகம், நுரைச்சோலை அனல்மின் நிலையம் ஆகிய வளர்ச்சிப் பணிகளுக்கு இலங்கை சீனாவின் பொருளாதார உதவியை கேட்டுப் பெற்றுக் கொண்டபோது இந்திய அரசு அது குறித்து வெகுவாக கவலைப்படவில்லை.

இனப்போரின் பல்வேறு கட்டங்களில், இலங்கை அரசுக்குத் தேவையான இராணுவத் தளவாடங்களை இந்தியா அளிக்க முடியாது என்று கூறிய போதெல்லாம், சீனாவும் அதன் நட்பு நாடான பாகிஸ்தானும் அத்தகைய உதவிகளையும் செய்து வந்துள்ளன. அதனையும் இந்தியா அறிந்தே உள்ளது. ஆனால், இனப்போர் முடிந்துவிட்ட காலகட்டத்தில், இலங்கை-சீன இடையேயான இராணுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் மேலும் வலுப்பெறும் என்றால், அதற்கான அவசியம் இலங்கைக்கு இல்லை. மாறாக இந்தப் பிராந்தியத்திலும் உலகளவிலும் வல்லரசாக மாற விரும்பும் சீனாவிற்கு இத்தகைய உறவு தேவையாயுள்ளது.

இது போன்ற உறவுகள் இந்தியப் பெருங்கடலில் அமெரிக்காவிற்கு எதிரான சீனாவின் முஸ்தீபு மட்டுமே என்ற கருத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. இந்திய பெருங்கடலில் அமெரிக்க இராணுவத்தின் அதீதமான நிலை நிறுத்தலை மட்டும் எதிர்கொள்வதற்கான சீனாவின் முயற்சியில் ஒரு பகுதியே அந்த நாட்டுடனான சீனாவின் இராணுவ உறவுகள் என்று இந்தியா வாழாவிருந்து

**இனப்பிரச்சினையை அடிப்படையாக வைத்தே இலங்கை இன்னமும் இந்தியாவை சந்தேகக் கண்ணுடன் பார்த்து வருகிறது. இது இந்தியாவுடனான உறவை மட்டுமல்ல இனப்பிரச்சினை குறித்த இலங்கை அரசின் மனப்போக்கையும் வெகுவாகப் பாதிக்கிறது**



விட முடியாது. அறுபதுகள் கொடுத்த படிப்பினை சீனா குறித்த இந்தியாவின் எண்ணத்தில் கொண்டு வந்த மாற்றங்கள் இன்றும் தொடர்கிறது. சரியோ, தவறோ, எண்பதுகளுக்குப் பின் இந்தியா குறித்த இலங்கையின் எண்ணவோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இன்றும் தொடர்ந்தே வருகிறது.

இலங்கை அரசும் தனது வெளிநாட்டு உறவுக் கொள்கைகளை இனப்பிரச்சினையை மையமாக வைத்தே தொடர்ந்து வருகிறது. ஒரு விதத்தில் இது எதிர்பார்க்கப்பட வேண்டியது தான். ஆனால், இனப்போர் முடிந்த காலகட்டத்தில் இதில் மாற்றம் வந்திருக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கான அரசியல் முடிவு இன்னமும் காணப்படாததால், நிகழ வேண்டிய மாற்றங்கள் இன்னமும் ஏற்படவில்லை. இது குறிப்பாக அண்டைநாடான இந்தியாவுடனான உறவிற்கும் பொருந்தும்.

இனப்பிரச்சினையை அடிப்படையாக வைத்து இலங்கை இன்னமும் இந்தியாவை சந்தேகக் கண்களுடனேயே பார்த்து வருகிறது. இது இந்திய உறவை மட்டுமல்ல, இனப்பிரச்சினை குறித்த இலங்கை அரசின் மனப்போக்கையும் வெகுவாகப் பாதித்துள்ளது. இனப்போர் முடிந்த காலகட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட அரசு தலைவர்கள், இந்தியாவின் உதவி இல்லாமல் இராணுவ வெற்றி சாத்தியமாகியிருக்காது என்பது போன்று பேசி வந்தார்கள்.

ஆனால், கடந்த மார்ச் மாதம், ஜெனீவா ஐ.நா மனித உரிமைகள் குழுமத்தில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்த பின்னர், இலங்கை அரசின் இந்தியா சார்பான கொள்கையில் மாற்றங்களைக் காணமுடிகிறது.

ஆனால் அதுவே முடிந்த மாற்றங்கள் என்று இந்தியா கருதுவதாக அர்த்தம் இல்லை. பல்வேறு நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகள் பல்வேறு கால கட்டங்களில் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வந்துள்ளன. அதே சமயம் சில வற்றில் அந்த மாற்றங்கள் நிரந்தரமாகவே ஆகிவிட்டன. இலங்கையின் அண்மைப் பகுதிகளில் இந்தியா-பாகிஸ்தான் மற்றும் இந்திய-சீனா ஆகியவற்றின் உறவுகளை இந்தவிதத்தில் காணலாம். ஆனால் அந்த உறவுகளோ அல்லது உறவின்மையோ நிரந்தரம் அல்ல. அவ்வப்போது அந்த உறவுகளிலும் மேம்பாடு காணப்படுகிறது.

தற்போது இலங்கை வந்து சென்றுள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சர், இந்தியாவுக்கும் தான் விஜயம் செய்ய விரும்புவதாக சில வாரங்களுக்கு முன்னர் செய்தி வெளியாகியது. அது போன்றே, இரு நாடுகளுக்குமிடையேயான உறவுகளிலும் சில சிறிய முன்னேற்றங்கள் அவ்வப்போது தோன்றி வருகின்றன. சீனாவைப் பொறுத்தவரையில் இந்தியாவை நட்பு நாடாக ஏற்றுக் கொண்டால் மட்டுமே அது ஒரு வல்லரசாக உயர்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும். அத்தகைய நிலைமையை இந்தியாவும் ஓரளவிற்கேனும் வரவேற்கும்.

அவ்வாறாகும் பட்சத்தில் சீனாவிற்காக இந்திய உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்திக்கொள்ள இலங்கை விரும்பும் என்று கருதமுடியாது. மாறாக, பிராந்திய மற்றும் உலகளாவிய வல்லரசுகளின் போட்டா போட்டியில் சிக்கிக் கொள்ள இலங்கையும் விரும்பாது. இரு ஆடுகளின் முட்டு-மோதல் சண்டையில் தலையைக் கொடுத்து உயிரை மாய்த்துக் கொண்ட குள்ளநரியின் நிலையில் இலங்கை தன்னை பார்க்கவிரும்பாது.

இந்தப் பின்னணியில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஏற்பட்டு விட்டால், அதன் பின்னர் இலங்கை-சீன உறவுகளில் இந்தியா என்ற அலகு சீர்பட்டு விடும். அதன் பின்னர் இலங்கை-சீன உறவு பொருளாதார அடிப்படையில் மட்டுமே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

அந்த நாள், எந்த நாளோ? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.எம்.கோபாலரத்தினம்



# அரச பயங்கரவாதத்தின் ஆயுதமாக மாறி விட்ட புலி

முப்பது ஆண்டுகளாக நிலவிய யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் நாட்டின் பாதுகாப்பைகவனத்தில்கொண்டுஇலங்கைப் படையினர் தொடர்ந்தும் விழிப்பாகவே இருக்கவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோதாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என்று ஒரு செய்திப் பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

"நாட்டின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு படையினர் விழிப்பாக இருக்க வேண்டும்" - கோதாபய ராஜபக்ஷ தெரிவிப்பு என்ற தலைப்பில் இச்செய்தி கடந்த மாதம் ஏழாம் திகதி செவ்வாய்க்கிழமை தமிழ்த்தினசரி ஒன்றின் உள்பக்கத்தில் மூன்று கொலத்தில் தலைப்பிட்டு இச்செய்தி வெளிவந்திருந்தது.

இதே செய்தியின் கீழ் - "ஓடிக்கொண்டிருந்த ரயிலில் குடும்பப்பெண் மலசல கூடத்தில் வைத்து பாலியல் வல்லுறவு"- படையினர் நால்வர் கைது என்றொரு செய்தியும் விழிப்பாகத் தெரியும் வகையில் பிரசுரமாகியிருந்தது.

படையினர் "விழிப்பாகத்தானிருக்கிறார்கள்" என்பது தினமும் வெளிவரும் செய்திகளிலிருந்து மக்கள் அறிந்து கொண்டு அவர்கள் விழிப்பாக இருக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் அல்லது அதன் அவசியத்தை உணர்ந்து வருகிறார்கள் என்று கருதலாம்.

ஓடும் ரயிலிலேயே நான்கு படையினர் மலசலகூடம்சென்றகுடும்பப்பெண்ணை பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தினார்களென்றால் ஐந்து பேருக்கல்ல ஐம்பது பேருக்கு ஓர் இராணுவத்தினரே வடக்கில் பணியிலுள்ளனர் என்று "உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்ட" பகுதியிலுள்ள மக்களின் நிலை என்ன?

படையினர் பற்றி இப்பொழுது தான் இதுபோன்ற செய்திவெளி வந்திருப்பதாகச் சொல்ல முடியாது.

பதினாறு வயது யுவதியொருவரை பாலியல் பலாத்காரம் செய்ததாகத் தொடரப்பட்டஒருவழக்கில்ஒருபடையினர் உட்பட மூவருக்கு பன்னிரெண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகவும் ஒரு செய்தி சமீபத்தில் வெளிவந்தது.

வடக்கிலிருந்து படைகளை வெளியேற்றுங்கள் அல்லது குறையுங்கள் என்று சொன்னால் வடக்கில் மட்டுமல்ல நாடுமுழுவதும் நாட்டின் பாதுகாப்புக்காக படையினர்முகாமிட்டிருக்கிறார்களென்று அரசதரப்பில் பதில் சொல்லப்படுகிறது. நாடு முழுவதும் நடைபெறும் குற்றச் செயல்களுக்குப் பாதுகாப்பு வழங்கப் படுகிறதா?குற்றவாளிகள் பிடிபட்டுத் தண்டிக்கப்படுகிறார்களா?

ரயிலில் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டுள்ள நால்வருக்கும் தண்டனை கிடைக்குமா அல்லது பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கொடூரமான முறையில் அநியாயமாகக் கொல்லப்பட்ட சிறுவர்களின் மரணத்துக்கு பொறுப்பானவர்களெனத் தண்டிக்கப்பட்ட முகாம் பொறுப்பானவர்கள் அனைவரும் பின்னர்தண்டனையே இல்லாமல் விடுவிக்கப்பட்டது போல் இவர்களும் சுதந்திரமாக நடமாடும் நிலை ஏற்படுமா?

படையினரும் படைமுகாம்களும் நாடு முழுவதும் பாதுகாப்புப் பணியிலீடுபட்டிருக்கும் நிலையில் தான் நாட்டில் கொலைகளும் கொள்ளைகளும் பாலியல் வல்லுறவுகளும் தினமும் அதிகரித்து வருகின்றன!

இருக்கும் படைமுகாம்கள் தவிர படையிலிருந்து தப்பியோடியவர்கள் பத்தாயிரம் பேர். அவர்களுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பையும் ஏற்றுக்கொள்ளாமல் சுதந்திரமாக நடமாடுகிறார்களென்றால் அவர்கள் பெற்ற பயிற்சியும் ஆயுதங்களும் எதைப் பாதுகாக்க உபயோகிக்கப் படுகின்றனவோ?

"முப்பது ஆண்டுகாலப்போர் முடிவுக்கு வந்துவிட்டாலும் கூட, நாட்டின் பாதுகாப்பையும் உறுதிப்பாட்டையும் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டியது, எல்லாப் படையினரதும் முதன்மையான கடமை யாகும். எந்தவொரு தாக்குதல் நடவடிக்கையிலும் இலங்கை இராணுவம் ஈடுபடாதுபோனாலும்,புதிய அச்சுறுத்தலாக உருவெடுக்கமுனையும் தீவிரவாதிகள் மீள ஒருங்கிணைவதைத் தடுக்கவேண்டியது அவர்களின் முக்கியமான கடமையாகும். விடுதலைப் புலிகளின் எச்சங்கள் இலங்கைக்கு வெளியே செயற்படுவது எமக்குத் தெரியும். இலங்கைக்குள் இருப்பவர்கள் கூடநாட்டின் அமைதியைச் சீர்குலைக்கமுனையலாம்." என்றும் பாதுகாப்புச் செயலர் கோதாபய எச்சரித்திருக்கிறார்.

ஓடும் ரயிலில் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்ட குடும்பப் பெண்ணின் கணவனோ, உறவினரோ,அந்த நான்கு படையினர் மீது ஆத்திரம் தாங்காமல் குரல்கொடுத்திருந்தாலும் கூட அவர்கள் விடுதலைப்புலிகளாகச் சோடிக்கப்பட்டு "நாட்டின் பாதுகாப்புக்காக" நான்கு படையினரும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி நாட்டைப் பாதுகாத்ததாகப் பாராட்டுப்பெற்றிருப்பர். புலி என்ற சொல் அரசபயங்கரவாதத்தின் ஆயுதமாகி விட்டது. ஒரு மசோதாவுக்கு எதிராக பாராளுமன்றப்படிக்கட்டுகளில் சில மணித்தியாலங்கள் அமைதியாக இருந்து பட்டினி கிடக்கச் சென்றவர்கள் மீது குண்டர்களை ஏவிவிட்டுத் தாக்குதல் நடத்தியதன் தொடர்ச்சியாக கிழக்கில் கல்லோயாவில் குடியேற்றப்பட்ட பெரும்பான்மையினர், சிறுபான்மையின குடியேற்றவாசிகள் மீது தாக்குதல் நடத்திவிரட்டியடித்ததிலிருந்து உருவாக்கப்பட்டதுதானே இன்று புலிப்பயங்கரவாதமாக உருவாக்கப்பட்டு உயிரும், உடைமைகளும், மண்ணும் பறிக்கப்பட்டுத் தொடர்கிறது.

நாட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும் சமாதானமும் ஏற்படவேண்டுமானால் இங்கு ஒரு நெல்சன் மண்டேலா அல்லது சிங்கப்பூர் உதாரண புருஷன் லீ.குவான் யீ தோன்ற வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் போருக்குப்பின் ஏற்பட்டுள்ள கலாசாரச் சீரழிவுகளும் சிதைந்துபோன ஒழுங்கும் கட்டுப்பாடுகளும்சீரமைக்கப்படவும்மக்கள்அரசியல் என்று சிதறிச்சின்னாபின்னமாகாமல் நல்ல சீர்திருந்திய சமுதாயமாக வாழ்வதற்கு மீண்டும்,ஒரு உறுதிபடைத்த தலைவன் தோன்றியேயாகவேண்டும். இதுவே இன்று பொதுமக்கள் பலரினதும் விருப்பம், வெளியே சொல்ல முடியாமலிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை எதிர்நோக்கும் ஆட்சிமுறைச் சவால்



தேர்தல் நோக்கங்களுக்காக அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்பவர்களைக் கல்லால் அடித்து விரட்டுங்கள் என்று நீதிபதி கூறவேண்டிய அளவிற்கு நீதித் துறையின் இலட்சணம் இருக்கிறது

*- கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து*

இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவிற்கு வந்து மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்து விட்டபோதும் அந்தப்போருக்குக் காரணியாக அமைந்த தேசிய இனப்பிரச்சினையும் அதன் விளைவாகத் தோன்றிய வேறுபல நெருக்கடிகளும் தீர்த்துவைக்கப்படாமல் இருக்கின்ற அதேவேளை, போருக்குப் பின்னரான காலகட்டத்தில் வேறுபல பிரச்சினைகளும் உருவாகியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தப் பிரச்சினைகள் இன்று இலங்கையில் ஆட்சிமுறைக்கு ஒரு பாரதூரமான சவாலை ஏற்படுத்தியிருக்கின்றன. இவற்றில் முக்கியமானது சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பில்லாமல் போயிருக்கின்றமையும் நிறைவேற்று அதிகாரப் பீடத்தின் செயற்பாடுகளுக்கு எந்தவிதமான மட்டுப்பாடுகளும் இல்லாமலிருக்கின்றமையும் மனித உரிமை மீறல்களைப் பொறுத்தவரை அவற்றுக்குக் பொறுப்பாயிருப்பவர்கள் சட்டத்தில் இருந்து விதிவிலக்குப் பெற்றவர்களாக சுதந்திரமாக நடமாடக்கூடியதாக இருக்கின்ற கலாசாரம் தொடருகின்றமையுமாகும்.

இந்தப் பிரச்சினைகள் எப்பொழுதுமே இலங்கையில் இருந்து வந்திருக்கின்றன என்றும் மூன்று தசாப்தகால போரின் முடிவிற்குப் பிறகு இவை கூடுதல் முக்கியத்துவம் பெறுவது இயல்பான ஒன்றே என்று சிலர் வாதிடக்கூடும். நிலைமை இவ்வாறிருந்தாலும் முன்னென்றும் இல்லாதளவிற்கு ஆட்சிமுறை பாரதூரமான வகையில் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது என்று வேறுசிலர் வாதிடக்கூடும்.

இலங்கையில் இப்போது அதிகாரக் கட்டமைப்பு குடும்ப ஆதிக்கத்திலானதாக இருக்கிறது. அத்துடன் வெற்றிக்களிப்புடனான பேரினவாதக் கோட்பாட்டினாலும் இராணுவமயத்தினூடாகவும் அந்தக் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டதாக இருந்தது. மத்திய அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திச் செயன்முறைகளுக்கே அதிமுன்னுரிமை அளிக்கப்படுகின்ற அதேவேளை, இதுவிடயத்தில் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான கட்டமைப்புகள் பற்றிய எந்தவொரு பேச்சுவார்த்தையும் பொருத்தமற்றதாக அரசாங்கத்தினால் கணிக்கப்படுகின்றது. கிழக்காசிய நாடுகளின் மாதிரியைப் பின்பற்றிய ஒரு அரசியல் திட்டத்தை நோக்கி நாட்டை நகர்த்துகின்ற கைங்கரியங்கள் இடம்பெறுகின்றன. இது தாராளப் போக்கையும் பல்வகைமையையும் பிரதிபலிக்கின்ற இந்தியாவைப்போன்ற தெற்காசியாவின் பிரதிநிதித்துவ ஜனநாயக மாதிரியிலிருந்து வேறுபட்டதாக அமைகிறது. சிவில் சமூகத்திற்கும் எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான உரிமைக்கும் உள்ள இடம் சுருங்கிக்கொண்டு வருகிறது.

இராணுவமயமாக்கல் வடக்கிலும் கிழக்கிலும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது. இராணுவம் பொருளாதாரத்திற்குள்ளும் குடியியல் வாழ்வுக்குள்ளும் பிரவேசித்திருக்கிறது. இதனால் மக்கள் மத்தியில் பாதுகாப்பின்மையும் அச்ச உணர்வும் ஏற்பட்டிருக்கிறது. பாதுகாப்புப் படைகளில் எந்தவொரு குறைப்பும் செய்யப்படவில்லை. போருக்கெனதிரட்டப்பட்ட 3இலட்சத்திற்கும் அதிகமான படையினரின் கைகளில் இன்னமும் ஆயுதங்கள் இருக்கின்றன. ஆயுதப்படைகளை விட்டுத் தப்பியோடிய சுமார் 70 ஆயிரம் பேர் நாட்டுக்குள் நடமாடித்திரிகிறார்கள். வடக்கிலுள்ள இராணுவத்திலிருந்து சுமார் 21 ஆயிரம் பேரை குறைப்புச் செய்வதாக பாதுகாப்புச் செயலாளர் அண்மையில் அறிவித்திருந்தார். படைபலத்தில் செய்யப்படுகின்ற குறைப்புகள் குறித்து ஏன் திட்டவட்டமான எண்ணிக்கை விபரங்களை வெளியிடமுடியாமல் இருக்கிறது? வடக்கில் நிலைவைக்கப்பட்டிருக்கும் துருப்புகளின் எண்ணிக்கையையும் ஏன் திட்டவட்டமாகக் கூறமுடியாமல் இருக்கிறது? வன்னியில் ஒவ்வொரு நான்கு குடிமக்களுக்கு ஒரு படைவீரர் என்ற விகிதத்திலும் யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு 6 - 8 குடிமக்களுக்கு ஒரு படைவீரர் என்ற விகிதத்திலும் இராணுவப் பிரசன்னம் இருப்பதாக சிலர் மதிப்பிட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கிறார்கள். அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்தும் இருக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தினர் நில அபகரிப்புச் செய்வதாக மேலும் முறைப்பாடுகள் வந்த வண்ணமிருக்கின்றன. பாலியல் துஷ்பிரயோகங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

2010 முற்பகுதியில் நடத்தப்பட்ட இரு தேசியத்தேர்தல்களையும் அடுத்து அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 18ஆவது திருத்தம் தற்போதைய ஜனாதிபதியோ அல்லது அவருக்கு பிறகு அதிகாரத்திற்கு வரக்கூடிய ஜனாதிபதியோ தொடர்ந்து எத்தனை பதவிக்காலங்களுக்கும் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு வகைசெய்கிறது. 2010 தேர்தல்களின் போது இத்தகைய அரசியலமைப்புத் திருத்தமொன்றைக் கொண்டுவருவது குறித்து எதுவுமே பேசப்படவில்லை. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிலும் அவரது குடும்பத்தவர்களிலும் பல்வேறு வகைகளில் குவிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக அரசாங்க நிதி மற்றும் நியமனங்கள் எல்லாமே அவர்களின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கிறது. இலங்கையின் இன்றைய இந்த நிலைவரத்தை நோக்கும் போது பிரான்ஸில் 6ஆவது லூயி மன்னன் ''நான் தான் அரசு'' என்று அகங்காரத்துடன் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. ராஜபக்ஷ சகோதரர்கள் பொருளாதார மற்றும் பாதுகாப்பு அமைச்சுகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள் உல்லாசப்பிரயாணத்துறை மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் தொடக்கம் நகர அபிவிருத்தி அதிகார சபை வரை விரிந்துகிடக்கின்றன.

போருடன் சம்பந்தப்பட்ட மனித உரிமைகள் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் ஊடகங்கள் பெருமளவுக்கு கட்டுப்படுத்தப்படுகின்றன. தலைவிரித்தாடுகின்ற ஊழல்கள் பொருளாதார விவகாரங்களில் நிலவும் ஒளிவு மறைவு அற்ற தன்மை, அரச நிர்வாகம், அரசியல் மயமாக்கல், மனித உரிமை மீறல்களிலும் முறைகேடுகளிலும் ஈடுபடுகின்றவர்கள் சட்டத்திலிருந்து விதிவிலக்குப் பெற்றவர்களாகத் திரிகின்ற கலாசாரம், பொலிஸாரின் செயற்பாடின்மை, சித்திரவதை, அட்டூழியங்கள், ஆகியபற்றியெல்லாம் ஊடகங்கள் செய்திகளை வெளியிட வேண்டியிருந்த போதிலும் கடுமையான கட்டுப்பாடுகள், நெருக்குதல்கள் காரணமாக அவற்றினால் உரியமுறையில் செயற்படமுடியவில்லை.

அண்மைக்காலமாக பெண்கள், சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பில் பெருவாரியான செய்திகள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றன. ஊடகங்களில் வெளியான இரு செய்திகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் நீதித்துறை எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதை மதிப்பிடக்கூடியதாகஇருக்கிறது - தொடர்ச்சியான பல வன்செயல்களில் ஈடுபட்டமைக்காக பல பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரொருவருக்கும் அரசியல் செல்வாக்கை கணிசமாகக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் இன்னொருவருக்கும் சட்டரீதியாக தண்டனை வழங்கப்படுவதற்குப் பதிலாக மத வழிபாடுகளில் ஈடுபடுமாறு ஆலோசனை கூறப்பட்டது. இன்னொரு சம்பவத்தில் தேர்தல் நோக்கங்களுக்காக அரசவளங்களை துஷ்பிரயோகம் செய்பவர்களைக் கல்லால் அடித்து விரட்டுங்கள் என்று நீதிபதி மக்களிடம் கேட்டுக்கொள்வதாகக் கூறப்படுகிறது.

மன்னாரில் நீதிபதியொருவர் அமைச்சரவை உறுப்பினர் ஒருவரினால் அச்சுறுத்தப்பட்ட அதேவேளை, நீதிமன்றத்திற்கும் கல்வீச்சுத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. நீதிமன்றத்தை அவமதித்ததாக அந்த அமைச்சருக்கெதிராக குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. பாலியல் வல்லுறவு தொடக்கம் கொலைவரை பல்வேறு குற்றச்செயல்களில் அரசியல்வாதிகள் ஈடுபட்டதாக தொடர்ச்சியாக செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன. தெற்கில் பிரதேச சபைகளில் முக்கிய பதவிகளை வகிப்பவர்களும் பாதுகாப்பு அமைச்சை கண்காணிப்பதற்கென நியமிக்கப்பட்ட அரசாங்க எம்.பி. யான துமிந்த சில்வா ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலையில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுபவரும் நிலைவரங்களின் பாரதூரத்தன்மையை




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை 1956ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்திற்குக் கொண்டு வந்த பெருமைக்குரிய ஐம்பெரும் சக்திகள் இன்று வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதாக மல்வத்தை பீடாதிபதி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளிக்காட்டுகின்றது. இந்தச் சம்பவங்களைப் பொறுத்தவரை சட்டநடவடிக்கைகள் மூலமாக குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படுவதையும் குறைந்தபட்சம் அரசியல் கட்சிகளாவது அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதையும் காணமுடிவதில்லை.

பங்குச் சந்தையில் இடம்பெறுகின்ற அரசியல் சூழ்ச்சித்தனங்கள் காரணமாக கடந்த 8 மாத காலத்தில் பங்குச்சந்தை ஆணைக்குழுவின் இருதலைவர்கள் இராஜிநாமா செய்திருக்கிறார்கள். இந்த நிலைவரங்களுக்குஒரு மாபியாகும்பலே பொறுப்பாக இருப்பதாக இறுதியாக பதவிவிலகிய தலைவர் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். அத்துடன் தன்னைத் தலைவராக நியமித்த நிதியமைச்சரே ராஜிநாமா செய்யுமாறு பணித்ததாகவும் இந்தத் தலைவர் கூறியிருக்கிறார். அந்த நிதியமைச்சர் வேறுயாருமல்ல ஜனாதிபதியேயாவார். நேரடி வெளிநாட்டு முதலீடு அவசியமாகத் தேவைப்படுகின்ற தருணத்தில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடியதாக அரசாங்கம் எடுத்த ஒரு நடவடிக்கையையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். பயன்படுத்தப்படாதவையாகவும் இலாபகரமான செயற்படாதவையாகவும் 30க்கும் அதிகமான தொழில் நிறுவனங்கள் இருப்பதாக காரணங்காட்டி அவற்றை சுவீகரிப்பதற்கு சட்டமூலமொன்றை அரசாங்கம் நிறைவேற்றியிருந்தது. எமது பிராந்தியத்தின் முக்கியமான பொருளாதாரத் தளமாகவும் அறிவுத் தளமாகவும் இலங்கையை மாற்றப்போவதாக தம்பட்டம் அடிக்கின்ற அரசாங்கம் மின்சாரத்துறையில் படுமோசமான தவறுகளுக்கு காரணமாயிருக்கிறது. நுரைச்சோலையிலுள்ள லக்விஜய மின்னிலையம் அடிக்கடி பழுதடைவதால் இலங்கை மின்சாரத் தட்டுப்பாட்டை எதிர்நோக்குகின்றது. தங்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கவேண்டுமெனவும் கல்வித்துறைக்கு உள்நாட்டு நிகர உற்பத்தியில் 6 சதவீதத்தை ஒதுக்கீடு செய்யவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஜுலை 4ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் நாடுபூராகவுமுள்ள பல்கலைக்கழகங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கின்றன. தற்போது உள்நாட்டு நிகர உற்பத்தியில் வெறுமனே 1.9 சதவீதமே கல்விக்கென ஒதுக்கப்படுகிறது.

1956ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆட்சியதிகாரத்திற்கு கொண்டுவந்த பெருமைக்குரிய ஐந்து பெருஞ்சக்திகளான (பஞ்ச பலவேகய) -மகாசங்கம் விவசாயிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், தொழிலாளர்கள் - இப்போது அரசாங்கத்திற்கெதிராக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதாக மல்வத்தை பீட மகாநாயக்கர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. சமூக நீதிக்கும் ஜனநாயகத்துக்குமான இயக்கமொன்றை வண மல்வத்தை சோபித தேரர் ஆரம்பித்திருக்கிறார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை ஒழிக்கவேண்டுமென்றும் சட்டத்தின் ஆட்சியை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருக்கிறார். கட்டுநாயக்காவில் சுதந்திரவர்த்தக வலயத்தில் ஊழியர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தின் போதும் சிலாபத்தில் மீனவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. வவுனியாவில் நடந்த சிறைக்கலவரத்தின் போது இருவர் கொல்லப்பட்டார்கள். இச்சம்பவம் 1983 ஜுலை அட்டூழியங்களை நினைவுபடுத்துகிறது. கொல்லப்பட்டவர்களின் மரணச் சடங்குகள் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் நடத்தப்பட்டன. உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தே முதல் மரணச்சடங்கை வவுனியாவில் நடத்த வேண்டியிருந்தது.

இத்தகைய பின்புலத்திலேயே எதிர்வரும் நவம்பரில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்சிலில் இடம்பெறவிருக்கும் சர்வதேச மீளாய்வுக்கு இலங்கை உட்படவேண்டியிருக்கிறது. இம்மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவரசு பாராளுமன்ற சங்கத்தின் கூட்டம், 2013 மார்ச்சில் இலங்கை தொடர்பாக ஐ.நா மனித



உரிமைகள் பேரவையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தொடர், 2013 அக்டோபர் / நவம்பரில் நடைபெறவிருக்கும் பொதுநலவரசு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் உச்சிமாநாடு ஆகியவை இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் கவனம் ஈர்க்கப்படக்கூடிய முக்கியமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளாக விளங்கப்போகின்றன. தேசிய மனித உரிமைகள் செயற்திட்டம் ஒன்றையும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டமொன்றையும் அரசாங்கம் முன்வைத்திருக்கிறது. இவற்றில் ஆணைக்குழுவின் விதப்புரைகள் தொடர்பான செயற்திட்டத்திற்கு அரசாங்கத்தினாலும் சர்வதேச சமூகத்தினாலும் ஒதுக்கப்பட்டிருக்கின்ற முக்கியத்துவத்தையும் 2012 மார்ச்சில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் உள்ள கோளாறுகளையும் அடிப்படையாக நோக்கும்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய ஆற்றல் முக்கியமான ஒரு விடயமாகும். வடக்கில் இராணுவமயமாக்கலை குறைப்பது, சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பது இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பது மற்றும் ஆட்சிமுறையில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்குவது தொடர்பிலான விதப்புரைகள் மிகவும் முக்கியமானது.



மன்னாரில் நீதிமன்ற மீதான தாக்குதலின் போது...

நல்லிணக்க ஆணைக்குழுவைப் பொறுத்தவரை அது மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டவை தொடர்பில் அரசாங்கத்திற்கு இருக்கவேண்டிய பொறுப்புடைமை குறித்த விவகாரங்களில் உரிய கவனத்தைச் செலுத்த தவறிவிட்டது என்று தான் கூற வேண்டும். ஆனால் மூதூரில் பிரெஞ்சு தொண்டர் நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்ட சம்பவம், திருகோணமலையில் 5 மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் சனல் 4 ஆவணப்படத்தின் மூலம் இணைக்கப்பட்டிருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள், பாதுகாப்புப் படைகளினால் குடிமக்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மீள ஆரம்பிக்குமாறு ஆணைக்குழு சிபாரிசு செய்திருக்கிறது. ஐக்கியம், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றிற்குமிடையே இருக்கும் தொடர்பை ஏற்றுக்கொண்டு நல்லிணக்கத்தை நோக்கிய அர்த்தமுடைய செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கான அவசியமான குறைந்தபட்ச நல்லெண்ணத்தையாவது ஏற்படுத்துவதற்கு இந்த சிபாரிசுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தியேயாக வேண்டும்.

இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது இன்றைய கால கட்டத்தில் மிகமிக முக்கியமானதாகும். இதுவிடயத்தில் நகர்வு இடம்பெறுவதாக இல்லை. அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் கேட்டுக்கொள்வதற்கு இணங்க பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நோக்கி நகர்வதற்கான இணக்கப்பாட்டை வெளிக்காட்டும் நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இல்லை. அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதில் பற்றுறுதி கொண்டிருப்பதாக அரசாங்கம் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கின்ற போதும் கூட அத்தகைய தீர்வொன்றுக்கான யோசனைகளை அது இன்னமும் முன்வைக்கவில்லை என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கான முன்யோசனைகளாக 1995, 1997, 2000 ஆகஸ்ட் அரசியலமைப்பு வரைவுகளையும் சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக் குழுவுக்கு நிபுணர் அணி சமர்ப்பித்த பெரும்பான்மை அறிக்கையையும்சமர்ப்பித்திருந்தது. தற்போதைய மாகாணசபை தேர்தல்களைத் தொடர்ந்து இதுவிடயத்தில் நகர்வேதும் இடம்பெறுமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

நாடுபூராகவும் மக்கள் மத்தியில் வேறுபட்ட அளவுகளில் ஆத்திரமும் வேதனையும் காணப்படுகின்றது. நாம் உண்மையான ஒரு ஜனநாயக நாட்டினராகத் திகழவேண்டுமேயானால் எங்களது அடையாளங்களினதும் அபிப்பிராயங்களினதும் பல்வகைமையை மதிக்க வேண்டியது அவசியமாகும். மனித உரிமைகளையும் சகல மக்களினது கண்ணியத்தையும் கௌரவத்தையும் அடிப்படையாகக் கொண்ட நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கு எம்மை அர்ப்பணித்தால் மாத்திரமே எதிர்காலம் சுபீட்சமானதாக இருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னையிலிருந்து முத்தையா காசிநாதன்

# 'நாற்பதும் நமதே' டில்லி மீது இலக்கு

## 14 வருடங்களாக மத்திய அரசில் அதிகாரம் செலுத்த முடியாது இருந்து வ யை 2014 பாராளுமன்றத் தேர்தலில் மாற்றிக் காட்ட விரும்பும் ஜெயலலிதா

### அண்ணா தி.மு.க. டில்லியில் ஆட்சியைப் தீரும் என்ற சவாலின் அர்த்தம் என்ன?

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நடந்து முடிந்திருக்கிறது. ஆகஸ்ட்27ஆம்திகதிநடந்தஅக்கட்சியின் உயர்மட்டக் குழுவில் ஒன்றான இக்கூட்டத்தில் இந்திய பாராளுமன்ற தேர்தலை மனதில் வைத்து கடந்த ஒன்றரை ஆண்டில் அ.தி.மு.க. அரசு செய்த சாதனைகள், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க.வின் போக்கிற்கு கண்டனம் என்று மத்திய அரசாங்க அதிகாரத்தை திரும்பப் பெறுவது. இன்னொன்று காங்கிரஸும், பாரதீய ஜனதா கட்சியும் தனிப்பட்ட முறையில் ஆட்சி அமைக்க அடுத்த தேர்தலில் எம்.பி.க்களைப் பெற முடியாது என்பதால், பிரதமர் பதவிக்கு குறிவைப்பது. அகில இந்திய அரசியலில் எப்போதுமே தனிக்கவனம் செலுத்துபவர் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா. பல கட்டங்களில் தன் கட்சியின் பொதுக்குழுக் கூட்டங்களில் கூட அ.தி.மு.க. ஒரு முறை டில்லியில் ஆட்சியைப் பிடித்தே தீரும் என்று சவால் விடுத்துப் பேசியிருக்கிறார். டில்லியின் ஆட்சியைப் பிடிப்போம் என்றால் பிரதமராக ஜெய எம்.பி.க்களைப் பெற்றார். அடுத்து வந்த 1999 பாராளுமன்றத் தேர்தலில் 24 தொகுதிகளில் போட்டியிட்டு 10 இடங்களிலேயே வெற்றி பெற்றது அ.தி.மு.க. பிரதமராக இருந்த வாஜ்பாய் அரசுக்கு ஆதரவை விலக்கிக் கொண்டது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறவில்லை. அதனால் அந்தப் பாதிப்பை அ.தி.மு.க. சந்தித்தது. இதன் பிறகு 2004 பாராளுமன்றத் தேர்தலில் 33 தொகுதிகளில் போட்டியிட்டது. ஆனால் ஓரிடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. மாநிலத்தில் அ.தி.மு.க. அரசுக்கு இருந்த ஆட்சிக்கு எதிரான வாக்குகள் அந்த அளவிற்கு தோல்வியைக் கொடுத்தது

தீர்மானங்களைப் போட்டிருக்கிறது. இந்த இரு விடயங்களுக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாமுக்கியத்துவம்கொடுப்பதில் முக்கிய காரணங்கள் இருக்கின்றன. வருகின்ற 2014 பாராளுமன்றத் தேர்தலை அ.தி.மு.க.வும் சரி, அதன் பொதுச் செயலாளர்ஜெயலலிதாவும்சரிஎதிர்கால அரசியலுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக பார்க்கிறார்கள். ஒன்று 1998இல் இழந்த லலிதா வருவார் என்பதுதான் அதன் அர்த்தம்.

அதை மனதில் வைத்து எப்போதுமே பாராளுமன்றத் தேர்தலில் அதிக தொகுதிகளில் போட்டியிடுவது அ.தி.மு.க.வின் வழக்கம். 1998 பாராளுமன்ற தேர்தலில் மொத்தமுள்ள 40 தொகுதிகளில் (தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி உட்பட) 22 தொகுதிகளில் போட்டியிட்டு 18 என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் காங்கிரஸ், இரு கம்யூனிஸ்டுகள், டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி, வைகோ தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாம் ஓரணியில் நின்று "மெகா கூட்டணி" அமைத்தது இன்னொரு காரணம். அதைத் தொடர்ந்து 2009 பாராளுமன்றத் தேர்தலிலும் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிகளில் அ.தி.மு.க. போட்டியிட்டது. ஆனால் 9 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. இந்த 9 எம்.பி.க்கள்தான் இப்போது அ.தி.மு.க.விற்கு இந்திய பாரா ளுமன்றத்தில் இருக்கிறார்கள். பாராளு மன்ற தேர்தலில் மெகா வெற்றி மூலம் 1998இல் வாஜ்பாய் அரசு அமைவதற்கு முக்கிய கூட்டணிக் கட்சியாக அ.தி.மு.க. இருந்தது. ஆனால் அந்த அரசுக்கு வழங்கிய ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்ட பிறகு, மத்தியில் நிலையான ஆட்சிக்கு அ.தி.மு.க. உதவுவதில்லை என்ற எண்ணவோட்டம் அகில இந்தியக் கட்சிகள் மத்தியில் மட்டுமல்ல, தமிழக வாக்காளர்கள் மனதிலேயே உருவானது. இதனால் கடந்த 14 வருடங்களாக மத்திய றுத்தியே அரசியல் செய்து வருகிறார். மத்திய அரசைத் தாக்கி அறிக்கை விடுவ தாக இருக்கட்டும், மத்திய அரசு கொண்டு வந்த மதக்கலவரத் தடுப்பு மசோதா உள்ளிட்ட மாநில அரசுகளின் உரிமை களைப் பறிக்கும் பல்வேறு மசோதாக்கள் விடயத்தில் முதலில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடமிருந்துதான் எதிர்ப்புக் கிளம்பும். மற்ற மாநில முதல்வர்களுக்கு முன்னோடியாக நின்று மத்திய அரசுடன் மோதி வருகிறார். அதற்கு அடுத்தபடியாக டில்லியில் நடைபெறும் மாநில முதல் வர்கள் கூட்டத்திற்கு தானே சென்று பங்கேற்று வந்தார். குடியரசுத் தலைவர் தேர்தலின் போது கூட காங்கிரஸ் வேட் பாளர் பிரணாப் முகர்ஜிக்கு போட்டியாக திற்கு வழிகாட்டியாக விளங்கிய முதல மைச்சருக்கு பாராட்டு'' என்றே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இது மட்டு மன்றி, ''மாநில அரசின் அதிகாரங் களைப் பறிக்கும் வகையிலும், மாநில அரசின் திட்டங்களுக்கு குந்தகம் விளை விக்கும் வகையிலும் செயல்படும் மத்திய அரசுக்கு கண்டனம்'' என்றும் ஒரு தீர் மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த இரு தீர்மானங்களுமே அகில இந்திய அரசியலில் அதிகாரம் செலுத்த விரும்பும் அ.தி.மு.க. தலைமையின் வியூகத்தை வெளிச்சம் போட்டுக் காட் டுகிறது.

இந்தத் தீர்மானங்கள் நிறைவேறிய செயற்குழுவில் பேசிய ஜெயலலிதா,




அரசில் அதிகாரம் செலுத்த முடியாத நிலை அ.தி.மு.க.வுக்கும் சரி, அதன் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவிற்கும் சரி உருவாகி விட்டது.

இந்த நிலையை வருகின்ற 2014 பாராளுமன்றத் தேர்தலில் மாற்றிக்காட்ட விரும்புகிறார். அதனால் இந்த முறை ஆட்சிக்கு வந்ததில் இருந்தே ''நம் இலக்கு டில்லி'' என்ற பிரசாரத்தை முன்னி முன்னாள் இந்திய பாராளுமன்ற சபா நாயகர் பி.ஏ. சங்மாவை முன்மொழிந் தவர் ஜெயலலிதாவும், ஒரிஸா மாநில முதல்வர் நவீன் பட்நாயக்கும்தான். அது தீர்மான வடிவிலேயே இப்போது நடை பெற்ற செயற்குழுவில் வந்திருக்கிறது. ''இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் வேட்பாளரை நிறுத்தி, ஆரோக்கியமான ஜனநாயகத் ''இந்திய பாராளுமன்றத் தேர்தல் எப் போது வேண்டுமானாலும் வரலாம். அதற்கு நாம் இப்போதே தயாராக வேண் டும். அதில் தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 40 பாராளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும்'' என்று ஆணித் தரமான உரை நிகழ்த்தியுள்ளார். அதற் காக மூத்த தமிழக அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் நால்வர் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவை நியமித்திருக்கிறார். நிதி அமைச்சராக இருக்கும் பன்னீர்செல்வம்தான் அ.தி.மு.க.வின் பொருளாளர். அவரது தலைமையில் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், அமைச்சர் கே.பி. முனுசாமி, அமைச்சர் வைத்தியலிங்கம் ஆகியோர் இடம்பெறுகிறார்கள். இவர்கள் ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதிக்கும் செல்வார்கள். அ.தி.மு.க. 40 தொகுதிகளிலும் வெற்றி பெற இந்தத் தேர்தல் குழு அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சுமார் 45 நிமிடங்களே நடைபெற்ற செயற்குழு என்றாலும், பாராளுமன்றத் தேர்தல் குறித்த முக்கிய குழு நியமனம், முக்கிய உரை என்று கட்சி நிர்வாகிகளை முடுக்கிவிட்டிருக்கிறார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர்.

''40ம் நமதே'' என்ற கோஷத்தின் அடிப்படையில் தேர்தல் பிரசாரத்தில் குதிக்கும் அ.தி.மு.க. ஏற்கனவே தொகுதிகளில் தனியாக நிர்வாகிகளை நியமித்திருக்கிறது. அது மட்டுமன்றி, தி.மு.க. ஒரு வேளை காங்கிரஸை விட்டு வெளியேறி வேறு கூட்டணி வைத்தால், ''இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் உதவ மறுத்துவிட்டது'' என்பதையும், ''தமிழர்களுக்கு துரோகம் செய்யும்கட்சியாககாங்கிரஸ்இருக்கிறது'' என்பதையும் மையப்பிரசாரமாக தி.மு.க. தேர்தல் களத்தில் முன் வைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிறது அ.தி.மு.க. தலைமை. அதை முறியடித்து, ''காங்கிரஸும், தி.மு.க.வுமே இலங்கைத் தமிழர்கள் அழிவுக்கு காரணம்'' என்று பிரசாரத்தை கூர்மைப்படுத்த விரும்புகிறது அ.தி.மு.க. தலைமை. அதனால்தான் செயற்குழு தீர்மானத்தில், ''ஆட்சியில் (தி.மு.க.) இருக்கும் போது இலங்கைத் தமிழர்கள் அழிவுக்கு காரணமாக இருந்துவிட்டு, ஆட்சியில் இல்லாத போது இலங்கைத் தமிழர்களின் உரிமை, பாதுகாப்பு என்ற போர்வையில் முதலைக் கண்ணீர் வடிக்கிறார் கருணாநிதி'' என்று கடுமையாகச் சாடியிருக்கிறது. ஆகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையை தி.மு.க. வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் பிரசாரமாக முன் வைத்தால், அதைச் சந்திக்க இப்போதே பிரசார தீர்மானத்தை அ.தி.மு.க. செயற்குழு நிறைவேற்றி விட்டது. இது தவிர அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை பிரசாரமாக்கும்.


சென்ற சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற போது அ.தி.மு.க தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் 52.09 சதவீத வாக்குகளைப் பெற்றன. அக்கட்சியுடன் இருந்த கூட்டணிக் கட்சிகளில் முக்கியமான கூட்டணிக் கட்சியான விஜயகாந்தின் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் இப்போது அக்கூட்டணியில் இல்லை. அதேபோல் இஸ்லாமிய சமுதாயத்தினரைப் பிரதிபலிக்கும் கட்சிகளில் ஒன்றான ஜவஹிருல்லா தலைமையிலான மனித நேய மக்கள் கட்சி இல்லை. டாக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சியும் இல்லை. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளில் பிரகாஷ்காரத் பொதுச் செயலாளராக இருக்கும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அ.தி.மு.க. கூட்டணியில் இல்லை. ஆனால் தா.பாண்டியன் மாநிலச் செயலாளராக இருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் தொட்டும், தொடாமலும் அ.தி.மு.க. கூட்டணியுடன் அனுசரணையாக இருக்கிறது. இந்நிலையில், சுமார் 13 சதவீத வாக்குகளுக்கு உரிய கூட்டணிக் கட்சிகள் இப்போது அ.தி.மு.க.வுடன் இல்லை. ஆகவே அ.தி.மு.க.விற்கு சென்றமுறை கிடைத்த வாக்காளர் பலம் வரவேண்டுமென்றால், வேறு ஒரு முக்கியக் கூட்டணிக் கட்சி வேண்டும். குறைந்தபட்சம் காங்கிரஸ் கட்சியாவது வேண்டும். ஆனால் இதுவரை அ.தி.மு.க. கடைப்பிடித்து வருகின்ற மத்திய அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பார்த்தால், காங்கிரஸுடன் அ.தி.மு.க. கூட்டணி வைப்பது என்பதை இன்றைய நிலையில் எதிர்பார்க்க முடியாது என்றே தெரிகிறது.

இதையெல்லாம் மனதில் வைத்தே, சொந்தக் கட்சியினரை முழு வீச்சில் களமிறக்கி விட வேண்டும் என்று முடிவு செய்து முன்கூட்டியே செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார். ஏனென்றால் இந்தியப் பிரதமர் பதவி மீது குறிவைத்திருக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதா 40 பாராளுமன்றத் தொகுதிகளில் (2004இல் போட்டியிட்டது 33 தொகுதிகள்) வருகின்ற தேர்தலில் குறைந்தபட்சம் 36 பாராளுமன்றத் தொகுதிகளிலாவது அ.தி.மு.க. போட்டியிட வேண்டும் என்றே விரும்புவார் என்பதே தற்போதைய நிலைவரம். அதற்காகவே திடீர் தேர்தல் வந்தாலும் சரி, அல்லது 2014இலேயே தேர்தல் வந்தாலும் சரி அதற்கான முஸ்தீபுகளில் இப்போதே அ.தி.மு.க. குதித்து விட்டது. ''மக்களைச் சந்தியுங்கள். அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யுங்கள்'' என்று தலைமைத் தொண்டர்களுக்கு உத்தரவிட்டதன் அர்த்தமும் இதுவே. ●



கடந்த வாரம் சென்னையில் இசையமைப்பாளர் விஸ்வநாதன், இராமமூர்த்தி ஆகியோர் கௌரவிக்கப்பட்ட நிகழ்வில் திரை உலக பிரமுகர்களுடன் முதலமைச்சர் ஜெயலலிதா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பாராளுமன்றத்தை முடங்க வைத்திருக்கும்


# 'கோல்கேட்'

"இந்தியாவின் சரித்திரத்தில் மிகவும் மோசமான ஊழல் நிறைந்த அரசுக்கு நேர்மையான பிரதமர் ஒருவர் தலைவர்"



எம்.பி.வித்தியாதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தற்போது இந்திய அரசாங்கம் மரணப் படுக்கையில் கிடக்கிறதுபோலத் தோன்றுகின்றது. புகழ்பெற்ற பொருளியல் நிபுணரான பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் தலைமையிலான இந்த அரசாங்கம் பாராளுமன்ற ஆசனங்களைப் பொறுத்தவரை கொண்டிருக்கக் கூடிய எண்ணிக்கையினால் உயிர் தப்பிப்பிழைக்கக்கூடும். ஆனால் முடக்கு வாதம் என்கின்ற (அரசியல்) நோயினால் அது சகல பக்கங்களிலும் இருந்து பாதிக்கப்பட்டு நொண்டிக்கொண்டிருக்கிறது. சாதாரண மனிதனின் கண்களில் அதன் நம்பகத்தன்மை படுமோசமான தாழ்நிலையில் இருக்கிறது. பொருளாதாரத்தில், கல்வியில், சமூக நீதி மற்றும் ஆட்சித்துறையில் உறுதியளித்த எந்தவொரு சீர்திருத்தத்தையும் முன்னெடுக்க முடியாமல் அரசாங்கம் இருக்கிறது.

ஒன்றன் பின் ஒன்றாக ஊழல் விவகாரங்கள் அரசாங்கத்தை அல்லாடச் செய்துகொண்டிருக்கின்றன. இந்தியாவின் சரித்திரத்தில் மிகவும் மோசமான ஊழல் நிறைந்த அரசாங்கத்துக்கு நேர்மையான பிரதமர் ஒருவர் தலைமை தாங்குகிறார் என்று பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் அருண் ஜெய்ட்லி செய்த வர்ணனை பொருத்தமானதாகவே இருக்கிறது என்றே கூறவேண்டும்.

இறுதியாக அம்பலத்துக்கு வந்திருப்பது "கோல்கேட்" (COALGATE) என்று வர்ணிக்கப்படும் ஊழல் விவகாரமாகும். அரசாங்கத்தில் கணக்காய்வு நிறுவனம் செய்த மதிப்பீட்டின்படி தனியார் கம்பனிகளுக்கு நிலக்கரி அகழ்வுக்கென நிலங்கள் ஒதுக்குவதில் அனுமதிப்பத்திரம் வழங்குகின்ற விடயத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய முறைகேடுகளின் விளைவாக அரசாங்கத்திற்கு 1 இலட்சத்து

**'நிலக்கரி அமைச்சுக்கு பொறுப்பாக இருந்தவன் என்ற வகையில் தீர்மானங்களுக்கு முழுப் பொறுப்பையும் நான் ஏற்கிறேன்'**

86ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிய வந்திருக்கிறது. ஆகஸ்ட் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் நிலக்கரி அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கலில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை காரணமாக 25 தனியார்க் கம்பனிகள் இலாபமடைந்திருக்கின்றன என்று அந்த அறிக்கையின் மூலம் தெரியவந்தது. இந்தக் கம்பனிகளில்




எசார் பவர், ஹின்டல்கோ, டாட்டா பவர் மற்றும் ஜின்டால் ஸ்டீல் அன்ட் பவர் ஆகியவையும் அடங்கும்.

இன்னொரு தனியான அறிக்கையில் டில்லி விமான நிலையத்தின் நிலப்பகுதி குத்தகைக்கு விடப்பட்டதில் அரசாங்கத்துக்கு இன்னொரு 1 இலட்சத்து 63 கோடி ரூபா நட்டமேற்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இந்த இரு ஊழல் விவகாரங்களிலும் சம்பந்தப்பட்டிருக்கும் 3இலட்சம் கோடி ரூபாய்களை நினைக்கும் போது தலையைச் சுற்றுகிறது.

இத்தகைய ஊழல் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் எதிர்கொள்வது இதுதான் முதற்தடவையல்ல. இதற்கு முதல் அரசாங்கத்தை பாதித்த பெரிய ஊழல் விவகாரம் 2ஜி ஸ்பெக்ரம் சம்பந்தப்பட்டதாகும். இதில் அரசாங்கத்துக்கு 1 இலட்சத்து 76 இலட்சம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த விவகாரம் தொடர்பில் 2010 மழைக்காலக் கூட்டத்தொடரின்போது பாராளுமன்றத்தை பாரதிய ஜனதாக் கட்சியும் ஏனையகட்சிகளும் இயங்க விடாமல் முடக்கியதையடுத்து விசாரணை செய்வதற்கு கூட்டுபாராளுமன்றக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஊழல்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சரான ஆண்டி முத்துராஜா நீதிமன்றத்தினால் சிறையிலடைக்கப்பட்டார். அவரது கழகச் சகாவும் தி.மு.க.தலைவர் கருணாநிதியின் மகள்மாரில் ஒருவருமான கனிமொழி அடுத்து சிறையிலடைக்கப்பட்டார். தற்போது இருவரும் பிணையில் வெளியில் இருக்கிறார்கள்.

ஆனால் கோல்கேட் விவகாரத்தில் உள்ள வேறுபாடு என்னவென்றால் 2005 தொடக்கம் 2009 வரை நிலக்கரி அகழ்வுக்கென நில அனுமதி வழங்கப்பட்ட போது சம்பந்தப்பட்ட அமைச்சு பிரதமரின் கீழ் இருந்ததாகும். இதனால் அவர் இது விடயத்தில் நேரடியாக பதிலளிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார். கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதற்கு அடுத்த நாள் பிரதமரை பதவி விலக வேண்டுமென்று எதிரணிக்கட்சிகள் கோரிக்கை விடுத்தன. பதவிவிலகலுக்கான தங்களது கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் பாராளுமன்றத்தை இயங்க விடுவதற்கு பாரதிய ஜனதாக் கட்சியினர் தயாராயில்லை. இறுதியாக பிரதமர் மன்மோகன்சிங் இந்த விவகாரம் தொடர்பில் பாராளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தில் அறிக்கையொன்றைப் பலத்த கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில் வாசித்தார். அவர் வாசித்ததை எவருமே கேட்க முடியாதளவிற்கு சபைக்குள் அமளிதுமளி நிலவியதால் அறிக்கையை சபையில் தாக்கல் செய்வதைத் தவிர வேறுவழியிருக்கவில்லை. அந்த அறிக்கையில் பிரதமர் அரசாங்க கணக்காய்வாளரின் அறிக்கையை நிராகரித்தார். அந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகள் சர்ச்சைக்குரியதென்று அவர் வர்ணித்தார். நிலக்கரி அகழ்வுக்கான நில அனுமதி வழங்குவதில் முறைகேடு எதுவும் இடம்பெறவில்லை என்று அவர் நிராகரித்தார். முறைகேடு இடம்பெற்றதாக சுமத்தப்பட்டிருக்கக்கூடிய எந்தவொரு குற்றச்சாட்டும் ஆதாரமற்றவை என்பதே அவரின் நிலைப்பாடாக இருக்கிறது.

நிலக்கரி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் பிரதமர் மன்மோகன் சிங் தவறவில்லை. "நிலக்கரித் துறை அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்தவன் என்ற வகையில் அதனால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கான முழுப்பொறுப்பையும் நான் ஏற்கிறேன்" என்று பாராளுமன்றத்தில் அவர் கூறினார். 1973ஆம் ஆண்டின் நிலக்கரிச் சுரங்கங்கள் (தேசிய மயமாக்கல்) சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்ட பிறகு 1993ஆம் ஆண்டில் இருந்து இந்தக் கொள்கை நடைமுறையில் இருந்து வருகிறது என்றும் ஏனைய அரசாங்கங்களும் கூட இதே கொள்கைக்கு இணங்க தீர்மானங்களை எடுத்திருந்தன என்றும் பிரதமர் கூறினார். நிலக்கரி அகழ்வுக்கு நிலங்களை ஏலம் விடுவது தொடர்பில் தன்னால் கொள்கை யோசனை முன்வைக்கப்பட்ட போது ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்காத கட்சிகளின் தலைமையிலான பல்வேறு மாநில அரசாங்கங்கள் அதை எதிர்த்தன என்று கூறிய மன்மோகன் சிங், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை பொதுக்கணக்குக் குழுவுக்கு வரும்போது அரசாங்கம் அதன் கொள்கையை நியாயப்படுத்தியே தீரும் என்றும் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்.

தன்னைப்பாதுகாப்பதற்கு அரசாங்கம் அதன் இயந்திரத்தையும் கட்சிச் சாதனங்களையும் ஒருங்கிணைத்து தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆனால் பாரதிய ஜனதாக்கட்சியோ பாராளுமன்றத்தை முடக்கும் செயற்பாடுகளை நிறுத்தப் போவதில்லை. 2ஜி ஊழல் விவகாரம் சம்பந்தமான சர்ச்சையின்போதும் கூட்டுப் பாராளுமன்றக்குழு அமைக்கப்படுவதற்கு முன்னதாக இதே மாதிரியான தந்திரோபாயத்தையே தாங்கள் கடைப்பிடிக்கவேண்டியிருந்ததாக பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர்கள் கூறினார்கள். ஆனால் இதுவரையில் அந்தக்குழு எந்தமுடிவுக்கும் வரவில்லை. வெறுமனே விவாதிப்பது தங்களுக்கு அக்கறையில்லை, அடுத்து முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மாத்திரமே தங்களைப் பொறுத்தவரை முக்கியமானது என்று அந்தத் தலைவர்கள் கூறுகின்றார்கள். இத்தகைய பின்னணியில் செப்டெம்பர் 7ஆம் திகதியுடன் முடிவடையும் பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் எந்தவிதமான பிரயோசனமற்றதாக போய்விட்டது. மக்களின் பணம் வீணாகிப் போகிறது.

இதனால் கடுமையாகப் பாதிக்கப்படுவது அரசாங்கமேயாகும். அதன் நம்பகத்தன்மை வீழ்ச்சிகண்டுகொண்டுபோகிறது என்பது மாத்திரமல்ல பிரச்சினை, தளம்பல் நிலையில் இருக்கின்ற பொருளாதாரத்திற்கு உத்வேகத்தைக் கொடுப்பதற்கு அவசியமான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு தேவைப்படுகின்ற முக்கியமாக பல சட்டமூலங்களை நிறைவேற்ற முடியாமலும் இருக்கிறது. பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு விடுக்கப்படுகின்ற கோரிக்கையை மன்மோகன்சிங் தொடர்ந்தும் நிராகரித்துக் கொண்டேயிருப்பாரானால் பாரதிய ஜனதாக்கட்சி எவ்வாறு பிரதிபலிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்காட்டும் என்பது முக்கியமான ஒரு கேள்வியாகும். தற்போதைய லோக்சபாவின் பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னமும் இருவருடங்களே இருக்கும் நிலை பாராளுமன்றத்தில் இருந்து அல்லது பாராளுமன்ற குழுக்களிலிருந்து பாரதிய ஜனதா உறுப்பினர்கள் திரளாக ராஜிநாமா செய்வதற்கான துணிச்சலை வெளிக்காட்டுவார்களா? அல்லது 1970களில் ஜெயப்பிரகாஷ் நாராயண் செய்ததைப்போன்று வீதிகளில் இறங்கி ஊழலுக்கெதிராகப் போராடுவார்களா? நாராயணன் தலைமையிலான போராட்டத்தினால் திகிலடைந்த இதே காங்கிரஸ் கட்சியின் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியதும் அடுத்து நடந்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியை மட்டுமல்ல தனிப்பட்ட முறையில் இந்திராகாந்தியையும் அவரது இளைய மகன் சஞ்சய காந்தியையும் மக்கள் சொந்தத் தொகுதிகளில் கூட நிராகரித்ததும் வரலாறு.



### தேசிய ஒருங்கிணைப்புக்கு ஆபத்து

வேறுபட்ட நலன்களைக் கொண்ட பல கட்சிகளின் ஒரு கூட்டணியான மன்மோகன் சிங் அரசாங்கத்திற்கு ஊழல் விவகாரங்கள் மாத்திரம் தான் தொல்லை கொடுக்கின்றன என்று இல்லை. கோல் கேட் விவகாரம் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக வருவதற்கு முன்னதாக வடகிழக்கு மாநிலமான அசாமில் இனவாத வன்முறை மூண்டது. நாடு அதன் 66ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடிய வேளையில் இது நடந்தது. பிரதமரைப் பொறுத்தவரை அசாம் (அரசியல் நோக்கங்களுக்காக) சொந்த மாநிலம். பங்களாதேஷில் இருந்து அகதிகள் படையெடுப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த மாநிலம் 1980களின் பிற்பகுதியிலிருந்து கலவரங்களினால் படுமோசமாகப் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. அகில அசாம் மாணவர்கள் ஒன்றியம் நடத்திய வெற்றிகரமான போராட்டத்தின் விளைவாக இந்திய மத்திய அரசாங்கத்துடன் உடன்படிக்கையொன்று (அசாம் உடன்படிக்கை) செய்து கொள்ளப்பட்டது. அப்போது ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தார். பல வருடங்களுக்குப் பிறகு போடோ இனத்தவர்களைப் போன்ற பல்வேறு பழங்குடி மக்கள் குழுக்களுக்கு இடையே மோதல்கள் மீண்டும் மூளத்தொடங்கின. இதையடுத்து போடோ இனத்தவர்களுடன் இணக்கப்பாடொன்று காணப்பட்டது. இதன்



மேற்கு அசாமில் நிலவுகின்ற முரண் நிலை வெளிநாட்டவர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையிலானதே என்று கூறுகிறார் போடோலாண்ட் சுயாட்சித் தலைவர் மொஹிலாரி


விளைவாக அவர்களுக்கென போடோ நிர்வாகத்தினாலான பிராந்தியங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் போடோ இனத்தவர்களுக்கும் குடியேற்றவாசிகளான முஸ்லிம் சமூகத்தவர்களுக்கும் இடையேயான மோதல்களினால் அமைதி இப்போது மீண்டும் குலைந்திருக்கிறது. போடோ நிர்வாக கவுன்சிலில் இந்த முஸ்லிம்கள் தங்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கோருகிறார்கள்.

இந்த நெருக்கடி தேசிய அளவில் ஏற்படுத்துகின்ற பாதிப்புகள் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பெருங் கவலையளிக்கின்றன. இரு சமூகத்தவர்களுக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திய சில நாள் மோதல்களுக்குப் பிறகு முஸ்லிம் சமூகத்திற்கு ஆதரவளிக்கும் சில குழுக்கள் வடகிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு பாடத்தைப் புகட்டத் திட்டமிட்டனர். முஸ்லிம்கள் எவ்வாறு அட்டூழியங்களுக்குள்ளாக்கப்பட்டார்கள் என்பதைக் காண்பிக்கும் படங்களைக் கொண்ட போலி வீடியோக்களை அவர்கள் விநியோகித்தார்கள். பழிவாங்கும் நடவடிக்கையாக வடகிழக்கு இந்தியர்கள் தாக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கும் பெருவாரியான குறுஞ்செய்திகளை அனுப்பினார்கள். பல இடங்களில் தாக்குதல்களும் இடம்பெற்றன. இந்த நிலைவரங்களை அடுத்து சென்னை, பெங்களூர், ஹைதராபாத் உட்பட பல்வேறு நகரங்களில் இருந்து மாணவர்கள், தொழிலாளர்கள் என வட கிழக்கு மக்கள் வெளியேறத் தொடங்கினார்கள். மாநில அரசாங்கங்கள் மேற்கொண்ட முயற்சிகள், மத்திய அரசாங்கம் வழங்க முன்வந்த உதவிகள் எதுவுமே அந்த மக்களின் அச்சத்தைப் போக்கக்கூடியதாக இருக்கவில்லை. அசாமுக்கு அவர்கள் பாதுகாப்பாகத் திரும்புவதற்காக பல நகரங்களில் இருந்து விசேட ரயில் சேவைகளை ரயில்வே இலாகா ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது.

பல்வேறு இணையத்தளங்களினூடாகவும் ஃபேஸ்புக், டுவிற்றர் போன்ற சமூக ஊடகங்கள் மூலமாகவும் பாகிஸ்தானில் உள்ள குழுக்கள் குழப்பநிலையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றுவிக்க முயற்சிப்பதாக இந்தியா குற்றம்சாட்டியது. போலி வீடியோக்களையும் படங்களையும் தரவேற்றம் செய்த 285க்கும் அதிகமான இணையத்தளங்களை அரசாங்கம் தடை செய்தது. பாகிஸ்தானிய குழுக்களின் தீவிர பங்கு தொடர்பில் தங்களிடம் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக இந்திய உள்துறை அமைச்சு அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் எப்போதும் செய்வதைப் போன்றே பாகிஸ்தான் நிராகரிக்கிறது.

மக்களைத் தூண்டிவிடுவதற்கு சமூக ஊடகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை இந்தச் சம்பவம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இணையத்தளங்களைப் பொறுத்தவரை பாதுகாப்பு ஏற்பாடு என்பது எவ்வளவு தூரத்திற்கு முக்கியமானது என்பதையும் இந்தச் சம்பவம் உணர்த்தி நிற்கிறது. பாரம்பரியமாக பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் என்று கருதப்படுகின்ற அம்சங்களை விடவும் இணையவெளியினூடாக ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தல்கள் எந்தளவு தூரத்திற்கு நாசகாரத்தனமானவை என்பதையும்இந்தச்சம்பவம்காட்டுகிறது. இந்த ஊடகத்தினூடாக பதில் தாக்குதல்களை நடத்துவது என்பதும் சுலபமானதாக இருக்கப்போவதில்லை.

தற்போது நிலைவரம் தணிந்து கொண்டு வருவது போல் தோன்றுகின்றது. வெளியேறிய வடகிழக்கு மக்களை மீண்டும் திருப்பி அழைப்பதற்கு மாநில அரசாங்கங்கள் ரயில்களையும் விமானங்களையும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றன. ஆனால் போடோ பகுதிகளிலும் வேறு சில பகுதிகளிலும் இன்னமும் கூட வன்செயல் தொடரவே செய்கிறது. பங்களாதேஷில் இருந்து வந்த சட்டவிரோத குடியேற்ற வாசிகளான முஸ்லிம்களே பிரச்சினைக்கு அடிப்படையாக இருப்பதால் பதற்றமான சூழ்நிலை தொடர்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அசாமில் 40 இலட்சத்திற்கும் அதிகமான பங்களாதேஷ் குடியேற்றவாசிகள் இருப்பதாகமதிப்பிடப்பட்டிருக்கிறதென்று முன்னாள் ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் எஸ்.கே.சின்ஹா கூறியிருக்கிறார். அவரினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று மேற்குவங்காளம், திரிபுரா, பீகார், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் டில்லி ஆகிய மாநிலங்களில் முறையே 54 இலட்சம், 8 இலட்சம், 5 இலட்சம்,5 இலட்சம், 5 இலட்சம், 3 இலட்சம் என்ற ரீதியில் சட்டவிரோத பங்களாதேஷ் குடியேற்றவாசிகள் இருப்பதாகக் கூறுகிறது.

இந்தியாவின் தேசிய பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் போடோலாண்ட் பிரதேச சுயாட்சி மாவட்டங்களின் தலைவர் ஹக்றமா மொஹிலாரி, மேற்கு அசாமில் நிலவுகின்ற முரண்நிலை வெளிநாட்டவர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையிலானதேயன்றி முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையிலானதோ அல்லது போடோ இனத்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலானதோ அல்ல என்று கூறியிருக்கிறார். "போடோலாண்ட் பிரதேச சுயாட்சி மாவட்டங்களில் இடம்பெறுகின்ற தற்போதைய மோதல்கள் இந்திய பிரஜைகளுக்கும் பங்களாதேஷில் இருந்து அலைஅலையாக வந்து எங்களது நிலங்களை அபகரித்த சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கும் இடையிலான பிரச்சினையாகும். தங்களது சனத்தொகையை அதிகரித்துக்கொண்டு அந்தக் குடியேற்றவாசிகள் அரசியல் உரிமைகளையும் பெறுவதற்கு நாட்டம் கொண்டிருக்கிறார்கள். உள்ளூர் இனக்குழுக்களுக்கு இதுபெரும் அச்சுறுத்தல்களைத் தோற்றுவிக்கும். இந்தப்பிரச்சினை போடோலாண்டுக்கோ அல்லது வடகிழக்கிற்கு மாத்திரம் உரிய ஒரு பிரச்சினையல்ல, முழு இந்தியாவிற்குமே உள்ள பிரச்சினையாகும். நாம் ஐக்கியப்பட்டு நிற்கவேண்டிய முக்கியமானதொரு தருணம் இதுவாகும் என்று அவர் அப்பேட்டியில் மேலும் கூறியிருக்கிறார்.

இங்கு ஒரு சுவாரஷ்யமான அம்சத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றவாசிகளின் வாக்குகள் மொஹிலாரிக்கு தேவையில்லை என்ற காரணத்தினால் அவரால் உண்மையைச் சொல்ல முடிகிறது. ஆனால் தேசிய அரசியல்வாதிகளோ அல்லது மாநில அரசியல்வாதிகளோ எண்பது இலட்சத்திற்கும் அதிகமான முஸ்லிம் குடியேற்றவாசிகளின் வாக்குப்பலத்தை அலட்சியம் செய்ய முடியுமா? அவர்களின் வாக்குப்பலம் இந்தியாவின் முஸ்லிம் வாக்காளர்களுடன் சேர்த்து அரசியல்வாதிகளுக்கு முக்கியமானதாகிறதல்லவா? உள்ளதை உள்ளபடி சொல்வதற்கு எந்தக்கட்சிக்காவது துணிச்சல் இருக்கிறதா? இல்லை என்றே தோன்றுகிறது.

### கிரிக்கெட் நடுவரின் காதல் விவகாரம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் உயர்மட்டக்குழுவைச்சேர்ந்தபிரபலமான நடுவர்களில் ஒருவரான அசாத் ரவூப் சர்ச்சை ஒன்றில் அகப்பட்டிருக்கிறார். பேராவலுடைய மும்பை மொடல் அழகியொருவரின் வலையில் அவர் விழுந்துவிட்டார். 56வயதான இவருக்கு பாகிஸ்தானில் மனைவியும் இரு பிள்ளைகளும் இருக்கிறார்கள். நடுவரை மயக்கிய அழகியின் பெயர் லீனா கபூர்.

இந்திய மொடல் அழகியையும் பாகிஸ்தான் நடுவரையும் கவர்ந்திழுக்கும் நாடாக இலங்கை மாறியிருக்கிறது. தன்னைத் திருமணம் செய்வதாக பொய் வாக்குறுதியொன்றை அளித்து மருட்சி காட்டிய ரவூப் 6 மாதங்களுக்கு மேலாக அவரின் இச்சைகளுக்காக தன்னைப் பயன்படுத்தியதாக லீனா மும்பை பொலிஸில் முறைப்பாடொன்றைச் செய்திருக்கிறார். கடந்த மார்ச் மாதமளவில் இலங்கையிலுள்ள நண்பரொருவரின் ஊடாக தாங்கள் இருவரும் சந்தித்துக் கொண்டதாகவும் நெருங்கிப் பழகியதாகவும் பிறகு இலங்கையில் தாங்கள் ஒன்றாகத் தங்கியிருக்கத் தீர்மானித்ததாகவும் அவர் கூறுகிறார். மும்பையில் இருந்து திரும்பிய பின்னரும் ரவூப்புடன் லீனா தொடர்புகளைப் பேணிவந்திருக்கிறார். ரவூப் மும்பையில் அந்த அழகியின் வீட்டிற்குக் கூட சென்று அவர் சுகவீனமுற்றிருந்தவேளை உதவி ஒத்தாசைகள் செய்திருக்கிறார். தங்களுக்கிடையிலான உறவு காதலாக மாறியதும், ரவூப்பிற்கு பாகிஸ்தானில் ஒரு குடும்பம் இருக்கின்ற போதிலும்கூட தன்னை மணப்பதாக அவர் உறுதியளித்தார் என்று கூறியிருக்கும் லீனா, தனது மதத்தின் பிரகாரம் அவ்வாறு செய்ய முடியும் என்று நம்பிக்கையூட்டியதாகவும் முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இந்தியன் பிரிமியர் லீக் -5 இன்போது நடுவராகப் பணியாற்றிய நாட்களில் கூட மும்பையில் லீனாவுடன் ரவூப் தங்கியிருந்திருக்கிறார். இவ்வாறாக அவர்களுக்கிடையேயான நெருங்கிய உறவு வளர்ந்து வந்திருக்கிறது. ஆனால் கடந்த சில வாரங்களாக ரவூப் தொடர்பைத் துண்டித்துக்கொண்டதாகவும் அவரைச் சந்திக்க முடியாமற் போய்விட்டதாகவும் லீனா முறையிட்டிருக்கிறார். லீனாவை தனக்குத் தெரியாதென்று இப்போது அவர் கூறுகிறாராம்.

அத்துடன் தன்னுடன் தொடர்பு கொள்ள மேலும் முயற்சிக்க வேண்டாம் என்றும் எச்சரித்திருக்கிறாராம். ●

சமகாலம் சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற அழையுங்கள்




7767702
7767703
7322736

7767704
2327827

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜூலியன் அசாஞ் வெளியேற வழி என்ன?

■ ஸ்பார்ட்டகஸ்

லண்டனில் உள்ள தென்னமெரிக்க நாடான ஈகுவடோரின் தூதரகத்திற்குள் தஞ்சமடைந்த விக்கிலீக்ஸ் இணையத்தள ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சுக்கு அந்த நாடு அரசியல் தஞ்சம் வழங்கிய நிலையில் அவர் அங்கிருந்து வெளியேற முடியாத நிலையில் பெரும் சிக்கலில் மாட்டுப்பட்டிருக்கிறார். தூதரகவளாகத்தை விட்டு அசாஞ் (41 வயது) வெளியேறுவாரேயானால், கைது செய்யப்பட்டு சுவீடனுக்கு நாடு கடத்தப்படுவார். அங்கு அவர் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும். அந்தக் குற்றச்சாட்டுகளை அவர் மறுக்கிறார். விக்கிலீக்ஸின் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட பாரதூரமான குற்றச்சாட்டுகள் தொடர்பில் தன்னை அமெரிக்காவுக்கு நாடுகடத்துவதற்கான முயற்சிகளின் ஒருபகுதியே இந்தப் பாலியல் குற்றச்சாட்டுகள் என்பதே அவரின் நிலைப்பாடாக இருக்கிறது.

சுவீடனுக்கு நாடுகடத்தப்படுவதை எதிர்த்து அசாஞ் தாக்கல் செய்திருந்த மூன்றாவது மேன்முறையீட்டு மனுவிலும் தோல்வி கண்டதையடுத்து ஐக்கிய இராச்சியத்தின் உச்சநீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பிணை நிபந்தனைகளை மீறியே அவர் கடந்த ஜூன் 19ஆம் திகதி ஈகுவடோர் தூதரகத்திற்குள் பிரவேசித்தார். பாலியல் வல்லுறவுக்காக சுவீடனில் அசாஞ் மீது இன்னமும் குற்றச்சாட்டுகள் முறைப்படி சுமத்தப்படவில்லை. விசாரணைக்காகவே அவரை நாடுகடத்தவேண்டுமென்று பிரிட்டனைக் கேட்டிருந்த சுவீடனின் ஸ்டொக்ஹோம் நீதிமன்றமொன்று அவருக்கு எதிராக 2010 நவம்பரில் சர்வதேசப் பிடியாணை பிறப்பித்திருந்தது. இதையடுத்து லண்டன் மெட்ரோபொலிடன் பொலிஸில் சரணடைந்த அவர் 2 இலட்சத்து 40 ஆயிரம் பவுண்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அசாஞ் இல்லாமல் வேறொரு சாதாரண மனிதர் சுவீடனில் பாலியல் குற்றச் செயல்களுக்காக விசாரணைக்கு தேவைப்படுகின்றார் என்றால் அந்த விவகாரம் உலகளாவிய கவனத்தைப்பெறும் சர்ச்சையாக மாறியிருக்கும் என்று யாராவது நம்ப முடியுமா?**




லண்டனிலுள்ள ஈகுவடோர் தூதரகத்தின் பல்கணியிலிருந்து ஊடகவியலாளருடன் உரையாடும் அசாஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாஞ்சுக்கு ஈகுவடோர் அரசியல் தஞ்சம் வழங்கியதையடுத்து அந்த நாட்டுக்கும் பிரிட்டனுக்கும் இடையே இராஜதந்திரச் சர்ச்சையொன்று மூண்டிருக்கிறது. ஈகுவடோர் தூதரகத்துக்கு இருக்கின்ற இராஜதந்திர அந்தஸ்தை இரத்துச் செய்வது குறித்து பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் விவேகமற்ற முறையில் ஒரு எச்சரிக்கையையும் கூடச் செய்தார். ஆனால், பிறகு தூதரகத்தின் வளாகத்திற்குள் ஒருபோதுமே அத்துமீறிப் போவதில்லை என்ற உறுதிமொழியை பிரிட்டிஷ் அரசாங்கம் ஈகுவடோருக்கு அளிக்க வேண்டியேற்பட்டது.

தூதரகத்திற்குள் அசாஞ் இருக்கும் வரை அவரை ஒன்றும் செய்யப்போவதில்லை என்று பிரிட்டன் உறுதியளித்திருக்கிறது. ஆனால் வெளியே காலடிவைப்பாரேயானால் அவரை பிரிட்டிஷ் பொலிஸார் நிச்சயம் கைது செய்வார்கள் என்பதில் எந்தச் சந்தேகத்துக்கும் இடமில்லை. தூதரகத்தைச் சுற்றி மேற்கொள்ளப்பட்டிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பயங்கரவாதத்தடுப்பு பிரிவுப்படையினரும் சம்பந்தப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்நிலையில், அசாஞ் வேண்டுமான காலம்வரை தங்களது தூதரகத்திற்குள் இருக்கலாம் என்று ஈகுவடோர் ஜனாதிபதி ராபீல் கொறியா கூறியிருக்கிறார். அசாஞ் பிரவேசித்த தருணம் முதலிருந்து 24 மணி நேரமும் ஈகுவடோர் தூதரகத்தைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். இந்த நடவடிக்கைகளுக்காக தினமும்



ஈகுவடோர் ஜனாதிபதி

பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு 50 ஆயிரம் பவுண்கள் செலவாகிறது. இது பிரிட்டிஷ் வரியிறுப்பாளர்களின் பணம். பிரிட்டனின் நிலைப்பாடு காரணமாக தினமும் இவ்வளவுபணம் வீணே செலவாகிறது. செலவாகட்டும் எமக்கு என்ன? என்று ஈகுவடோர் ஜனாதிபதி பரிகாசம் வேறு செய்திருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அசாஞ் தூதரகத்தில் இருந்து இரகசியமான முறையில் வெளியேறிச் சென்றால், அது பிரிட்டனுக்குப் பெரும் அவமானமாகப் போய்விடும். இந்தச் சிக்கலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வழிதான் என்ன என்பதே இப்போது விடை வேண்டி நிற்கும் பிரதான கேள்வி.


பிரிட்டனுடன் மூண்டிருக்கும் தகராறில் ஈகுவடோருக்கு ஆதரவாக அதன் சக தென்னமெரிக்க நாடுகள் நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றன. இருவாரங்களுக்கு முன்னர் அவசரக்கூட்டமொன்றை நடத்திய தென்னமெரிக்க நாடுகளின் ஒன்றியத்தின் வெளியுறவு அமைச்சர்கள் ஈகுவடோருக்கான ஒருமைப்பாட்டை வெளிக்காட்டி ஏகமனதாகத் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தார்கள். தென்னமெரிக்காவின் கன்சர்வேட்டிவ் தலைவர்களான சிலியின் செபஸ்ரியன் பினேறா மற்றும் கொலம்பியாவின் ஜுவான் மனுவேர் சான்டோஸ் தொடக்கம் தீவிரவாதத்தலைவர்களான பொலிவியாவின் ஈவோ மொறேல்ஸ் மற்றும் வெனிசூலாவின் ஹியூகோ ஷாவேஸ் வரை ஈகுவடோர் ஜனாதிபதி கொறியாவிற்கு ஆதரவாக நிற்கிறார்கள்.

சுவீடனுக்கு நாடு கடத்தப்படுவதை அசாஞ் எதிர்பார்ப்பதற்குக் காரணம் அந்த நாட்டு அரசாங்கம் தன்னை அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிடுமென்ற அச்சமேயாகும். அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டால், அதன் இராணுவ இரகசியங்களை அம்பலப்படுத்தியதாக அவர் மீது அமெரிக்க நிருவாகம் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்து சிறையிலடைத்துவிடுமென்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மரணதண்டனை கூட வழங்கப்படலாம்.

அசாஞ்சுக்கு ஈகுவடோர் அரசியல் தஞ்சத்தை வழங்கியிருக்கின்றது என்பதற்காக அதன் மனித உரிமைகள் மற்றும் குடியியல் சுதந்திர நிலைவரங்கள் ஒன்றும் சிறப்பானவையாக இருக்கின்றன என்று கூறிவிடமுடியாது. அதன் நிலைமையும் அமெரிக்காவில் உள்ளதைப் போன்றதே

# வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள்

கம்யூனிச எதிர்ப்பாளரான கத்தோலிக்க கார்டினல் ஜோசெவ் மிண்ட்சென்ரி 1956 இல் புடாபெஸ்ட் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்குள் பிரவேசித்து அரசியல் தஞ்சம் கோரினார். தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளின் பேரில் முன்னதாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர் அதே ஆண்டில் இடம்பெற்ற ஹங்கேரிப் புரட்சியின் போது விடுதலை செய்யப்பட்டார். அரசியல் தஞ்சம் கோரிய பிறகு தூதரக வளாகத்தைவிட்டு வெளியேற முடியாத நிலையில் அதற்குள்ளேயே அவர் 15 வருடங்கள் தங்கியிருக்க வேண்டியதாயிற்று. இறுதியில் வியன்னாவுக்குச் சென்று அஞ்ஞாதவாசம் செய்வதற்கு கார்டினல் மிண்ட்சென்ரி இணங்கியதையடுத்தே வெளியேற அனுமதிக்கப்பட்டார்.



ஆர்ஜன்டனோவில் இரகசியமாகத் தங்கியிருந்த நாஜி போர்க்குற்றவாளி அடொல்ப் ஈச்மனைப் பிடிப்பதற்கான நடவடிக்கையில் 1960 ஆம் ஆண்டு இரகசிய பாதுகாப்புச் சேவையின் ஒரு பிரிவு இறங்கியது. அவரை மடக்குவதற்கான நீண்ட செயற்பாடுகளின் இறுதியில் ஈச்மனின் அடையாளத்தையும் உறுதிப்படுத்திக் கொண்ட இஸ்ரேலியர்கள் இராஜதந்திர முறையில் நாடுகடத்துவிப்பதென்பது நெருக்கடிமிக்கதாக அமையுமென்பதைப் புரிந்துகொண்டு, ஆளை இரகசியமாக ஆர்ஜன்டனோவிலிருந்து கடத்திச் செல்வதற்கு திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். மனித உரிமைகள் நிலைவரங்களை மேம்படுத்துமாறு சீனாவையும் உலகின் பலநாடுகளையும் அமெரிக்கா எப்போதுமே வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, அசாஞ்சுக்கு ஆயிரக்கணக்கான மின்னஞ்சல்களையும் பாதுகாப்புடன் தொடர்புடைய ஆவணங்களையும் வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் அமெரிக்க புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த படைவீரர் (பிரைவேட்) பிரட்லிமானிங்கை கன்சாஸ் மாநிலத்தில் உள்ள லீவின்வோர்த் சிறையில் விசாரணையேதுமின்றித் தடுப்புக்காவலில் வைத்திருப்பதைத் தவறான காரியமாக எண்ணுவதற்கு ஒபாமா நிருவாகம் தயாராயில்லை.

அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டால், தனக்கு ஏற்படக்கூடிய கதி குறித்து அசாஞ் அஞ்சுவதில் என்ன தவறு இருக்கிறது? ஒரு வருடகாலமாக தடுப்புக்காவலில் இருக்கும் மானிங் தினமும் 23 மணித்தியாலங்கள் தன்னந்தனியாகவே விடப்படுகிறார். அசாஞ் மீது வழக்குத் தொடருவதற்கு வகைசெய்யக்கூடிய சான்றுகளைவழங்குவதற்குமானிங்கை நிர்ப்பந்திப்பதற்கென்று வடிவமைக்கப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் அவர் 8 மாதங்களாக வைக்கப்பட்டிருந்தார். அந்தக்கால கட்டத்தில் அவர் நிர்வாணமாக்கப்பட்டே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மானிங்கை அமெரிக்க அதிகாரிகள் நடத்துகின்ற முறைமை மனிதத்தன்மையற்றது என்று பல சட்டத்துறை நிபுணர்களும் சித்திரவதைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளரும் கண்டனம் செய்திருந்தனர். மானிங்கிற்கு இழைக்கப்பட்டிருக்கக்கூடிய துன்புறுத்தல்களை அவர்கள் சித்திரவதை என்றே வர்ணித்திருப்பதையும்காணக்கூடியதாக இருக்கின்றது. அதனால், தன்னை அமெரிக்கர்கள் வேறுவிதமாக நடத்துவார்கள் என்று அசாஞ் நினைப்பதற்குக் காரணம் ஏதுமில்லை.

அசாஞ்சும்அவரது சகாக்களும்வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த போர்க்குற்றங்களைச்செய்ததாகக்கூறப்படும்உயர்மட்ட அரசாங்க அதிகாரிகளை விசாரணைக்குட்படுத்துவதை விடவும் ஒரு ஊடகவியலாளரையும் பிரசுரகர்த்தாவையும் விசாரணை செய்வதிலேயே அமெரிக்க அரசாங்கம்சிரத்தைகாட்டுகிறது. அரசாங்கத்தின் தவறான நடத்தைகளை அம்பலப்படுத்துவதற்குத் துணிச்சல் கொள்கின்றவர்களுக்கு, துஷ்பிரயோகங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதில் அக்கறை காட்டுகிறவர்களுக்கு, பாசாங்குத்தனத்தைத் தோலுரித்துக்காட்டி ஜனநாயகத்தை வலுப்படுத்த விரும்புகிறவர்களுக்கு, ஒளிவுமறைவற்ற தன்மையில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அமெரிக்கா சொல்ல விரும்புகின்ற செய்தியை உணர்ந்து கொள்வதில் எவருக்கும் சிரமம் இருக்கமுடியாது. சுருக்கமாகச் சொல்லப் போனால், உண்மைக்காகப் போராடும் ஒரு ஊடகவியலாளருக்கும், பிரசுரகர்த்தாவுக்கும் அவரின் அரசியல் கருத்துகளுக்காகஅட்டூழியம்செய்யஅமெரிக்கா நாட்டம் கொண்டிருக்கிறது.

இத்தகையதொரு பின்புலத்திலேயே ஈகுவடோர் அரசாங்கம் அசாஞ்சுக்கு தஞ்சம் வழங்குவதற்கான தீர்மானத்தை எடுத்தது. தஞ்சமளிக்கப்படுவதற்கு அசாஞ் முற்றுமுழுதான தகுதியைக் கொண்டவர். அதற்காக ஈகுவடோருக்கு எதிராகச் செயற்படுவதற்கு பிரிட்டனோ, அமெரிக்காவோ தலைப்படுமானால் அது சர்வதேச சட்டங்களை மீறுவதாகவே அமையும். தஞ்சம் வழங்குவதென்பது ஒரு அமைதியான, மனிதாபிமான நடவடிக்கை. அதை பகைமையாகக் கருதமுடியாது

பத்திரிகைச் சுதந்திரத்தையும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் பேணுவதில், உலகிற்கு தலைமை தாங்குவதாக உரிமை கோரில் பெருமைப்படுவதற்கு அமெரிக்கா ஒருபோதும் பின்னிற்பதில்லை. இவ்விரு சுதந்திரங்களும் ஜனநாயக அரசுக்கான அத்திவாரங்கள் என்று உலகிற்குப் போதனை செய்வதற்கு அமெரிக்கா பின்னிற்பதில்லை. அதே வேளை, அரசாங்கங்கள் தங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக உணரும் போது அல்லது தகவல்கள் வெளியிடப்படுவதால் அசௌகரியத்துக்கு உள்ளாவதாக உணரும் போது இந்தச் சுதந்திரங்கள் எல்லாம் என்ன இறந்தா போய் விடுகின்றன? உண்மையிலேயே, அரசாங்கங்கள் உட்பட வல்லமை பொருந்தியவர்களை எதிர்த்து நிற்பதற்குத் துணிச்சல் கொள்பவர்களுக்கே அடிப்படைப் பேச்சுச் சுதந்திரத்தினால் வழங்கப்படுகின்ற பாதுகாப்பு மிகவும் கூடுதலான அளவுக்குத் தேவைப்படுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அசாஞ்சைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு அமெ

# சம்பந்தப்பட்ட முன்னைய தஞ்ச சர்ச்சைகள்

மொன்றை வகுத்தார்கள். ஈச்மன் தனது அலுவலகத்தில் பணியை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் வழியில் கார் பழுதடைந்து விட்டதாக நாடகமொன்றை அரங்கேற்றிய இஸ்ரேலியப் படையினர் அவரைப் பிடித்துக் கட்டிப் போட்டு இரகசிய இடமொன்றுக்கு விரைந்தனர். பிறகுஈச்மனுக்குமயக்கமருந்தையூட்டிவிமானப் பணியாளரின் சீருடையணிவித்து இஸ்ரேலுக்கு விமானத்தில் அவர்கள் கொண்டு சென்றனர். இஸ்ரேலியர்களின் இந்த நடவடிக்கை ஆர்ஜன்டனோவின் இறைமையை மீறியதாக இருந்த போதிலும், ஈச்மனுக்கு எதிரான விசாரணை முன்னெடுக்கப்பட்டது. இறுதியில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

முன்னாள் சோவியத் தலைவர் ஜோசப் ஸ்ராலினின் மகள் சுவெட்லானா அலிலுயேவா காலஞ்சென்ற கணவரின் அஸ்தியை இந்தியாவில் தூவுவதற்காக 1966 ஆம் ஆண்டு சோவியத் யூனியனை விட்டு வெளியேறினார். புதுடில்லியை வந்தடைந்ததும், அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்திற்குள் சென்று அவர் அரசியல் தஞ்சம் கோரினார். கம்யூனிசத்தைக் கண்டனம் செய்த சுவெட்லானா தனது சோவியத் கடவுச்சீட்டையும் தீயில் பொசுக்கினார். தந்தையாரை தார்மீக நெறியற்ற ஒரு பிசாசு என்று வர்ணித்தார். அமெரிக்காவுக்குச் சென்ற பிறகு தனது பெயரை லாறாபீட்டரிஸ் என்று மாற்றிக்கொண்ட அவர் மூன்று தடவைகள் திருமணம் செய்து மூன்று பிள்ளைகளுக்குத் தாயானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்கா இதுவரை பிரிட்டனிடமோ அல்லது சுவீடனிடமோ வேண்டுகோளை விடுக்கவில்லை என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதொரு அம்சமாகும். அமெரிக்காவுடன் சுவீடன் இரகசிய உடன்பாடொன்றுக்கு வந்திருப்பதாகவும் அசாஞ்சுக்கு எதிராகக் கூறப்படும் பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் தொல்லைக் குற்றச்சாட்டுகள் இட்டுக் கட்டப்பட்டவை என்றும் அவரின் ஆதரவாளர்கள் உறுதியாக நம்புகிறார்கள். அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்படமாட்டார் என்ற உறுதியான உத்தரவாதம் அளிக்கப்படுமேயானால், அசாஞ் சுவீடனுக்குச் செல்வார் என்றும் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். அத்தகைய உத்தரவாதத்தை சுவீடனோ அல்லது பராக் ஒபாமாவோ வழங்கமுடியும். ஆனால், அதைச் செய்ய அவர்கள் தயாராயில்லை.

அசாஞ் விவகாரம் பிரிட்டனில் சுவாரஸ்யமான ஒரு விவாதத்தையும் மூளவைத்திருக்கிறது. அமெரிக்காவுக்கு சேவகம் செய்வதில் சுவீடனா, பிரிட்டனா திறமைசாலி என்பது பற்றியதே அதுவாகும். அத்துடன் பாலியல் வல்லுறவு (Rape) என்பதற்கான வரைவிலக்கணம் குறித்தும் சர்ச்சை மூண்டிருக்கிறது. அசாஞ் தன்னைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டும் பெண்ணும் அவர் தன்னை பாலியல் தொந்தரவு செய்ததாகக் குற்றஞ்சாட்டும் பெண்ணும் இணக்கத்துடனேயே அவருடன் பாலியல் தொடர்புக்குச் சென்றதாகவும் கூட சந்தேகப்படுகின்றன.

அசாஞ்சை பிரிட்டன், சுவீடனிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அவர் அமெரிக்காவிடம் கையளிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் அதிகம் என்று நம்புவதற்கு சுவீடிஷ் அரசாங்கம் நடந்துகொள்கின்ற முறையும் முக்கிய காரணமாகிறது. அமெரிக்காவுக்கு அவர் நாடுகடத்தப்படமாட்டார் என்ற உறுதிமொழியைத் தருமாறு ஈகுவடோர் விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்க சுவீடன் மறுக்கிறது. சுவீடனில் இன்னமும் அவருக்கு எதிராக முறைப்படிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்படவும் இல்லை. லண்டனுக்கு வந்து தூதரகத்திற்குள் வைத்து அவரை விசாரணை செய்யுமாறு ஈகுவடோர் விடுத்த அழைப்பையும் கூட சுவீடன் நிராகரித்து விட்டது.

அமெரிக்க நிருவாகத்தின் வெளியுறவுக் கொள்கையைக் கடுமையாக விமர்சிக்கும் அமெரிக்க பேராசிரியரான நோம் ஷோம்ஸ்கி பின்வருமாறு கூறுகிறார்.

"அசாஞ் அமெரிக்காவின் ஆவணங்களையன்றி, ரஷ்யாவின் ஆவணங்களையே அம்பலப்படுத்தினார் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக்கொள்ளுங்கள். பிரிட்டனில் வைத்து அவரை விசாரணை செய்வதற்கும் ரஷ்யாவுக்கு அவர் நாடுகடத்தப்படமாட்டார் என்று உறுதியளிப்பதற்கும் சுவீடன் ஒரு கணமேனும் தயக்கம் காட்டியிருக்கமாட்டாது. இந்த ஒப்பீட்டை நியாயமற்றது என்று நினைக்கின்ற எவருமே சமகால அரசியலைப்பற்றி சில விடயங்களைப் படிக்கவேண்டியிருக்கிறது. பல உதாரணங்கள் தேவையில்லை, ஒன்றே போதும். பிரட்லி மானிங்கை அமெரிக்க அதிகாரிகள் கிறிமினல்த்தனமாகக் கொடுமைப்படுத்துகின்றமை ஒன்றே போதுமே உண்மையை விளங்கிக்கொள்வதற்கு."

இந்த இடத்தில் முக்கியமான கேள்வி, அசாஞ் அன்றி வேறொரு சாதாரண மனிதர் சுவீடனில் பாலியல் குற்றச்செயல்களுக்காக விசாரணைக்குத் தேவைப்படுகிறார் என்றால், அந்த விவகாரம் உலகளாவிய கவனத்தைப்பெறும் ஒரு சர்ச்சையாக மாறியிருக்குமென்று யாராவது நம்பமுடியுமா? அல்லது ஈகுவடோர் தூதரகத்தின் இராஜதந்திர அந்தஸ்தை இடைநிறுத்தி, அதன் வளாகத்திற்குள் பலவந்தமாகப் பிரவேசிக்கப்போவதாக பிரிட்டிஷ் அரசாங்கம் அச்சுறுத்தலை விடுத்திருக்குமா? அல்லது தூதரகத்தைச் சுற்றி பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் அடிக்கு ஒருவராக பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பரா?

அமெரிக்க இராணுவத்தின் இரகசிய அறிக்கைகளையும் ஆயிரக்கணக்கான இராஜதந்திரக் கேபிள்களையும் இரு வருடங்களுக்கு முன்னர் அம்பலப்படுத்தி உலகை வியப்பிலாழ்த்திய விக்கிலீக்ஸின் நடவடிக்கைகளை ஒரு கணம் திரும்பி நினைத்துப்பாருங்கள். அமெரிக்காவின் போர்க்குற்றங்கள், ஈராக்கில் கொலைக் குழுக்களுடன் அமெரிக்க இராணுவத்தினருக்கு இருந்த தொடர்புகள், அமெரிக்காவினதும் அதன் நேசஅணி நாடுகளினதும் சூழ்ச்சித்தனமான பொய்கள், போர்கள் பற்றிய பொய்ப்புரட்டுத் தகவல்கள், ஐக்கிய நாடுகள் அதிகாரிகளை உளவுபார்த்த அமெரிக்காவின் சட்ட விரோத கைங்கரியங்கள், உலகம் பூராகவும் செய்த ஏமாற்றுகள், ஊழல் மோசடிகள் - இவையெல்லாவற்றையும்

ஐக்கிய இராச்சியத்தில் அஞ்ஞாத வாசம் செய்த முன்னாள் போக்குவரத்து அமைச்சர் உமாறா டிக்கோவை 1984ஆம் ஆண்டு இராஜதந்திரப் பொதியொன்றுக்குள் போட்டுக் கடத்திச் செல்வதற்கு நைஜீரிய அரசாங்கம் முயற்சியொன்றை மேற்கொண்டது. நடைப் பயிற்சிக்காக வெளியே சென்றசமயம் அவரைப்பிடித்து நைஜீரியர்கள் மயக்க மருந்தை ஏற்றிய பிறகு பெட்டியொன்றிற்குள் போட்டனர். இக்கடத்தல் சம்பவத்தை நேரில்கண்ட டிக்கோவின் செயலாளர் பிரிட்டிஷ் அதிகாரிகளை உசார்படுத்தினார். சோதனை நடத்திய அதிகாரிகள் பெட்டிகளில் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் இராஜதந்திர உடைமை என்ற நோட்டீஸ் ஒட்டப்படாதிருந்ததைக் கண்டனர். பெட்டியைத் திறந்த அதிகாரிகள் அதற்குள் டிக்கோ காயமெதுவுமின்றிக் கிடந்ததைக் கண்டனர். லண்டனில் உள்ள நைஜீரிய உயர் ஸ்தானிகரகத்தின் இரு உறுப்பினர்களை வெளியேற்றிய பிரிட்டன் நால்வருக்கு எதிராக வழக்கைத் தொடுத்தது. அவர்கள் இறுதியில் குற்றவாளியாகக் காணப்பட்டனர்.



1989ஆம் ஆண்டு பனாமா சர்வாதிகாரி மனுவேல் நொறீகா தனது நாட்டுக்குள் அமெரிக்கப்படைகள் ஆக்கிரமித்து தன்னைபதவிகவிழ்க்க முயற்சித்த போது லத்திக்கான் தூதரகத்திற்குள் ஓடிச் சென்றார். ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு வத்திக்கான் தூதரகத்தில் அவர் தஞ்சம் தேடிக்கொண்டார். தூதரகத்தைச்சுற்றி நின்ற அமெரிக்கப் படையினர் ஒலிபெருக்கிகள் மூலமாக நொறீகாவைச் சரணடையுமாறு கோரினர். இறுதியாக 10 நாட்கள் கழித்துச் சரணடைந்த அவர் மீது போதைப் பொருட்களைக் கடத்தியதாக வழக்குத் தொடரப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டார்.



சீன மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஷென்குவாங் ஷெங் 2012 இவ்வருடம் வீட்டுக் காவலில் இருந்து தப்பிச் சென்று பெய்ஜிங்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய தெளிவான சான்றாதாரங்களை உலகின் முன்கொண்டுவந்தது விக்கிலீக்ஸ் அல்லவா?

அரபு வசந்தம் மக்கள் புரட்சிகளுக்கு உற்சாகத்தை விக்கிலீக்ஸ் அளித்தது. பதில் கூறவேண்டிய அரசாங்கங்களின் கடப்பாட்டைப் பற்றி உலகம் பூராகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை விக்கிலீக்ஸ் ஏற்படுத்தியது. ஆரம்பம் முதலிருந்தே அமெரிக்கா தனது நலன்களுக்குஒருபாரதூரமானஅச்சுறுத்தலாக விக்கிலீக்ஸைக் கருதியது. அந்தரங்கமான அமெரிக்க கேபிள்களை வெளியிட்ட விக்கிலீக்ஸின் செயலை ஒரு "கிறிமினல் நடவடிக்கை" என்று சீற்றத்துடன் வர்ணித்ததன் மூலம் இதை அமெரிக்கா உலகிற்கு வெளிக்காட்டியது.




அமெரிக்க உப ஜனாதிபதி ஜோ பிடென் 'Hi-tech Terrorist' என்று ஜுலியன் அசாஞ்சை வர்ணித்தார். அமெரிக்க நிருவாகத்தின் பல உயர்மட்ட அதிகாரிகள் அசாஞ்சை வேட்டையாடிக் கொல்ல வேண்டுமென்று பகிரங்கமாகவே கூறினார்கள். விக்கிலீக்ஸுக்கு அமெரிக்க ஆவணங்களை வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கொடுமைக்குள்ளாக்கப்படும் 24 வயதான படைவீரர் பிரட்லி மானிங் 52 வருடங்கள் சிறையிலடைக்கப்படக்கூடிய ஆபத்து இருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் நோக்கங்கள் குறித்து "தான்தோன்றித்தனமான" குற்றச்சாட்டுகளைக் கூறி அசாஞ் இப்போது சுவீடனில் தான் எதிர்நோக்க வேண்டியிருக்கும் வழக்குகளில் இருந்து உலகின் கவனத்தைத் திசை திருப்ப முயற்சித்துக் கொண்டிருக்கிறார் என்று ஒபாமா நிருவாகம் கடந்தவாரம் கூறியிருந்தது.

வேவுபார்த்ததாக அசாஞ்ச் மீதும் விக்கிலீக்ஸ் மீதும் வழக்குத் தொடருவதற்கான ஏற்பாடுகளில் வேர்ஜீனியா மாநிலத்தில் உள்ள கிராண்ட் ஜுரி ஒருவர் ஈடுபட்டு வருகின்றார். வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக குற்றச்சாட்டுகளின் தகுதி பற்றி ஆராய்வதற்காக தெரிவுசெய்யப்படும் சட்டத்துறை அதிகாரியே அமெரிக்காவில் கிராண்ட் ஜுரி (Grand Jury) எனப்படுகிறார். இவ்வருட ஆரம்பத்தில் கசிந்த இரகசிய தகவல் ஒன்றின்படி அசாஞ்சுக்கு எதிரான குற்றப்பத்திரத்தைசீல்வைத்துஏற்கனவே அமெரிக்க அரசாங்கம் விநியோகித்து விட்டதாகவும் தெரியவந்திருப்பதாக லண்டன் கார்டியன் பத்திரிகையில் சில தினங்களுக்கு முன்னர் சியூமஸ் மில்னே என்ற அவதானி எழுதியிருக்கிறார். விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் முன்னென்றுமில்லாத வகையில் அளவிலும் இயல்பிலும் பிரமாண்டமான ஒரு விசாரணையின் இலக்காகவிளங்குவதாகஅவுஸ்திரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். விக்கிலீக்ஸின் பாதையில் வேறு எவரும் எதிர்காலத்தில் செல்வதற்கு துணிச்சல் கொள்வதைத் தடுப்பதும் அமெரிக்காவின் முக்கிய அக்கறைகளில் ஒன்றாகும்.

தனது எதிரிகளை அவர்கள் உண்மையான எதிரிகளோ அல்லது கற்பனையான எதிரிகளோ எவராக இருந்தாலும்- கடத்திச் சென்று துன்புறுத்தி சட்ட விரோதமாக சிறையிலடைப்பதை பல தசாப்தங்களாக செய்துவருகின்ற ஒரு அரசு பராக் ஒபாமாவின் கீழ் வேறுவிதமாகச் செயற்படவா போகிறது? ●

பிரவேசித்தார். தற்கல்வி முறையிலான சட்டத்தரணியான அவர் ஏற்கனவே பல தடவைகள் சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தார். ஏழை விவசாயிகளினதும் உடல் ஊனமுற்றவர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்ப தற்காகப் போராடியதுடன், வலுக்கட்டாய கருச்சிதைவு, மலடாக்கல் தேசிய செயற்பாடுகளையும் அம்பலப்படுத்தியதன் காரணமாக சர்வதேச மனிதஉரிமைகள் அமைப்புகள் மத்தியில் அவர் நன்கு அறியப்பட்டவராக விளங்கினார்.




கடந்த மே மாதம் சீன அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளையடுத்து ஷென்னுக்கும் மனைவி பிள்ளைகளுக்கும் அமெரிக்க விசா வழங்கப்பட்டது. நியூயோர்க்கிற்குச் செல்வதற்கு அவர் கள் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் சீன பொலிஸ் உயரதிகாரியான வாங்லியும் ஷெங்டு நகரில் உள்ள அமெரிக்க உதவித் தூதரகத்திற்குள் ஓடிச்சென்று நீல் ஹேவூட் என்ற பிரிட்டிஷ் வர்த்தகப் பிரமுகரின் கொலை தொடர்பான தகவல்களை வெளியிட்டார். அதிகாரி களின் பார்வையில் படாமல் உதவித் தூதரகத்திற்குள் சென்று விட வேண்டுமென்பதற்காக அவர் விக் (பொய்முடி) ஒன்றை அணிந்து கொண்டு சென்றதாகவும் ஹேவூட் கொலை செய்யப்பட்டதற்கான சான்றாக அவரின் இதயத்தின் ஒருதுண்டையும்எடுத்துச்சென்றதாகவும் கூறப்பட்டது. அக்கொலை தொடர்பான வழக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு ஒரு அரசியல் வாதியின் மனைவியான குகாய் லாய் மீது விசாரணைகள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. வாங்லியுன் அமெரிக்க உதவித் தூதரகத்தை விட்டு வெளியே வந்த போது சீன அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக தற்போது இரகசியமாக விசாரணைகள் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றன. ●



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மத்தியகிழக்கு அரசியல்



## அசாத்தின் இறுதி மூச்சு:

# உச்சக்கட்டத்தை அடையும் அரபு வசந்தம்



குமார் டேவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மதிப்பீடு செய்வது எப்போதுமே புத்திசாலித்தனமான காரியமாக இருப்பதில்லை. ஆனால், இன்னுமொரு சர்வாதிகாரியான சிரியாவின் பஷீர் அல்-அசாத் மிகவிரைவில் அதிகாரத்தில் இருந்து தூக்கியெறியப்படுவது சாத்தியம் என்றே தோன்றுகிறது; அவர் ஒரு மின்கம்பத்தில் கட்டித்தொங்கவிடப்படுவதைக் காண நான் விரும்புகிறேன். ஆனால், முபாரக்கைப் போன்று அசாத்தும் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டு சிறையிலடைக்கப்படுவாரேயானால், அதுவே சிரிய மக்களுக்கு திருப்தி தரக்கூடும். உண்மையிலேயே கடாபியின் கதியே அசாத் துக்கும் நேரவேண்டும். அசாத்தின் முடிவு மக்கள் கிளர்ச்சிகள் மூண்டிருந்த ஆறு அரபு நாடுகளில் ஐந்து நாடுகளில் புரட்சியைப் பூரணப்படுத்தும். முதலில் டியூனிசியாவில் மூண்ட மக்கள் கிளர்ச்சி பிறகு எகிப்து, லிபியா, யேமன் ஆகிய நாடுகளுக்குப் பரவி இப்போது சிரியாவில் உச்சநிலையில் இருக்கிறது. சிறிய அரபு நாடான பஹ்ரேயினில் மாத்திரம் இந்தப்புரட்சி முன்னேற்றத்தைக் காணமுடிய வில்லை.

ஆறு நாடுகளிலுமான புரட்சிகளை ஒரு தனிக்கட்டுரையில் விளக்கிக் கூறுவது சாத்தியமானதல்ல, அதனால் மூன்றைப் பற்றி மாத்திரம் அலச விரும்புகின்றேன். அரபுலகில் எகிப்துக்கு இருக்கின்ற முக்கியத்துவம், லிபிய நெருக்கடியில் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் ஆகியவை காரணமாக அவ்விரு புரட்சிகளைப்பற்றியும் சிரியாவில் தற்போது தீவிரமடைந்திருப்பதால் அந்தப் புரட்சி பற்றியும் கருத்துகளைப் பரிமாற விரும்புகின்றேன். மக்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்குவதன் மூலம் ஆட்சி செய்வதுடன், மக்களால் விரும்பப்படாத பட்சத்திலும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க முயற்சிக்கும் கொடுங்கோன்மைக்காரர்கள் பதவிகளில் இருந்து விரட்டியடிக்கப்படுவார்கள் என்பதே இங்கு பொதுவான பேசு பொருளாகும். ராஜபக்ஷ சகோதரர்களுக்கும் இதில் ஒரு பாடம் இருக்கிறது; மக்கள் பொறுமையிழந்து கிளர்ந்தெழத் தொடங்குவார்களேயானால், வெள்ளை வான்களினாலோ, ஆட்கடத்தல்களினாலோ, அல்லது அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தினாலோ எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை.

எகிப்தியப்புரட்சியின் முழு அம்சங்களையும் நான் இங்கு விளக்கப்போவதில்லை. ஆனால், ஜனாதிபதி முர்ஷி பதவியேற்ற இறுதிக்கட்டம் பற்றியும் மக்களினால் ஜனநாயகரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதிக்கும் இரத்தம் குடிக்கும் இராணுவத்துக்கும் இடையில் மூள ஆரம்பித்திருக்கும் தற்போதைய சஞ்சலமான உறவுகள் குறித்தும் கவனம் செலுத்த விரும்புகிறேன். லிபியாவைப் பொறுத்தவரை ஒரேயொரு அம்சத்தின் மீது - அதாவது புரட்சிவாதிகள் முதலாளித்துவ மேற்கு நாடுகளிடமிருந்தும், நேட்டோவிடமிருந்தும் எப்போது உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற விடயம் மீது அக்கறை காட்ட விரும்புகிறேன்.

எகிப்திய அனுபவத்திலிருந்து உண்மையில் இரு எதிர்மறையான பாடங்களைக் கற்கக்கூடியதாக இருக்கிறது. இரு தவறுகளை எகிப்திய புரட்சிக்காரர்கள் இழைத்த போதிலும், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழ்நிலைகள் மிகவும் சாதகமானவையாக இருந்த காரணத்தினால் அனர்த்தத்தை மயிரிழையில் தவிர்க்கக்கூடியதாக இருந்தது. முதலாவது தவறு ஒரு சர்வாதிகாரியை பதவியில் இருந்து அகற்றுவதில் மாத்திரம் அக்கறையைக் காட்டிய அதேவேளை, பழைய அரசுக் கட்டமைப்பை மாற்றியமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அரசுக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் போராட்டம் இன்னமும் தொடருகிறது. முற்றுப்பெறவில்லை. இரண்டாவது தவறு - எகிப்திய புரட்சிவாதிகள் மத்தியில் காணப்படும் மதப்பிரிவினைவாதமாகும். இதனால் அவர்கள் உண்மையில் இருக்க வேண்டிய நிலையையும்விட மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறார்கள்.

எகிப்திய புரட்சி பெப்ரவரிப்புரட்சி என்று வர்ணிக்கப்படுகிறது. 2011 பெப்ரவரியில் இடம்பெற்ற காரணத்தினால் அல்ல. 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் இருந்து பெறக்கூடியதாக இருந்த அனுபவங்களின் அடிப்படையில் சரித்திரவியலாளர்கள் "பெப்ரவரிப் புரட்சி", "அக்டோபர் புரட்சி" என்று மொழிவழக்குக்குரிய இரு பதங்களை உருவாக்கியிருக்கிறார்கள். பெப்ரவரிப் புரட்சியென்பது அரைவாசித் தூரம் சென்று சார்மன்னரை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்தது. ஆனால் பழைய அரசும் இராணுவ கட்டமைப்புகளும் மாறாமல் உள்ளபடியே இருந்தன. இந்தக் கட்டமைப்புக்கள் நிர்மூலம் செய்யப்பட்டு அவற்றின் இடத்தில் சோவியத் ஆட்சி ஏற்படுத்தப்பட்டபோது அக்டோபரில்தான் புரட்சி முழுமைப்படுத்தப்பட்டது. இதுவரையில் எகிப்தில் நடைபெற்றதும் ஒரு அரைவழிப்புரட்சியேயாகும்; முபாரக் அதிகாரத்திலிருந்து தூக்கியெறியப்பட்ட போதிலும், பழைய அரசுக்கட்டமைப்புகள் குறிப்பாக, இராணுவத்தின் கட்டுப்பாடு தொடரவே செய்தன.

எகிப்து ஒரு வெளிப்படையான இராணுவ சர்வாதிகார அரசாகும்; ஊடுருவிப் பரவும் பொருளாதார ஆதிக்கம், ஒடுக்குமுறை, எதிரணி அரசியல்வாதிகள் சிறையிலடைப்பு, மோசடியான தேர்தல்கள், பெருவாரியான வரப்பிரசாதங்கள்- இவைதான் நிறுவனக் கட்டமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகத்துறையைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் படுமோசமான ஊழல் மோசடிகள் மூலம் பெரும் பயனடைந்தார்கள். இராணுவ உயர் குழாமுக்குப் பின்னாலேயே எகிப்தின் முதலாளித்துவ சக்திகள் அணி சேர்ந்து நிற்கின்றன. இந்த நிலைவரத்தை நியூயோர்க் ரைம்ஸ் பின்வருமாறு வர்ணித்திருக்கிறது.



எகிப்திய இராணுவம் உபசரிப்பு நிலையங்களை, கடற்கரைவிடுமுறைக்களிப்பு நிலையங்களை நடத்துகிறது. தொலைக்காட்சிப்பெட்டிகளைத் தயாரிக்கிறது. ஜீப்களை, மரத்தளபாடங்களை, சலவை இயந்திரங்களைத் தயாரிக்கிறது. ஒலிவ் எண்ணெய் மற்றும் தண்ணீர் போத்தல்களையும் கூடத்தயாரிக்கிறது. இத்தகைய பரந்தளவிலான தொழில்துறைக் கட்டமைப்புகளில் இருந்து வரி எதுவும் செலுத்தப்படுவதில்லை. கட்டாயமாக வேலைக்குச் சேர்க்கப்பட்ட ஊழியர் படையணியே இந்தத் தொழில்துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. சலுகைவிலைகளில் அரச காணிகளை எகிப்திய இராணுவம் கொள்வனவு செய்கிறது. பாராளுமன்றத்துக்கோ, பொதுமக்களுக்கோ எதையும் வெளிப்படுத்துவதில்லை. இத்தகைய பொருளாதாரத்தில் இருந்து பெற்று வருகின்ற வரப்பிரசாதங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை இராணுவம் எடுக்கிறது.

முபாரக்கின் தோல்வி, இராணுவத்துக்கு எதிரான மக்களின் அதிகாரச் சமநிலையை மேம்படுத்தியிருக்கிறது. இதுதான் அதன் முக்கியத்துவம். ஆனால் அரசை அது மாற்றியமைக்கவில்லை. எகிப்தியப் புரட்சியின் இலக்கு பூர்த்தி செய்யப்படவில்லை. பெப்ரவரியை அக்டோபராக மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது. இராணுவம் அரசியல் தலையீடு செய்து புரட்சியின் பலாபலன்களைத் தலைகீழாகப்புரட்டிவிட முயற்சிக்கிறது. வர்த்தக நலன்களைப் பாதுகாப்பதற்கு பேராசையுடன் முயற்சிக்கும் இராணுவம் அவசர காலச் சட்டங்களை நீக்குவதற்கு மறுக்கிறது.

எவ்வாறெனினும், தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற மக்களின் கோரிக்கை மற்றும் ஜனநாயக மயமாக்கலுக்கான சர்வதேச வலியுறுத்தல்களின் விளைவான நெருக்குதல்களை எதிர்த்து நிற்க முடியாத நிலையில் இராணுவம் 2012இல் தேர்தல்களை நடத்தவேண்டியேற்பட்டது. பாராளுமன்றத் தேர்தல்களில் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் சிறப்பாகச் செயற்பட்டது. ஆனால், ஜனாதிபதித் தேர்தலே புரட்சிவாதிகளின் மடமையை அம்பலப்படுத்தியது. புரட்சிவாதிகள் அதாவது 2011 புரட்சிக்கு ஆதரவானவேட்பாளர்கள்மே23-24இல் நடைபெற்றமுதலாவதுசுற்றுஜனாதிபதித் தேர்தலில் மொத்தம் சுமார் ஒருகோடி 50 இலட்சம் வாக்குகளைப்பெற்ற அதே வேளை, முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் வேட்பாளர் முஹமட் முர்ஷியும் முபாரக் யுகத்தின் எச்சமிச்சமாகவும் இராணுவத்தின் பதிலாளாகவும் விளங்கிய அஹமட் ஷாபிக்கும் முறையே 58இலட்சம்வாக்குகளையும்55இலட்சம் வாக்குகளையும் பெற்றனர். மிகப்பெரிய அனுகூலமான சூழ்நிலையைப் புரட்சிவாத அறிவிலிகள் எவ்வாறு சிதறடித்தார்கள் பார்த்தீர்களா? புரட்சிவாதிகள் 10 வேட்பாளர்களை நிறுத்தினார்கள். வாக்குகள் அதனால் சிதறடிக்கப்பட்டன. அந்த வேட்பாளர்களில் கூடுதல் வாக்குகளைப் பெற்ற ஹம்தீன் சுபாய் மூன்றாவது இடத்துக்கே வரக்கூடியதாக இருந்தது. அதனால், இஸ்லாமியவாதிக்கும் இராணுவத்தின் பதிலாளிகளுக்கும் இடையே ஜூன் 17 இல் இரண்டாவது இறுதிச்சுற்றுப்போட்டி நடைபெற்றது.

**எகிப்தில் இராணுவத்துடனான அதிகாரப் போட்டியில் ஜனாதிபதி முர்சி மிகவும் விவேகமாகவும் நிதானமாகவும் தனது நகர்வுகளை செய்து இராணுவத்திடமிருந்து அதிகாரங்களை பறித்துக்கொண்டிருக்கிறார். இத்தகைய தனது நடவடிக்கைகள் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிவிலியன் ஜனாதிபதியின் அதிகாரங்களை முனைப்புறுத்தி வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறான்**

ஜனாதிபதித் தேர்தலின் 2ஆவது சுற்று வாக்களிப்பில் புரட்சிவாத அறிவிலிகள் முன்னைய தவறை மேலும் சிக்கலாக்கினார்கள். தங்களுக்கிடையிலான பூசல்களின் விளைவாக முர்சிக்கு வாக்களிப்பதே தங்களுக்கு இருக்கக்கூடிய ஒரேயொரு தெரிவு என்பதை அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை; வாக்களிப்பை பகிஷ்கரிக்குமாறு மக்களுக்கு புரட்சிவாதிகள் அழைப்புவிடுத்தார்கள். அதிர்ஷ்டவசமாக, குழம்பிப்போயிருக்கும் புரட்சிவாதிகளை விட தாங்கள் கூடுதலான அளவிற்கு விவேகமானவர்கள் என்பதை மக்கள் வெளிக்காட்டினார்கள். பகிஷ்கரிப்பு அழைப்பை நிராகரித்த சாதாரண மக்கள் இராணுவத்துக்கு தோல்வியைக் கொடுத்தார்கள்; ஷாபிக்கிற்கு 1கோடியே 23 இலட்சம் வாக்குகளும் முர்சிக்கு 1கோடியே 32இலட்ச வாக்குகளும் கிடைத்தன. இறுதி முடிவுகளை அறிவிப்பதில் இராணுவம் மோசடிகளைச் செய்ய முயற்சித்தபோதிலும் மக்கள் வீதிகளில் இறங்கத்தொடங்கிவிட்டார்கள். அதனால் முர்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் 2005 ஜனாதிபதித் தேர்தலின் போது சுமார் 5இலட்சம் தமிழ் மக்களை வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் செய்ததன் மூலம் இலங்கையின் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷவை வரச்செய்த பிரபாகரனின் செயலை நினைத்துப்பாருங்கள். இலங்கைத் தமிழர்களைவிட எகிப்திய மக்கள் கூடுதலான அளவுக்கு புத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சாலித்தனமாக நடந்துகொண்டார்கள். கோமாளிகளின் பகிஷ்கரிப்பு அழைப்பை எகிப்திய மக்கள் அலட்சியம் செய்தார்கள்.

தற்போது எகிப்தில் நிலவும் சூழ்நிலை என்னவென்றால், முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினதும் சிவிலியன் சக்திகளினதும் ஆதரவைப்பெற்ற ஜனாதிபதிக்கும் இராணுவத்திற்குமிடையே ஒரு அதிகாரப்போட்டி இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் இறுதி விளைவு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் முர்சி மிகவும் விவேகமாகவும் நிதானமாகவும் தனது நகர்வுகளைச் செய்து இராணுவத்திடம் இருந்து அதிகாரங்களை பறித்துக்கொண்டிருக்கிறார். கடந்த மாத ஆரம்பத்தில் ஒரு அதிரடி நடவடிக்கையாக மூன்று இராணுவ உயர்மட்டத் தளபதிகளை பதவி நீக்கம் செய்தார். அத்துடன் இராணுவக் கவுன்சிலினால் முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்த பல ஜனநாயக விரோத உத்தரவுகளை ரத்துச் செய்தார். இத்தகைய நடவடிக்கைகளின் மூலமாக முர்சி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சிவிலியன் ஜனாதிபதியின் அதிகாரங்களை முனைப்புறுத்தி வெளிக்காட்டினார். என்னதான் முஸ்லிம் சகோதர இயக்கத்தைப் பற்றி ஜனநாயகவாதிகளுக்கு சந்தேகங்கள் இருந்தாலும் நாம் இராணுவத்தின் தோல்வியை விரைவுபடுத்துவதற்கு சாத்தியமான சகலதையும் இப்போது செய்ய வேண்டும். எகிப்தை இராணுவ சர்வாதிகாரத்திலிருந்து மீட்டு சிவிலியன் அதிகாரமே மேன்மையானதாக விளங்கக்கூடிய அரசாக மாற்றவேண்டியதே உடன் தேவையாகும்.

## லிபிய நிலைவரம்

லிபியாவின் போரை நடத்துவதற்கும் அடுத்து கடாபியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அதிகாரத்தைப் பொறுப்பேற்பதற்குமென அமைக்கப்பட்ட இடைக்கால நிருவாக கவுன்சில் கடந்த மாதம் ஆரம்பத்தில் அதிகாரத்தை (ஒருமாதத்திற்கு முன்னர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட) பாராளுமன்றத்திடம் கையளித்தது. பாராளுமன்றம் இப்போது ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்து அரசாங்கத்தை அமைக்கும் செயல்முறைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. புரட்சிக்குப் பின்னரான கால கட்டத்தில் நிலைவரங்கள் குழப்பகரமானவையாகவே இருந்தன. ஆனால் தற்போது கணிசமானளவிற்கு ஸ்திரத்தன்மை வாய்ந்ததும் ஜனநாயக ரீதியானதுமான சூழல் காணப்படுகிறது. ஆயுதபாணிகளான பல குழுக்களும்

**லிபியாவில் புரட்சிக்குப் பின்னரான காலகட்டத்தில் நிலைவரங்கள் குழப்பகரமானவையாக இருந்த போதிலும் தற்போது கணிசமான அளவுக்கு ஜனநாயக ரீதியான சூழல் காணப்படுகிறது. இடைக் கால நிருவாக கவுன்ஸில் பாராளுமன்றத்திடம் அதிகாரத்தை கையளித்தது. பாராளுமன்றம் ஜனாதிபதியை தெரிவு செய்து அரசாங்கத்தை அமைக்கும் செயன்முறைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது**



பழங்குடியினரும் லிபியாவின் பல்வேறு பிராந்தியங்களின் கட்டுப்பாட்டை தங்கள் கையில் வைத்தன. கடாபியின் வீழ்ச்சியையடுத்து அராஜக நிலைதோன்றும், லிபியா பல கூறுகளாக பிளவுபடும், சட்டம் ஒழுங்கு இல்லாத நிலை நீடிக்கும். அத்துடன் நீதி விசாரணைக்கு புறம்பான மரணதண்டனைகள் பெருவாரியாக நிறைவேற்றப்படும் என்று அச்சம் நிலவியது. ஆனால் நிலைவரம் விரைவாகவே தணிந்துவிட்டது. இதற்குக் காரணம் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்திற்கு இருக்கின்ற சட்டபூர்வ மற்றும் நியாயபூர்வ அந்தஸ்தேயாகும். முழுமையான உறுதிப்பாட்டை அடைவதற்கு லிபியா இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டியிருக்கிறது. நிலைவரம் மீண்டும் குழப்பகரமானதாக மாறக்கூடும். ஆனால் தற்போது ஜனநாயக அரசுதன்னைவலுப்படுத்திபொருளாதார புனர்நிர்மாணப்பணியை முன்னெடுக்கும் என்பதற்கான தெளிவான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. மிகவும் முக்கியமாக புதிய லிபியா அமெரிக்காவையோ, ரஷ்யாவையோ, சீனாவையோ, ஐரோப்பாவையோஅல்லது வேறுஎந்தநாட்டையோ சார்ந்திருக்கிற ஒரு அரசு அல்ல. புதிய அரசு சொந்த முடிவுகளை எடுக்கிறது. தவறுகள் இடம்பெறுகின்றதானால் அதுவும் அந்த அரசு சொந்தத்தில் இழைக்கிற தவறுகளாகவே இருக்க முடியும்.

இந்த நிலைவரங்கள் எல்லாம் என்னைப் பொறுத்தவரை, லிபியப் புரட்சி தொடர்பில் மிகவும் முக்கியமானதொரு தத்துவார்த்தக் கேள்வியை கிளப்புகின்றன; லிபியப் புரட்சிவாதிகள் முதலாளித்துவ மேற்குலகிடமிருந்து ஆயுதங்களையும் உதவிகளையும் பெற்றுக்கொண்டு, கடாபியின் மீது குண்டுகளைப் பொழிய நேட்டோவுடன் கூட்டணியை அமைத்துக் கொண்டது சரியானதா? இந்த மாதிரியான எல்லா விவகாரங்களிலும் சரியான தீர்மானமென்பது இரண்டு அடிப்படைக் கேள்விகளுக்கு கிடைக்கக்கூடிய பதில்களிலேயே தங்கியிருக்கிறது; முதலாவது, புரட்சியின் போது முக்கியமான கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு விவகாரங்கள் தொடர்பில் அதிகாரபூர்வமான இறுதித் தீர்மானங்களை எடுப்பது புரட்சிவாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கைகளிலா அல்லது வெளிநாட்டு சக்திகளின்கைகளிலாதங்கியிருக்கிறது? இரண்டாவது, புரட்சிக்குப் பின்னதான அரசின் செயல்திட்டம் மக்களினாலும் வெற்றிபெற்ற புரட்சிவாதிகளினாலும் வரையப்படுகிறதா அல்லது வெளிநாட்டு அரசுகளின் கைக்கூலிகளினால் வரையப்படுகிறதா? பெரும் எண்ணிக்கையான புரட்சிகர குழுக்கள் சம்பந்தப்பட்டு நிலைவரங்கள் குழப்பகரமாக இருந்த போதிலும்கூட புரட்சிவாதிகளினால் எவ்வாறு மேற்கூறப்பட்ட இரு கேள்விகளுக்கும் சரியான விடைகளைக் காணக்கூடியதாக இருந்தது என்பதற்கு லிபியப் புரட்சி ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும். போரின் போது முறையான இராணுவ ரீதியான கட்டுப்பாடு புரட்சிவாதிகளின் கையில் இருந்தவரையில் அவர்கள் நேட்டோவிடமிருந்து அல்லது வேறு எவரிடமிருந்தும் ஆயுதங்களைப் பெற்றது சரியானதே. புரட்சிக்குப் பின்னரான அரசின் செயல்திட்டம் புரட்சிவாதிகளின் கைகளில் இருந்தவரையில் வெளியாரிடமிருந்து ஆயுதங்கள் பெறுவது சரியானதே. இதுவே உண்மையில் லிபியாவில் நடந்தேறியிருக்கிறது.

## சிரியாவில் தீர்க்கமான சண்டை

சிரியநெருக்கடியைப் பார்ப்போம். சிரியப்புரட்சியில் தலைமைதாங்கும் சக்தியாக இருப்பது சுதந்திர சிரிய இராணுவமாகும். இந்த இராணுவம் எந்தவொரு வெளிநாட்டினதும் அல்லது ஏகாதிபத்திய நாட்டினதும் ஏஜென்டாக இல்லை என்பதில் சந்தேகம் இல்லை; சிரிய இராணுவத்திலிருந்து அதிருப்தியுற்று வெளியேறியவர்களினால் உருவாக்கப்பட்ட ஒரு படையணியாகும். நாட்டுப்புறங்களிலிருந்து புதிதாக திரட்டப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களை உள்ளடக்கி இப்படை வலுப்படுத்தப்பட்டிருக்கிறது. தனது சொந்த நகரங்களையும் சொந்த மக்களையும் நிர்மூலம் செய்வதுடன், ஆயிரக்கணக்கில் தனது சொந்த மக்களைக் கொன்றொழித்து வருகின்ற அசாத்தை தூக்கியெறிவதற்கான போராட்டத்தை சுதந்திர சிரிய இராணுவம் முன்னெடுத்து வருகிறது. போராட்டத்துக்கு தலைமைதாங்குவது இந்த இராணுவமே தவிர பிளவுற்றிருக்கும்அரசியல் எதிரணியல்ல. இந்தப்படை நாட்டுப்புறங்களிலிருந்து நகரங்களை நோக்கி சில சந்தர்ப்பங்களில் முன்னேறுகிறது. வேறு சில சந்தர்ப்பங்களில் தந்திரோபாய ரீதியிலான பின்வாங்கல்களை (ஆகஸ்ட் 10 அலேப்போ நகரில் செய்ததைப் போன்று) செய்கிறது.

சுதந்திர சிரிய இராணுவம் மோதல்களில் பின்வாங்கச் செய்யப்படுகின்ற வேளைகளில் சண்டை ஒரு சில வாரங்களுக்கு தாமதிக்கப்படுகின்றது. ஆனால் அந்த இராணுவம் மீண்டும் மீண்டும் முன்னோக்கிவந்து அசாத் தூக்கியெறியப்படும்வரை போராட்டத்தைத் தொடரும். இது பல வாரங்கள், பல மாதங்கள் அல்லது ஒரு வருடம் செல்லலாம். ஆனால் முடிவு சுவரில் எழுதப்பட்டிருக்கிறது- அசாத் ஒழித்துக்கட்டப்படுவார். எவ்வாறெனிலும் இராணுவம் டமாஸ்கஸை அல்லது அலேப்போவை முற்றுமுழுதாக இழக்கிறது. ஆனால் என்றென்றைக்கும் இதுவே நிலைமையாக இருக்கப்போவதில்லை. அதனால் விடுதலைப் போராட்டங்களின் விளைபயன்கள் சமச்சீரற்றவை. புரட்சிவாதிகள் பின்னடைவைக் கண்டால் மீண்டும் திரும்பி வருவார்கள். அசாத் தோல்விகண்டால் அவர் ஒழித்துக்கட்டப்படுவார்.

துரதிர்ஷ்டவசமாக, வெளியுலகம் சிரிய புரட்சிக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குவதற்காக முக்கியமான ஒரு வாய்ப்பை இழந்து கொண்டிருக்கிறது- மோசமான ஆயுதங்களை தாங்கள் வழங்கப்போவதில்லைஎன்று பிரிட்டனும் பிரான்ஸும் கூறியிருக்கின்றன. என்ன மடமை இது! போரில் ஒரு தரப்புக்கு உதவுவதானால் மிகவும் மோசமான ஆயுதங்களை அவர்களுக்கு வழங்கிவிடவேண்டும். எவருமே ஒருபோதும் அரைக்கன்னியாக இருக்க முடியாது. முற்றுமுழுதாக உதவவேண்டும். அல்லது பேசாமலிருக்கவேண்டும்.

சுதந்திர சிரிய இராணுவத்தினருக்கு இன்று அவசியமாகத் தேவைப்படுபவை விமானஎதிர்ப்புஆயுதங்கள், டாங்கிகளை தகர்க்கும் ஆர்.பி.ஜி.க்கள் போன்றவையே. இந்த இராணுவத்தில் வந்து சேருகின்ற பெரும் எண்ணிக்கையானோருக்கு சிறந்த பயிற்சிகளும் தேவைப்படுகின்றன. துருக்கி உதவிக்கொண்டிருக்கின்றது. ஏனென்றால் சிரியா சின்னாபின்னப்படுவதை (1990களில் பால்கன் பிரதேசம் சிதறுண்டதைப்போன்று) அது விரும்பவில்லை. குர்திஷ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட சிரியாவின் வடகிழக்கு மூலையில் குர்திஷ் அரசொன்று தோன்றுவது தனக்கு ஆபத்தானதென்று துருக்கி நினைக்கிறது. ஆனால் சிரியா பிளவுண்டுபோவதைத் தடுக்க துருக்கி விரும்புகின்றதானால் அது அசாத்தை தூக்கியெறிந்து ஐக்கியப்பட்டதும் ஜனநாயக ரீதியானதுமான சிரியா ஒன்றை தோற்றுவிப்பதற்கு இப்போது உதவவேண்டும். அலேப்போவுக்கு அண்மையாக துருக்கி எல்லையோரம் விடுதலை வலயம் ஒன்றை ஏற்படுத்தி சிவிலிய அகதிகள் வருகைக்கு உதவுவது உடனடியாக மேற்கொள்ளவேண்டிய முக்கியமான நடவடிக்கையாகும். இத்தகைய விடுதலை வலயம் சுதந்திர சிரிய இராணுவம் பயிற்சிகளை பெறுவதற்கும் தாக்குதல்களை அசாத்தின் படைகளுக்கெதிராகத் தொடுப்பதற்கும் உதவ முடியும். இந்த வலயத்தில் விமானப்பறப்பு தடை உத்தரவும் பிறப்பிக்கப்படவேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வழமையைப் போன்றே ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாதவராக இருக்கிறார். இஸ்லாமியவாதிகளும் அல்-கயெடா உறுப்பினர்களும் அரங்கில் பிரவேசித்து சிரியப் புரட்சிக்குள் ஒரு சக்தி மிக்க பிரிவினராக வருவார்களேயானால் அது பெரும் அனர்த்தமாகிப் போய்விடும். இது அசாத் தூக்கியெறியப்பட்ட பிறகு இரண்டாவது கட்ட சண்டையொன்றுக்கு (பெருமளவுக்கு மதச்சார்பற்றதாக விளங்கும் சுதந்திர சிரிய இராணுவத்திற்கும் அடிப்படைவாதிகளுக்கும் இடையேயான) வழிவகுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும். இதில் முஸ்லிம் இரத்தமே சிந்தப்படும். சுதந்திர சிரிய இராணுவத்தின் விரைவான வெற்றி ஒன்றின் மூலம் மாத்திரமே இத்தகைய சண்டை மூளாதிருப்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

### இஸ்லாமிய நாடா அல்லது இஸ்லாமியவாத நாடா?

சிரியா ஒரு இஸ்லாமிய நாடு. அதன் சனத்தொகையில் பெரும்பாலானவர்கள் அதுவும் குறிப்பாக நகரங்களுக்கு வெளியே வாழ்கிறவர்கள் ஆழ்ந்தபற்றுடைய முஸ்லிம்கள். முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு அம்சம், சிரியா ஒரு இஸ்லாமியவாத நாடல்ல. இஸ்லாமிய அரசொன்று அங்கே ஏற்படுத்தப்படவேண்டும் அல்லது ஷரியா சட்டங்கள் நடைமுறைக்கு கொண்டுவரப்படவேண்டும் என்று கோருகின்ற குறிப்பிடத்தக்க எந்தவொரு இயக்கமுமோ அல்லது சக்திகளோ இல்லை. இவ்வாறு நடைபெற வேண்டுமென்று எவராவது விரும்புவதானால் அது (கைகட்டிப்பார்த்துக்கொண்டிருக்கின்ற வெளியுலகின் தவறான போக்கை பயன்படுத்தி அனுகூலமடைய விரும்புகின்ற) வெளிநாட்டு ஜிகாத் குழுக்களாகவே இருக்க முடியும். சீனாவும், ரஷ்யாவும் அசாத்துக்கு வழங்குகின்ற கிரிமினல்தனமான ஆதரவே சண்டையை நீடிக்கவைக்கிறது. இந்தச்சூழ்நிலையைப் பயன்படுத்தி வெளிநாட்டு ஜிகாத் குழுக்கள் சிரியாவிற்குள் ஊடுருவக்கூடிய ஆபத்து இருக்கிறது. ரஷ்யாவினதும், சீனாவினதும் செயல்களின் கொடூரத்தனத்தை சர்வதேச சமூகம் அம்பலப்படுத்த வேண்டும். அத்துடன் துருக்கியைப் போன்றதொரு மதச்சார்பற்ற அரசாக புதிய சிரியா வெளிக்கிளம்புவதற்கு ஏற்ற முறையில் சர்வதேச சமூகம் முஸ்லிம் கலாசாரத்தை மதிக்கவேண்டும். புரட்சிக்குப் பின்னதான டியூனிசியா, லிபியா மற்றும் எகிப்து ஆகியவை பெருமளவுக்கு மதச்சார்பற்றவையாகவே இருப்பதனால் சிரியாவிலும் அத்தகைய அரசு உருவாவதற்கான வாய்ப்புகள் நன்றாகவே உள்ளன.

சிரியாவை மதச்சார்பற்ற அரசாக வைத்திருப்பதற்கான போராட்டம் கடுமையானதாக இருக்கப் போவதில்லை. பாத்கட்சியின் முப்பது வருடகால ஆட்சிக்குப் பிறகு தொடர்ந்தும் மதச்சார்பற்றிருப்பதே சிரியாவில் இயல்பான போக்காக இருக்கிறது. பாத்கட்சி அதன் ஆரம்ப கட்டங்களில் முற்போக்கானதாகவும் மக்களைக் கவருகின்ற கொள்கைகளைக் கொண்டதாகவும் அரைவாசி சோஷலிசத்தன்மை கொண்டதாகவும் விளங்கியது. பல சமூகச் சீர்திருத்தங்களையும் முற்போக்குத் திட்டங்களையும் அது முன்னெடுத்தது. நீண்டகாலம் பதவியிலிருந்து அதிகார போதை தலைக்கேறிய பிறகே அசாத் குடும்பம் அதன் வேர்களை மறந்து சர்வாதிகாரத்தனமானதாக மாறியது. இதே நிலைமைதான் எல்லா இடமும் காணப்படுகிறது. உதாரணத்திற்கு அரபு வசந்தம் கிளம்பிய நாடுகள், இலங்கை மற்றும் பர்மாவை எடுத்துக்கொள்ளலாம். ஒரு அரசு எவ்வளவு குற்றங்களை இழைக்கிறதோ அந்தளவிற்கு அது அதிகாரத்தை விட்டுப் போகாமல் இருப்பதற்கும் விரும்புகிறது. அத்தகைய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் பதவியிலிருந்து வெளியேற்றப்படுவதென்பது மிகவும் அபாயகரமானதாகும். அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன அல்லது அதைவிட மோசமான முடிவுகளும் அவர்களுக்கு ஏற்படலாம். அதிகாரத்தை இழப்பதற்குத் தயாரில்லாத ஒரு கட்டத்தை ஆட்சியாளர்கள் அடையும் போது அது சகலருக்குமே அனர்த்தமாகி விடுகிறது. தனது பய உணர்வு காரணமாக தனது வழியில் வருகின்ற சகலதையும் அத்தகைய ஆட்சியாளர் துவம்சம் செய்யவே முயற்சிப்பர். ●



சுதந்திர சிரிய இராணுவம் மோதல்களில் பின்வாங்கச் செய்யப்படுகின்ற வேளைகளில் சண்டை ஒரு சில வாரங்களுக்கு தாமதிக்கப்படுகிறது. ஆனால் அந்த இராணுவம் மீண்டும் மீண்டும் முன்னோக்கி வந்து அசாத் தூக்கியெறியப்படும்வரை போராட்டம் தொடரும். இது பல வாரங்கள், பல் மாதங்கள் அல்லது ஒரு வருடம் செல்லலாம். ஆனால் முடிவு சுவரில் எழுதப்பட்டிருக்கிறது. அசாத் ஒழித்துக்கட்டப்படுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச விவகாரம்

சீமா சிரோஹி



கலாசாரங்கள், மதங்கள் பற்றி சராசரி அமெரிக்கரிடம் காணப்படும் அறியாமை பெரியதொரு சுமை. வெள்ளையர் அல்லாத ஆட்கள் அமெரிக்கர்களுக்கு ஒரு புதிராகவே இருக்கிறார்கள்



# அமெரிக்காவில் சீக்கியர்களை ஏன் கொலை செய்கிறார்கள்?

அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்ற துப்பாக்கி மனிதர்களின் வெறியாட்டங்களின் தொடரில் இறுதியாகப் பாதிக்கப்பட்டிருப்பது விஸ்கோன்சின் மாநிலத்தின் ஓக்கிறீக் பகுதியில் வாழும் சீக்கிய சமூகமாகும். துப்பாக்கி மனிதனை தன்னாலியன்ற மட்டும் தடுத்துக் கொண்டிருந்த துணிச்சலான ஒரு தந்தையும் தாயும் உட்பட 6 அப்பாவிகள் இம்மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற கொடூரச் சம்பவத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கடுமையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்கான பொலிஸ்காரரொருவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்ட துப்பாக்கி மனிதனின் பெயர் வேட்மைக்கேல் பேஜ். அமெரிக்காவின் முக்கியத்துவம் வாய்ந்த சிவில் உரிமைகள் அமைப்புகளின் ஒன்றினால் பல வருடங்களாக கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்த வெள்ளையின மேலாதிக்க வெறியன் அவன். வேறுபட்டவர்களாக தங்களைக் காட்டிக்கொள்வதற்கு விரும்புகின்ற அல்லது தைரியம் கொள்கின்ற எந்தவொருவருக்கும் அமெரிக்காவின் பெறுமதியான இடங்களை உடைமையாக ஆக்கிரமிக்க வருகின்ற எந்தவொருவருக்கும் செய்தி ஒன்றைத் தெரிவிக்கும் அக்கறையுடன் இழைக்கப்பட்ட "மாற்றார் மீதான வெறுப்பின் விளைவான குற்றச்செயல்" என்று எளிதாக இதைக் கூறிவிட முடியும்.

ஆனால், சில கைப்பிசகல்களுடனும் அமெரிக்கர்கள் தங்களை உள்நோக்கிப் பார்க்க வேண்டுமென்ற வேண்டுகோள்களுடனும் இந்த அனர்த்தமும் ஆழமான தேசிய பொறுமைக்குள் உள்வாங்கப்பட்டு விரைவில் புதைக்கப்பட்டுவிடும். உள்நோக்கிப் பார்த்தலையே தனது நாட்டு மக்களிடம் ஜனாதிபதி பராக் ஒபாமாவும் வேண்டி நிற்கிறார். அதற்கு மேலாக அவர் எதையும் கேட்கவில்லை. ஓயாது வந்து துன்புறுத்திக் கொண்டிருக்கின்ற இந்தப் பெருந்தொல்லையில் இருந்து மீட்சிபெறுவதற்கான வழிவகை எதையும் அவர் கூறுவதாக இல்லை. துப்பாக்கிக் கட்டுப்பாடு விவகாரத்தைத் தொட்டால் அது இறுக்கமான ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் சடுதியான மரணமாகிப் போய்விடும் என்பது ஒபாமாவுக்கு நன்றாகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துப்பாக்கிகள் ஏன் மிகவும் விஞ்சிய செல்வாக்குடையவையாக இருக்கின்றன என்ற மிகவும் முக்கியமான பிரச்சினையைக் கிளப்புவதற்கு எந்த அரசியல்வாதியுமே துணிச்சல் கொள்ளமாட்டார். தேசிய ரைபிள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் செல்வாக்குமிக்க துப்பாக்கிப் பயன்பாட்டுச் சுதந்திர ஆதரவுக் குழுக்கள் ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமையை உத்தரவாதப்படுத்துகின்ற அரசியலமைப்புக்கான இரண்டாவது திருத்தத்தின் பின்னால் வெட்கக்கேடான முறையில் மறைந்திருந்துகொண்டு தேர்தல் தோல்வியை உறுதிப்படுத்தக் கூடியளவுக்கு சக்திமிக்கதாக இருக்கின்றன. துப்பாக்கி மனிதர்களின் வெறியாட்டங்களினால் பலர் கொல்லப்பட்ட முன்னைய சம்பவங்களின்களங்களிலிருந்து (கொலம்பைன் படு கொலைகள், ரஸ்கன் படுகொலைகளில் இருந்து டென்வரின் அரோரா படுகொலைகள்வரை) நகர்ந்து சென்றதைப் போன்று அமெரிக்கா ஓக் கிறீக் கொலைக்களத்திலிருந்தும் அது நகர்ந்து செல்லும். 1982ஆம் ஆண்டுக்கும் 2012ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் துப்பாக்கி மனிதர்களின் 58 வெறியாட்டச் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

விஸ்கோன்சின் கொலைகள் அசௌகரியமான இரு கேள்விகளைக் கிளப்புகின்றன. ஒன்று சீக்கியர்களின் தோற்ற அடையாளத்தைப்பற்றியது. மற்றையது அமெரிக்காவில் துப்பாக்கிகளை எளிதில் பெறக்கூடியதாக இருப்பதைப்பற்றியது. பேஜ் எதற்காக குருதுவாரா (சீக்கிய வணக்கத்தலம்) வில் தாக்குதல் நடத்தினான்? சகல குடியேற்றவாசிகளையும் வெறுக்கின்ற காரணத்தினாலா? அல்லது வெறுமனே முஸ்லிம்களை வெறுப்பதனாலா? அல்லது வெறுமனே சீக்கியர்களை வெறுப்பதனாலா? அல்லது சீக்கியர்களை அவன் முஸ்லிம்கள் என்று நினைத்ததாலா? எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. அது எதுவுமாக இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், ஒரு ஆயுதப்பாணி இனவெறியன் சுதந்திரமாக நடமாடித் திரிந்திருக்கின்றான் என்பதே முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.


மைக்கேல் பேஜ்

9/11க்குப் பிறகு சீக்கியர்கள் அநாவசியமாக துன்புறுத்தல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும், வன்முறைகளுக்கும் இலக்காகி வந்திருக்கிறார்கள். இதற்குப் பிரதான காரணம் அவர்களது தாடியும் தலைப்பாகையுமேயாகும். தாடியுடனும் தலைப்பாகையுடனும் சீக்கியர்களைக் காணுகின்ற சில அமெரிக்கர்கள் அவர்களை ஜிஹாத்காரர்கள் என்று தவறுதலாக நினைக்கிறார்கள். அறியாமையின் நிமித்தம் அமெரிக்கர்கள் நாகரீகமாக நியூயோர்க் போன்ற பெருநகரங்களிலும் ரெக்சாஸ் மாநிலத்தின் பிறையன் போன்ற கிராமப்புறங்களிலும் சீக்கியர்களைப் பார்த்து "ஒசாமாவே வீட்டுக்குப் போ" "நீ ஒரு தலிபான்" என்று கூப்பாடு போட்டிருக்கிறார்கள். சீக்கியர்கள், பையன்களும் கூட தாக்குதல்களுக்கு இலக்காகியிருக்கிறார்கள். கொலையும் கூட நடந்திருக்கிறது.

"எங்களைத்தாக்காதிருங்கள். ஏனென்றால் நாம் முஸ்லிம்கள் இல்லை" என்று திருப்பிக் கூறி தங்களை பாதுகாப்பதற்கு ஒருபோதுமே சீக்கியர்கள் விரும்புவதில்லை. ஏனென்றால் அவ்வாறு கூறினால், 9/11க்கு பின்னரான அமெரிக்காவில் இடம்பெறுகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை நியாயப்படுத்துவதாக அது அமைந்துவிடும். முஸ்லிம்கள் நியாயப்பூர்வமான இலக்குகளாக கருதப்படுவதாக அது முடிந்துவிடும். எல்லாவற்றுக்கும் மேலாக மாற்றார் மீதான தாக்குதல்களுக்கு எதிராக சீக்கியத் தலைவர்கள் தொலைக்காட்சிகளில் வாதிட்டிருக்கிறார்கள். சகல சமூகத்தவர்களுக்கும் எதிரான வெறுப்பு, வன்முறை முடிவுக்கு வரவேண்டுமென்றே சீக்கியத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

சராசரி அமெரிக்கர்கள் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கும் கலாசாரங்கள் மற்றும் மதங்கள் பற்றிய அறியாமை பெரியதொரு சுமையாக இருக்கிறது. இதை கல்வியின் மூலமே மாற்றியமைக்க முடியும். வெள்ளையர் அல்லாத ஆட்கள் பெரும் எண்ணிக்கையான அமெரிக்கர்களுக்கு ஒரு புதிராக தொடர்ந்தும் இருக்கிறார்கள். தற்போது நிலவுகின்ற கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஏனைய இனத்தவர்கள் பற்றிய அறியாமை ஒரு வெறித்தனத்துக்கு இட்டுச்செல்லக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராபத்து முன்னால் இருக்கிறது.

சீக்கியர்கள் முதன் முதலாக கலி போர்னியாவில் தரையிறங்கிய போது உள்ளூர்வாசிகளின் இனக்குரோத உணர்வுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்ட 19 ஆம் நூற்றாண்டிலிருந்து அமெரிக்காவின் சீக்கியர்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்று வந்திருப்ப தாக கல்விமான்கள் கூறுகிறார்கள். ஆனால் தற்போது சீக்கியர்களுக்கு எதி ராக இடம்பெறுகின்ற வன்முறைப்படலம் நிச்சயமாக 9/11 உடன் சம்பந்தப்பட்டது என்பதில் சந்தேகமேயில்லை. 2011 பிற்பகுதியில் இருந்து இதுவரை தங்களுக்கு எதிராக குற்றச்செயல்கள், துஷ்பிரயோகங்கள், கொலைகள் என்று சுமார் 700 சம்பவங்கள் இடம்பெற்றிருப் பதாக சீக்கியமைப்புகள் தெரிவித்திருக் கின்றன. இந்த வன்முறைப் படலம் சீக் கியர்களை முஸ்லிம்கள் என்று தவறுத லாக அமெரிக்கர்கள் நினைப்பதன் விளைவானது என்பது நிச்சயம்.

9/11க்குப் பிறகு 2001 செப்டெம்பர் 15 ஆம் திகதி அரிசோனா மாநிலத்தில் மெசா நகரில் எரிவாயு நிலையத்துக்கு வெளியே பல்பீர்சிங் சோதி கொல்லப் பட்டார். கொலைஞன் கைது செய்யப் பட்டபோது "நான் ஒரு தேச பக்தன்" அமெரிக்கன், என்று உரக்கக் கத்தினான். மறுவார்த்தைகளில் கூறுவதானால் அமெரிக்கா மீதான தாக்குதலுக்காக தான் முஸ்லிம் என்று நம்பிய ஒருவரை கொலை செய்து அவன் பழிவாங்கியி ருக்கிறான். 2001 டிசம்பர் 21இல் சுரிந்தர்சிங் சித்தி என்ற சீக்கியரை ஒசாமா பின்லேடன் என்று குற்றம்சாட்டிய இருவர் அவரைக் கடுமையாகத் தாக்கினார்கள். சித்தி அமெரிக்கக் கொடியைப் பயன் படுத்தி செய்து அணிந்திருந்த தலைப் பாகைகூட அவருக்கு உதவவில்லை.

இத்தகைய தாக்குதலின் பட்டியல் நீளமானது. ஆனால் வேதனையையான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் சீக்கிய சமூகம் அதன் தேசபக்தியை அமைதியாக வெளிக்காட்டிவந்திருக்கிறது. அவர்களின் வீடுகளுக்கு வெளியே பெரிய அமெரிக்க கொடிகள் பறக்கவிடப்படுகின்றன. ஆனால் சீக்கியர்களை விரோதிகளாக நோக்குகின்ற காமாலைக் கண்களுக்கு அந்தக் கொடிகள் தெரிவதில்லை.

ஆனால் நினைத்த மாத்திரத்தில் துப்பாக்கி எடுத்து ஆட்களைச் சுடுவதை இவ்வளவு இலகுவான காரியமாக ஏன் தொடர்ந்தும் அனுமதிக்க வேண்டும்? மனநிலை குழம்பிய ஒருவனின் கையில் இருக்கும் துப்பாக்கி படுகொலையையே செய்யும். துப்பாக்கி வெறியாட்டம் செய்பவர்களின் பின்னணிகள் பற்றிய சோதனைகள் குறைந்தபட்சமாகவே இடம்பெறுகின்றன. பேஜின் நவநாஜிக் கடந்தகாலம் நிச்சயமாக அபாய சங்கை ஊதியிருக்க வேண்டும்.



"எங்களைத் தாக்காதீர்கள். நாம் முஸ்லிம்கள் இல்லை" என்று திருப்பிக் கூறி தங்களை பாதுகாப்பதற்கு ஒருபோதுமே சீக்கியர்கள் விரும்புவதில்லை. ஏனென்றால் அவ்வாறு கூறினால், 9/11க்கு பின்னரான அமெரிக்கா வில் இடம்பெறுகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை நியாயப்படுத்துவதாக அது அமைந்துவிடும்

அமெரிக்காவில் தனிப்பட்டவர்களின் கைகளில் 20 கோடி துப்பாக்கிகள் இருப் பதாக சமஷ்டி புலனாய்வுப் பணியகம் கணிப்பிடுகிறது. இங்கு துப்பாக்கித் தயாரிப்பு தொழில்துறை 200 கோடி டொலர்கள் பெறுமதியானது. 2010இல் அமெரிக்காவில் 12,996 கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் 8,775 கொலைகளுக்கு துப்பாக்கிகளே காரணம். கைத்தொழில் நாடுகளுடன் ஒப்பிடும்போது எளிதாக துப்பாக்கியை பெறக்கூடியதாக இருக்கின்றமை எளி தாகவே கொலைகள் இடம்பெற அமெரிக்காவில் வழிவகுக்கிறது. பிரிட்ட னுடன் ஒப்பிடும்போது ஒரு லட்சம் பேர் மத்தியில் துப்பாக்கிகளினால் அமெரிக் காவில் கொல்லப்படுகின்றவர்களின் வீதம் 40 சதவீதம் அதிகமானதாக இருக் கிறது. பிரிட்டனில் துப்பாக்கிகளுக்கு அனு மதிப்பத்திரம் பெறுவது என்பது மிகவும் கடினமான காரியம்.

படைவீரர்கள் மத்தியில் தனிப்பட்ட துப்பாக்கிகள் இருப்பது அமெரிக்க இராணுவத்துக்கு ஒரு பெரும் பிரச்சி னையாக மாறியிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் தற்கொலை செய்வதற்கு தனிப் பட்ட துப்பாக்கிகளை அடிக்கடி பயன் படுத்துகிறார்கள். இவ்வருடம் ஜூலை மாதம் வரை 206 அமெரிக்கப் படையினர் தற்கொலை செய்திருக்கிறார்கள். இதை யொரு கொள்ளை நோய் என்று பாது காப்பு அமைச்சர் லியோன் பனெட்டா வர்ணித்திருக்கிறார். கடந்த வருடம் 301 படைவீரர்கள் தற்கொலை செய்திருந் தார்கள். ஆனால், ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதப்பாணிகளாக இருப்பது அவசியம் என்று தேசிய ரைபிள் சங்கம் சிபாரிசு செய்கிறது. ஆம், அது அவ்வாறுதான் கூறுகிறது.

ரைம்ஸ் ஒப் இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீல் ஆம்ஸ்ரோங்

## (1930-2012)

■ பாலன்



இரண்டாவது உலக மகா யுத்தத்தின் முடிவிற்கு பின்னர் இரு பெரும் வல்லரசுகளாகத் திகழ்ந்த அமெரிக்கா வுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே மூண்டிருந்த கெடுபிடியுத்த (coldwar) காலச்சட்டத்தில், ரஷ்யர்களை விடவும் முந்திக்கொண்டு சந்திரனில் ஒரு அமெரிக்கனை தரையிறக்க வேண்டு மென்ற முனைப்பில் ஜனாதிபதி ஜோன் எவ்.கென்னடி, 1961ஆம் ஆண்டில் ஒரு பிர சித்தமான பிரகடனத்தை அமெரிக்க காங்கிரஸில் செய்தார். அந்த தச ாப்தத்தின் இறுதிக்குள் அமெரிக்கா சந்திரனில் மனிதனைத் தரையிறக்கும் என்பதே அந்தப் பிரகடனமாகும்.

அவர் சொன்னதன் பிரகாரமே அமெ ரிக்கா அந்தத் தசாப்தத்திற்குள்ளாகவே சந்திரனில் மனிதனை தரையிறக்கியது. அப்பலோ 11 என்ற விண்கலத்தில் சென்ற விண்வெளிவீரர் நீல் ஆம்ஸ் ரோங்கும் எட்வின் ஆல்ட்ரினும் 1969 ஜுலை 20 ஆம் திகதி சந்திரனில் இறங் கினார்கள். ''வானத்தில் ஏறி சந்திரமண் டல வாசலைத் தொடலாமா?'' என்ற கவி ஞர் கண்ணதாசனின் சினிமாப்பாடலின் கேள்விக்கு அன்றைய தினம் பதிலும் கிடைத்தது. முதலில் சந்திரனில் கால டியைப் பதித்தவர் நீல் ஆம்ஸ்ரோங், அவர் தனது 82ஆவது வயதில் கடந்த மாதம் 25ஆம் திகதி இருதயக்கோளாறு காரணமாக காலமானார். 51 வருடங் களுக்கு முன்னர் கென்னடியின் சூளுரை யுடன் ஆரம்பித்த அமெரிக்க விண் வெளிப்பயண சரித்திரத்தின் ஒரு அத் தியாயம் ஆம்ஸ்ரோங்கின் மரணத்துடன் முடிவுக்கு வந்திருக்கிறது.

அமெரிக்கா சில வாரங்களுக்கு முன் னர் ஏவிய கியூரியோ சிற்றி ரோபோ இயந்திரம் செவ்வாய்க்கிரகத்தில் தரையி றங்கி அங்கிருந்து அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான ''நாசா''வுக்கு படங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறது. ஆனால், சந்திரனில் காலடி பதித்த முதல் மனிதன் செவ்வாயில் வருங்காலத்தில் காலடி பதிக்கக்கூடிய மனிதனைக் காணா மலேயே இறந்துவிட்டார். அப்பலோ11 விண்கலத்தில் ஆம்ஸ்ரோங்குடன் சேர் ந்துசென்று சந்திரனில் காலடி பதித்த ஆல்ட்ரினின் ஆயுட்காலத்திற்குள் அமெ ரிக்காவினால் செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதனை அனுப்பித் தரையிறக்க வைக்க முடியாமல் போகலாம் என்ற கருத்து தற்போது அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சித் துறைபற்றி ஆய்வுகளை செய்து கொண்டிருப்பவர்கள் மத்தியில் எழுந்திருப்பதை மேற்குலக ஊடகங்கள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது.

சந்திரனில் காலடியைப் பதித்த முதல் மனிதன் என்ற மனிதகுல வரலாற்றுச் சாதனையைப் படைத்த ஆம்ஸ்ரோங், விண்வெளி ஆராய்ச்சியில் மிகவும் பிர பல்யமான முன்னோடியாகவும் வரலாற் றில் தனது தடத்தைப் பதித்துச் சென்றி ருக்கிறார்.


கடந்த மாதம் 5ஆம் திகதி தான் ஆம்ஸ்ரோங்கின் 82ஆவது பிறந்ததினம். அதற்கு இரு தினங்கள் முன்னதாகவே அவருக்கு இருதய பைபாஸ் சத்திரசிகி ச்சை செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட சிக்கல் நிலை அவரின் உயிரைப் பறித்துவிட்டது. அவரது மரணம்பற்றிய செய்தியை உலகிற்கு அறிவித்த குடும்பத்தினர் விடுத்த அறிக்கையில், "அடுத்த தடவை நீங்கள் எல்லோரும் சந்திரனைப் பார்க்கும் போது ஆம்ஸ்ரோங்கை நினைப்பீர்கள்" என்று குறிப்பிட்டிருந்தது.

சந்திரனில் காலடி வைத்த உடனே ஆம்ஸ்ரோங், "இது மனிதனுக்கு ஒரு சிறிய அடியெடுத்து வைப்பு, மனிதகுலத்திற்கு இராட்சதப் பாய்ச்சல்" (That's one small step for (a) man, one giant leap for mankind) என்று கூறியிருந்தார். அவரின் இந்த வார்த்தைகள் ஆங்கில மொழியில் மிகவும் பிரபல்யமான மேற்கோள் வாசகங்களின் ஒன்றாக வரலாற்றில் நிலைபேறு அடைந்துவிட்டது. அந்த வாசகத்தைப் பற்றிக்கூட சர்ச்சைகள் தொடர்ந்து நிலவுகின்றன. அவர் உண்மையில் சொன்னது என்பதைப் பற்றி பெரும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்கனவே மூண்டிருந்தன. ஆம்ஸ்ரோங்கின் மரணத்தையடுத்து ஊடகங்களில் அந்த சர்ச்சை மீண்டும் கிளப்பப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஒரு (a) மனிதனுக்கு சிறியதொரு அடியெடுத்துவைப்பு என்று ஆம்ஸ்ரோங் சொன்னாரா அல்லது மனிதனுக்கு (Man) என்று பொதுப்படையாகச் சொன்னாரா? என்பதே சர்ச்சையாகும். சந்திரனுக்குச் சென்றுவிட்டு பூமி திரும்பிய ஆம்ஸ்ரோங் தனது வார்த்தைகள் தவறாக மேற்கோள் காட்டப்பட்டுவிட்டன என்றும் அப்பலோ11 விண்கலத்தின் பயணத்தின் போதான தொடர்பாடல்களின் உத்தியோகபூர்வ எழுத்துப்பிரதிகளில் (a) என்பது சேர்க்காது விடப்பட்டிருக்கிறது என்றே சொன்னதாக பதில்கள் இருக்கின்றன. ஆனால், வளிமண்டலத்திலிருக்கக் கூடிய மின்இடையொலிகள் காரணமாக



'இது மனிதனுக்கு ஒரு சிறிய அடி, மனித குலத்திற்கு ஒரு இராட்சத பாய்ச்சல்'

ஆம்ஸ்ரோங்கின் வார்த்தைகளில் உள்ள அந்த (a) கேட்காமல், பதிவுசெய்யப்படாமற் போய்விட்டது என்று "நாசா" விளக்கமளித்திருந்தது. (a) என்ற ஒரு எழுத்தை (சொல்லை) நீக்கியமையினால், முழு வாசகத்தினதும் அர்த்தம் மாறிவிட்டது. தனிப்பட்ட ஒருவரின் கூற்று என்பதற்கு அப்பால், மனிதர்கள் எல்லோருக்கும் உரிய உலகளாவிய கூற்றாக அது அர்த்தப்படுத்திவிட்டது.

இந்த சர்ச்சையைப் பற்றி ஆம்ஸ்ரோங்கிடம் ஒருதடவை கேட்கப்பட்டபோது அவர், "பூமியை வந்திறங்கும் வரை அந்த வார்த்தையைப் பற்றி நான் நினைக்கவேயில்லை" என்று கூறியிருந்தார்.



ஆம்ஸ்ரோங் இறுதியாக பேட்டியொன்றை அவுஸ்திரேலியாவில் கடந்த மே மாதம் வழங்கியிருந்தார். அதற்குப் பிறகு அவர் எந்தப் பேட்டியையும் எந்த ஊடகத்துக்கும் வழங்கவில்லை.

சந்திரனில் இறங்கியதென்பது ஒரு சோடிப்புமோசடி என்று கூடக் கூறப்பட்டதே என்று ஆம்ஸ்ரோங்கிடம் அந்தப் பேட்டியின் போது கேட்கப்பட்டது. அதற்கு இவர், "ஆட்கள் எப்போதுமே சதித்தனமான பதில்களை விரும்புகிறார்கள். அத்தகைய கதைகள் ஆட்களை எளிதாகவே கவருகின்றன. ஆனால், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்றாவது ஒரு நாள் இன்னொரு மனிதன் சந்திரனுக்கு பறந்து சென்று அங்கே நான் வைத்து விட்டு வந்த கமராவை எடுத்துக்கொண்டு பூமிக்குத் திரும்புவார்" என்று பதிலளித்திருந்தார்.

"உங்களது காலடி சந்திரனின் மேல்ப் பரப்பில் ஆயிரக்கணக்கான வருடங்கள் பதிந்திருக்கும் என்பதை அறியும்போது எத்தகைய உணர்வு உங்களுக்கு வருகிறது?" என்று ஒரு தடவை ஆம்ஸ்ரோங்கிடம் கேட்கப்பட்டபோது, "யாராவது ஒரு மனிதன் என்றாவது அங்குபோய் அந்தக் காலடியை அழித்துவிட்டு வரக்கூடும் என்று நினைக்கிறேன்" என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னாராம்.

அமெரிக்காவில் ஓஹியோ மாநிலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் வாபாகொனேட்டா நகரில் 1930 ஆகஸ்ட் 5ஆம் திகதி நீல் (அல்டன் ) ஆம்ஸ்ரோங் பிறந்தார். அவரது தந்தை யார் பெயர் ஸ்டீபன் ஆம்ஸ்ரோங், தாயார் பெயர் வயோலா. இத்தம்பதியினரின் மூன்று பிள்ளைகளில் முதல் பிள்ளை ஆம்ஸ்ரோங். கல்லூரியில் படித்தகாலத் தில் தான் காதலித்த ஜனெட் ஷியாரோன் என்ற பெண்ணை 1956 ஆம் ஆண்டு அவர் மணந்து கொண்டார். அவர்கள் 1994இல் விவாகரத்துப்பெற்றுக் கொண்டார்கள். அடுத்து கரோல் நைட் என்ற பெண்மணியை ஆம்ஸ்ரோங் மறுமணம் செய்தார்.

சிறுவயதில் இருந்தே விமானத்தில் பறப்பதில் அதீத ஆர்வம் கொண்டவராக ஆம்ஸ்ரோங் இருந்தார். 6 வயதாக இருக்கும் போது முதன்முதலாக அவர் விமானத்தில் பறந்தார். தனது வளரிடம் பருவத்தில் மாதிரி விமானங்களை தயாரிப்பதில் ஈடுபட்ட அவர் விமானத்துறை நூல்நிலையம் ஒன்றையும் உருவாக்கியிருந்தார். சிறிய வேலைகளைச் செய்து சம்பாதித்த பணத்தை பயன்படுத்தி அவர் விமானம் ஓட்டுவதற்கு கற்றுக்கொண்டார். கார் ஓட்டுவதற்கு அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கு முன்னதாகவே ஆம்ஸ்ரோங் விமானத்தை ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டார்.

பாடசாலையில் விஞ்ஞானத்திலும், கணிதத்திலும் சிறந்த மாணவனாகத் திகழ்ந்த அவருக்கு இன்டியானாவில் உள்ள பேர்டியூர் பல்கலைக்கழகத்தில் கல்விகற்பதற்கான அமெரிக்கக் கடற்படையின் புலமைப்பரிசில் கிடைத்தது. 1947இல் அவர் அந்தப் பல்கலைக் கழகத்தில் இணைந்துகொண்டார். ஆனால் ஒரு கடற்படை விமானியாக வருவதற்காக இரு வருட படிப்பிற்குப் பிறகு பல்கலைக்கழகத்தை விட்டு அவர் வெளியேறிவிட்டார். கொரிய போரின் போது போர் விமானங்களை ஓட்டினார். அதற்காக அவருக்கு மூன்று பதக்கங்கள் வழங்கப்பட்டன.

போருக்குப் பிறகு ஆம்ஸ்ரோங் மீண்டும் பேர்டியூக்கு திரும்பி படிப்பைத் தொடர்ந்து 1955இல் விமானப்பொறியியல் துறையில் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பிறகு அமெரிக்காவின் தேசிய விண்வெளியியல் ஆலோசனைக் கமிட்டியில் (National Advisor committee on Aeronautics – NACA) இணைந்துகொண்டார். இதுவே 1958இல் "நாசா" (NASA) வாக மாற்றப்பட்டது.

> என்றாவது ஒருநாள் இன்னொரு மனிதன் சந்திரனுக்கு பறந்து சென்று அங்கே நான் வைத்து விட்டு வந்த கமராவை எடுத்துக் கொண்டு பூமிக்கு திரும்புவான்

கலிபோர்னியாவில் உள்ள எட்வேட்ஸ் விமானப்படைத்தளத்தில் அமைந்திருந்த NACA வின் அதிவேக விமானப்பரப்பு நிலையத்தில் 7வருடங்கள் பணியாற்றிய ஆம்ஸ்ரோங் உலகில் மிகச்சிறந்த பரீட்சிப்பு விமானிகளில் ஒருவராக விளங்கினார். X-15 ரொக்கட் விமானங்களை 2இலட்சம் அடி உயரத்தில் மணிக்கு 4ஆயிரம் மைல் வேகத்தில் அவர் ஓட்டினார். 1962 செப்டெம்பரில் ஆம்ஸ்ரோங் நாசாவினால் ஒரு விண்வெளி வீரராக தெரிவு செய்யப்பட்டார். ஜெமினி 8 விண்கலத்தின் பயணத்திற்கு தலைமை விமானியாக பணியாற்றிய அவர் 1966 வரை ஜெமினி 11க்கான பாதுகாப்பு தலைமைவிமானியாகவும் விளங்கினார். ஒரு விண்கலத்துடன் அண்டவெளியில் இன்னொரு விண்கலத்தை இணைக்கும் முதல் செயற்பாட்டை வெற்றிகரமாக ஆம்ஸ்ரோங்கும் அவரது சக விமானியான டேவிட் ஸ்கொட்டும் முடித்து சாதனை படைத்தனர். அப்பலோ11இல் சென்று சந்திரனில் தரையிறங்கிய பிறகு அவர் ஒரு வருடம் கழித்து நாசாவை விட்டு வெளியேறி சின்சினாட்டி பல்கலைக் கழகத்தில் பொறியியல்துறை பேராசிரியராக இணைந்துகொண்டார்.

அரசியல் பதவிகளுக்கு தேர்தல்களில் போட்டியிடுவதற்கு வாய்ப்புகள் வழங்கப் பட்டபோது அவற்றை அவர் நிராகரித்து விட்டார். பல அரசியல் குழுக்கள் அவரை நாடிவந்தன. ஆனால் அவர் அரசியலில் ஈடுபடுவதை அறவே வெறுத்தார். முன்னாள் விண்வெளிவீரர்களான ஜோன் கிளென் மற்றும் ஹரிசன் ஸ்மித் ஆகியோர் அமெரிக்க செனட்டர்களாக வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சலஞ்சர் விண்கலம் 1986ஆம் ஆண்டு கேப்கனவரல் தளத்திலிருந்து ஏவப்பட்ட சில நிமிடங்களில் வெடித்துச் சிதறி 7விமானிகளும் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஒரு உறுப்பினராக ஆம்ஸ்ரோங் பணியாற்றினார். இறுதிக்காலத்தில் மனைவி கரோலுடன் சின்சினாட்டில் ஆம்ஸ்ரோங் வசித்து வந்தார்.

நாசாவிலிருந்து வெளியேறிய பிறகு ஆம்ஸ்ரோங்கின் வாழ்க்கை மிகவும் அந்தரங்கமானதாக இருந்தது. சந்திரனில் தரையிறங்கிய 25ஆவது வருடாந்த நிறைவைக் குறிக்கும் முகமாக ஏற்பாடு செய்திருந்த கொண்டாட்டங்களைக்கூட அவர் பிரதான பங்கை ஏற்கவில்லை.


ஆம்ஸ்ரோங்குடன் சந்திரனில் தரையிறங்கிய எட்வின் ஆல்ட்ரின் தனது சகாவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பி.பி.சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில்; "செவ்வாய்க்கிரகத்தில் மனிதன் காலடி பதிக்கும் வரை மனிதகுலத்தின் மகத்தான சாதனை ஒன்றின் ஆற்றல் மிகுந்த தலைவனாகவும் தளபதியாகவும் ஆம்ஸ்ரோங் நினைவு கூரப்படுவார்" என்று குறிப்பிட்டிருந்தார். ●



அன்றைய அமெரிக்க ஜனாதிபதி நிக்ஷன் தம்பதியருடன் நீல் ஆம்ஸ்ரோங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனுவல் பார்வை



# இளைஞர் காங்கிரஸ் யாழ்ப்பாணம்

ஞா. சிறீமனோகரன்

யாழ்ப்பாணத்தின் முன்னாள் கல்விமான்களில் ஒருவரும் அரசியல் செயற்பாட்டாளருமான ஹன்டி பேரின்பநாயகத்தின் இலட்சியமும் தூர நோக்கும் இலங்கையர் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டு மென்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் முன்னாள் விரிவுரையாளரான கலா நிதி சாந்தசீலன் கதிர்காமருக்கு ஏற்பட்ட அக்கறை மூன்று நூல்களை அண்மை யில் வெளிக்கொணர்ந்தது.

"ஹன்டி பேரின்பநாயகம் நினைவு மலரும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸும்" என்ற தலைப்பில் 1980 களில் வெளியிடப்பட்ட நூலின் மறுபதிப்பு புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு ஒரே சமயத் தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. இவற்றின் வெளியீட்டுவிழா கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்தது.

இந்தப் பணி உண்மையிலேயே பாராட் டப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் ஹன்டி பேரின்பநாயகமும் அவரோடு இணைந்து நின்று யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸை கொள்கை வழிப்பட்டதாக முன்னெடுத்த அன்றைய நிலைப்பாடு களும் பிற்காலத்தில் போதியளவிற்கு தமிழ் மக்களிடம் கொண்டு செல்லப்பட வில்லை. தமிழ்த் தேசிய வாதத்தலைமை கள் அதனை விரும்பவும் இல்லை. அவர் கள் மௌன இருட்டடிப்பே செய்து வந்தனர். அதே போன்று சிங்கள மக்கள் மத்தியிலும் அவை கொண்டு செல்லப்படவில்லை. இச்சூழலில் காலம் கடந்தாவது சாந்தசீலன் கதிர்காமரின் மூன்று மொழியிலான நூல் வெளியீடு செய்யப்பட்டிருப்பது வரவேற்க வேண்டியதாகும்.



கலாநிதி சாந்தசீலன் கதிர்காமர்

ஹன்டி பேரின்பநாயகம் ஒரு முற் போக்குத் தேசியவாதியாய் விளங்கினார் என்பது கவனிக்கப்படல் வேண்டும். ஓர் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தேசிய இனங்களுக்கான அரசியல் தீர்வை வேண்டிநிற்பவர்களுக்கு ஹன்டிபேரின்ப நாயகமும், இளைஞர் காங்கிரஸும் விட்டுச் சென்ற பணி ஒரு வழிகாட்டியாக வும் உந்துதலாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஹன்டி பேரின்பநாயகம் (1899-1977) இலங்கைக்கு முழுமை யான சுதந்திரம் வேண்டுமென்று கோரிய வர்களுள்முதன்மையானவர். காந்தியின் இலட்சியங்களால் கவரப்பட்ட அவர் மிக உன்னதமான கல்வியாளன். குழந்தை களுக்கு தாய்மொழியிலேயே கல்வி புகட்ட வேண்டும் என்பதிலும் மக்கள் அவர்களின் சொந்த மொழியிலேயே ஆளப்பட வேண்டும் என்பதிலும் உறுதி யான பற்றுக் கொண்டவர்.


யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் 1924இல் உருவாக்கப்பட்டு அதன் முதலாவது மகாநாடு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. 1925-1931 களில் மாணவர் காங்கிரஸ் பாரிய வளர்ச்சி கண்டதுடன், பின்னைய ஆண்டில் அது இளைஞர் காங்கிரஸ், யாழ்ப்பாணம் என்றழைக்கப்பட்டது.

மாணவர் காங்கிரஸின் முதலாவது மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் முழுநாட்டிற்குமான முழுமையான சுதந்திரம் தீண்டாமைக்கு எதிரான போராட்டம், இன ஐக்கியம், பெண் விடுதலை, தேசிய இலக்கியம் ஒன்றை வளர்த்தெடுப்பதென்பதையும் வலியுறுத்தின. அந்நியப் பொருட்களின் பாவனையை நிராகரித்து உள்ளூர் உற் பத்திகளைப் பயன்படுத்தினர். இது தேசிய பொருளாதாரத்திற்கான அடிப்படை களைக் கொண்டிருந்த அதன் தலைவர் கள் தேசிய உடையணிவோராக இருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1928ஆம் ஆண்டில் இடம்பெற்ற வரு டாந்த மகாநாட்டில் மிக முக்கிய தீர்மான மொன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. கண்டி, காலி, கொழும்பு ஆகிய இடங் களிலும் இவ்வாறான இளைஞர் அமைப்பு களை உருவாக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அகில இலங்கை மாணவர் காங்கிரஸை உருவாக்குவதன் மூலம் முதலாவது மகாநாட்டில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களை நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







முறைப்படுத்தும் முயற்சியாகவும் குறிப்பாக இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சியாகவும் இதைக் கொள்ளலாம்.

1931 ஆம் ஆண்டு இடம்பெற்ற வருடாந்த மகாநாட்டில் ஒரு பிரபல்யமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அத்தீர்மானம் பிரபல்யமானதா?, சாபக்கேடானதா?, அல்லது முட்டாள்த் தனமானதா? ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் வார்த்தைகளில் - இது அவரவர் அரசியற் கண்ணோட்டம் சம்பந்தப்பட்டது. முதலாவது அரசாங்க சபைக்கான தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற தீர்மானம் நாட்டிற்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கவில்லையென்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர் காங்கிரஸ் டொனமூர் ஆணைக் குழுவின் சிபாரிசுகள் நாட்டிற்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கத் தவறியது என்ற அடிப்படையில் முதலாவது அரசாங்க சபைத் தேர்தலை நிராகரித்திருந்தது.

தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்ற தீர்மானம் ஆரம்பத்திலிருந்தே சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. 1931 இலிருந்து 1934 வரை பகிஷ்கரிப்புக்கு ஆதரவாகவும், எதிராகவும் கூட்டங்கள் இடம்பெற்றன.

1931 இல் அரச சபையில் ஆளுநர் ஆற்றிய உரையில் யாழ்ப்பாணத்தில் நான்கு தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படாமைக்கு கவலை தெரிவித்திருந்தார்.

இளைஞர் காங்கிரஸின் 1932, 1933 கூட்டங்களில் பகிஷ்கரிப்பு விடயம் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்தது.

1934 இல் நான்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழல் இருப்பதாக ஆளுநர்தீர்மானித்தார். இக்காலகட்டத்தில் இளைஞர் காங்கிரஸ் அதன் செல்வாக்கை இழந்திருந்தது. தேர்தல்கள் 1934 ஜுலையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் பகிஷ்கரிப்புக்கு ஆதரவாளன் போல் நடித்த ஜீ.ஜீ பொன்னம்பலம் பின்னர் தனது எதிர்த்தரப்பு ஆனந்தன் போட்டியிடுகிறார் என்ற சாட்டுக்கூறி போட்டியிட்டு வெற்றிபெற்றார். 1939 இல் அரச சபையில் ஆற்றிய உரையில் பகிஷ்கரிப்பு முட்டாள்த் தனமான நடவடிக்கையெனவும் அது அரசியற் தற்கொலையெனவும் ஜீ.ஜீ குறிப்பிட்டிருந்தார். அத்துடன் நின்று விடாமல் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை போதாதென்ற அடிப்படையிலேயே பகிஷ்கரிப்பு இடம்பெற்றதாகவும் உண்மையைத் திரிபுபடுத்திக் கூறியிருந்தார். பிற்காலத்தில் மலையக மக்களின் வாக்குரிமைப் பதிப்பின்போது அவர் எப்படி நடந்து கொண்டார் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

ஜீ.ஜீ.யின் பொய்யை இளைஞர் காங்கிரஸ் நிராகரித்து ''இனவாதமா, தேசிய வாதமா'' என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தை 1939 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிட்டது.

1931 ஆம் ஆண்டின் பகிஷ்கரிப்புக்கு ஓர் இனவாத அடையாளம் கொடுப்பதில் ஆளுநர் சேர். கிராம் தோமஸும் பின்னர் சோல்பரி ஆணைக்குழுவும் பகுதியளவில் பொறுப்பானவர்களாயிருந்தனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

1931 மே மாதம் 6 ஆம் திகதி ஆளுநரால் வைற்ஹோலுக்கு அனுப்பப்பட்ட தந்தியில் ''தமிழர்கள் தமக்கு போதியளவு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லையென்ற மனத்தாங்கலிலேயே பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். இதுவே உண்மைக் காரணம்'' என்று கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் 1931 ஜுன் மாதத்தில் பிரித்தானிய மக்கள் அவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு குடியேற்ற நாடுகளுக்கான உதவி இராஜாங்க செயலாளர் பதிலளித்திருந்தார்.

**ஓம்ஸ்பீ ஹோர் :-** புதிய அரசியல் யாப்பின் கீழ் இடம்பெற்ற தேர்தலை யாழ்ப்பாணத்தினதும் இலங்கையின் வடமாகாணத்தின் இந்தியத் தலைவர்கள் என்ற காரணத்திற்காகப் பகிஷ்கரித்தனர். இலங்கையிலுள்ள இந்திய சமூகத்தவர்களுக்கு சட்டவாக்க சபையில் உரிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்.

**டாக்டர் ஷியல்ஸ் :-** மதிப்பிற்குரிய அங்கத்தவரே! யாழ்.குடாநாட்டின் நான்கு தொகுதிகளுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படவில்லை என்பதைக் குறிப்பிடுகிறார் என நினைக்கிறேன். அங்குள்ளவர்களில் ஏகப்பெரும்பான்மையானோர் இலங்கைத் தமிழர். அவர்களை இந்தியர்கள் எனக் கருதுவதில்லை. சுயாதீனமான அரசாங்கமொன்றை அமைப்பதற்குப் புதிய அரசியலமைப்பு வழிவகுக்கவில்லையென சம்பந்தப்பட்ட மக்கள் காரணம் கூறுகின்றனர்.

**ஓம்ஸ்பீ ஹோர் :-** இலங்கையின் வடபகுதித் தமிழர்கள் தங்களின் இனரீதியான பிரதிநிதித்துவத்தைப் பறித்து ஏனைய இனத்தவர்கள் அடங்கிய பொதுவான பிரதிநிதிகளாக்கப்பட்டதால் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலைப் பகிஷ்கரித்தனர் என்பது உண்மையா?

**டாக்டர் ஷியல்ஸ்:-** இல்லை ஐயா, இது ஒரு சரியான கூற்றல்ல. 46 தொகுதிகளில் எல்லா இனத்தவர்களும் பிரதிநிதித்துவப்படுத்தலாம். தற்சமயம் வேறு தமிழ் வேட்பாளர்களும் உள்ளனர்.

(பிரித்தானிய மக்களவை, நாடாளுமன்ற விவாதம், வாய் மூலமான கேள்விகள். 24 ஜுன் 1931)

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை நாடாளுமன்றத்தில் பகிஷ்கரிப்புத் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்தொன்றை இங்கு சுட்டிக்காட்டலாம்.

1956 களில் சிங்களப் பேச்சாளர்கள் தமிழர்களைப் பிற்போக்குவாதிகள் என்றும் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு எதிரானவர்கள் என்ற மாதிரியும் கருத்துக்கள் வெளியிட்டு வந்தனர். அப்போது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் பீட்டர் கெனமன் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தமிழர் மத்தியிலுள்ள முதலாளித்துவ இனவாதத் தலைவர்களின் பாபச் செயல்களுக்காக முழுச் சமூகத்தையும் வசைபாடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றார்.

அவர் தனதுரையில் டொனமூர் அரசியல் யாப்பு அமுலுக்கு வந்த போது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் ஆற்றிய பணியை நினைவு கூர்ந்தார். சிங்கள மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கியமைக்காகஅவர்கள்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளவில்லை. அது இலங்கைக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கவில்லையென்பதை ஆட்சேபித்தே பகிஷ்கரிப்பு நடாத்தினர் எனத் தெளிவுபடுத்தினார்.

இளைஞர் காங்கிரஸின் செல்வாக்கு 1934இல் மங்கத்தொடங்கியது. இக்காலகட்டத்திலேயே நாட்டின் பிரபல பிரமுகர்களான எஸ்.டபிள்யு ஆர்.டீ பண்டாரநாயக்கா சிங்கள மகா சபையையும் ஜீ.ஜீ பொன்னம்பலம் தமிழர் மகா சபையையும் ஸ்தாபித்து பிற்போக்கு இனவாத அரசியலுக்குள் நாட்டைத் தள்ளினர்.

சிங்கள மக்கள் மத்தியில் முற்போக்குச் சக்திகள் இருப்பதை குறுகிய தமிழ்த் தேசிய வாதிகள் என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை. ஆனால் அவ்வப்போது சிங்கள ஆளும்வர்க்கத்தினருடன் கைகோர்த்து வந்துள்ளனர்.

ஹன்டி பேரின்பநாயகத்தின் எழுத்துக்கள், சொற்பொழிவுகள் என்ற தலைப்பில் உள்ள பகுதியில் 1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது தொடர்பில் வெளியிடப்பட்ட தகவலை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட சமயம் அதற்கு ஆதரவாக 65 வாக்குகளும் எதிராக 28 வாக்குகளும் கிடைத்தன. கம்யூனிஸ்ட் கட்சியினரும், ல.ச.ச. கட்சியினரும் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தனர். இதை இன்று நினைவு கூருவதற்குக் கூட தமிழ்த் தேசிய வாதிகள் தயாரில்லை.

அந்த நூலில் குறிப்பிடாத ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். பாராளுமன்றத்தில் லங்கா சம சமாஜக் கட்சியினர் அனைவரும் சிங்களவராய் இருந்தனர் என்பதும், கம்யூனிஸ்ட் கட்சியில் பீட்டர் கெனமன் ஒரு பறங்கியர் என்பதும், பொன் கந்தையா மட்டுமே தமிழர் என்பதும் கவனிக்கப்பட வேண்டியதொன்று. சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வாக்களித்த தமிழ் எம்.பி.க்களை விடக் கூடுதலான எண்ணிக்கையுடைய சிங்கள இடதுசாரி எம்.பி.க்கள் அச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்திருந்தனர் என்பது இங்குநினைவு கூரப்படல் வேண்டும். இந்த நிகழ்வை என்றுமே தமிழரசுக் கட்சியினரோ, கூட்டணியினரோ, பின் வந்த தமிழ்த் தீவிரவாத இயக்கத்தினரோ, குறிப்பிட்டதும் கிடையாது, குறிப்பிட விரும்பவுமில்லை.

இளைஞர் காங்கிரஸைப்பற்றி தமிழ்த் தலைமையோ, கல்விமான்கள் எனப்பட்டவர்களோ, சரித்திராசிரியர்கள் எனப்பட்டவர்களோ குறிப்பிட விரும்புவதில்லை. ஏன் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே. தமிழர்கள் மத்தியில் ஓர் முற்போக்குத் தேசியம் தோற்றம் பெறுவதையே அவர்கள் விரும்பவில்லை என்பது உண்மையாகும். "டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் இனவாத அரசியல்" என்ற தலைப்பில் ஜேன் றசல் அம்மையாரின் காலநிதிப் பட்டத்துக்கான ஆய்வில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் கருப்பொருளாய் இருந்தபோதும், சரித்திர ஆசிரியர்களும், அரசியல் அறிஞர்களும் இளைஞர் காங்கிரஸ் கட்சி பிரஸ்தாபிப்பதைத் தவிர்த்தே வந்துள்ளனர்.

இவர்கள் குறுகிய இனவாதத்தினுள் மூழ்கியதாலேயே யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்பற்றி குறிப்பிடுவதைத் தவிர்த்துக்கொண்டனர். இதன் காரணமாக சாந்த சீலன் கதிர்காமரின் சளையாத முயற்சி பாராட்டத்தக்கது.

கே.எம்.பீ.டி சில்வாவின் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து 1948 வரை இலங்கைச் சரித்திரம் என்ற நூலிலும் 19ஆம் - 20 ஆம் நூற்றாண்டில் இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற எ.ஜே.வின்சனின் (2000) நூலிலும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் பங்கு மேலெழுந்த வாரியாகவே குறிப்பிட்டுள்ளதை அவதானிக்கலாம்.

இலங்கைத் தமிழரின் தேசிய வாதம் ஆரம்பம் பற்றி ஓர் ஆய்வு (சிட்னி 1999) என்ற நூலை எழுதிய முருகர் குணசிங்கம் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் பற்றி ஏதும் கூறாமலே முற்றுமுழுதாக விட்டுள்ளார். இது தற்செயலானது என்று கொள்ள முடியாது. குறைத்து மதிப்பிடுவது தமிழ் ஏதும் அப்படி ஒன்றும் இடம்பெறாதது போல் பாசாங்கு செய்வது பிற்போக்குத் தமிழ்த் தேசியத்தின் கைவந்த கலை.

யாழ்ப்பாணக் கூட்டமைப்பு, யாழ்ப்

**இளைஞர் காங்கிரஸின் இலட்சியம், நடைமுறை என்பன அது ஒரு இடதுசாரிக் கட்சியாக உருப்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்த போதிலும் அது புத்திஜீவிகளை மட்டும் இலக்கு வைத்து செயற்பட்டதன் காரணம், அதன் வளர்ச்சி ஒரு வரையறைக்குட்பட்டதாக இருந்தது. புத்திஜீவிகளால் மட்டும் நாட்டின் வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, பெண்விடுதலை, சாதியத்திற்கெதிரான போராட்டம், இன ஐக்கியம் என்பனவற்றைக் கொண்டுவர முடியாது என்பதற்கு யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் ஒரு உதாரணமாக விளங்கியது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண தமிழர் அமைப்பு, யாழ்ப்பாண இந்து இளைஞர் சங்கம் போன்றவற்றை குறிப்பிட்ட குணசிங்கம் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ்பற்றி ஒரு சிறு குறிப்புத்தானும் குறிப்பிடாதது தமிழ்த் தேசியவாத பிற்போக்குவாதிகளின் திட்ட மிட்ட இருட்டடிப்புக்கு தகுந்த உதாரணமே யாகும். 1931 தேர்தலைப் பகிஷ்கரித்த பின் கொழும்பில் அகில இலங்கை இளைஞர் காங்கிரஸை உருவாக்கி இருந்தபோது இளைஞர் காங்கிரஸ் மக்கள் மத்தியில் செல்வதற்கான நடவடி க்கைத் திட்டமெதையும் கொண்டிருக்க வில்லை. இளைஞர் காங்கிரஸை ஓர் அரசியல் கட்சியாக வளர்த்தெடுப்பது பற்றி யோசித்திருக்கவில்லை என்பதும் கவனத்துக்குரியதாகும். பகிஷ்கரிப்பை எதிர்த்தவர்கள் பலம்பெற்றபோது 1934 தேர்தலில் யாழ்.குடாநாட்டிற்கான 4 ஆச னங்களுக்கு போட்டியிடுமாறு காங்கிரஸ் கேட்டுக்கொள்ளப்பட்டது. இளைஞர் காங்கிரஸ் போட்டியிடவில்லை. ஆனால் அங்கத்தவர்கள்தனித்தனியேஇனவாதச் சக்திகளுக்கு ஆதரவு வழங்காமல் தேசிய வாதத்தை ஏற்றுக்கொண்டவர்களை ஆதரித்தனர்.

இளைஞர் காங்கிரஸ் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முழுநேர ஊழியனாக கொண்டிராதது அதன் செல்வாக்கை காலக்கிரமத்தில் இழந்தமைக்கான ஒரு காரணம் எனக்கொள்ளலாம். சிறிது காலம் இளைஞர் காங்கிரஸிற்கு ஒரு காரியாலயம் இருந்தது.

இளைஞர் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் சிறிதுகாலமாவது பிரித்தானியாவில் தங்கியிருந்து கல்விகற்றவர்கள் - சாதா ரண யாழ்ப்பாணப் பெற்றோரால் இதை நினைத்துக்கூட பார்க்க முடியாதிருந்தது. கல்வி கற்றவர்கள் அரச உத்தியோகத்தில் சேருவதை இலட்சியமாகக் கொண்டனர். இது இளைஞர் காங்கிரஸின் இலட்சி யத்திற்கு உதவாத செயலாகும்.

இளைஞர் காங்கிரஸால் வெகுஜன இயக்கமெதையும் கட்டியெழுப்ப முடிய வில்லை. அதே சமயம் தென்பகுதியில் சூரியமல் இயக்கம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. சூரியமல் இயக்கத் தைச் சேர்ந்தவர்கள் ல.ச.ச.கட்சி கம் யூனிட்ஸ் கட்சியை உருவாக்கின. அதே சமயம் வடக்கில் பகிஷ்கரிப்புக்கு எதிராக குரல் கொடுத்த பொன்னம்பலம் தமிழ்க் காங்கிரஸ்என்றபெயரில்கட்சிஆரம்பித்து இனவாதத்தை வளர்த்தெடுத்தார்.

இளைஞர் காங்கிரஸ் அங்கத்தவர் களில் பெரும்பகுதியினர் இடதுசாரி இயக் கத்தில் சேர்ந்தனர். போ.நாகலிங்கம், தர்மகுலசிங்கம் போன்றோர் ல.ச.ச. கட்சியிலும் துரைசிங்கம் போன்றோர் சூரியமல் இயக்கத்திலும் பின்னர் கம் யூனிஸ்ட் கட்சியிலும் சேர்ந்தனர். ஏ.ஈ. தம்பர், எஸ்.ஆர்.கனகநாயகம் போன் றோர் யூ.என்.பி.யில் தேசியக் கட்சி என்ற தோற்றத்தில் அதனுடன் சேர்ந்து பின்னர் தமிழ்க் காங்கிரஸுக்குச் சென்றனர். பாலசுந்தரம் சிறிது காலம் தவிர இடது சாரியாய் இருந்து பின்னர் தமிழ் அரசுக் கட்சியில் சேர்ந்தார். சி.சுந்தரலிங்கம் பல்வேறு கூத்தாட்டம் போட்டு மாவிட்ட புரத்தோடு மறைந்தார். நடேசன் இடது சார்பாகவே செயற்பட்டார்.

1930களில் இளைஞர் காங்கிரஸின் நடவடிக்கைகளையும், கொள்கைகளை யும் பெரியளவில் பிரசாரம் செய்வதில் "ஈழகேசரி" பத்திரிகை பெரும்பணியாற் றியது. இளைஞர் காங்கிரஸின் துண்டுப் பிரசுரங்கள், தலைவரின் உரைகள் "இனவாதமா, தேசியவாதமா" என்ற தலைப்பிலான பிரசுரங்கள் திருமகள் அச்சகத்தில் அச்சிடப்பட்டன. பல சந்தர்ப் பங்களில் அச்சிடப்பட்டதற்கு கட்டணங் களை செலுத்த முடியாததால் திரு பொன் னையாவுக்கு கடனாளிகளாய் இளைஞர் காங்கிரஸ் இருந்தது. சில காலம் பொன்னையா அவர்கள் இளைஞர் காங்கிரஸின் பொருளாளராக இருந்தார். ஈழகேசரி இந்தியாவில் நிகழ்ந்தவற்றை தமிழர் மத்தியில் கொண்டுசென்றதில் அளப்பரிய சேவைசெய்தது. திருமகள் அச்சகத்தின் வெளியீடுகள் நாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

ஒரு சமயத்தில் பாரதியாரின் பாடல்கள் இந்தியாவிலே பெருமளவு பிரபல்ய மடையாத நிலையில் இலங்கையில் அதைவிட குறைவான அளவிலேயே மக்கள் மத்தியில் காணப்பட்டது. 1930 இல் ஈழகேசரி பொன்னையா பாரதியின் முழுமையான படைப்பையும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்தார்.

1940களில் கேசரி என்ற ஆங்கில வார இதழ் வெளிவந்த போது மீண்டும் ஈழகேசரிப் பொன்னையாவே முன்வந்து ஹன்டிபேரின்ப நாயகத்துக்காகவும் அந்த வெளியீட்டோடு சம்பந்தப்பட்டவர் களுக்காகவும் அதைவெளியிட நடவடி க்கை எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். பொன்னையாவின் முற்போக்குச் செயற்பாடுகள் அன்று யாழ்ப்பாண வாலிப காங்கிரஸிற்கு பலம் சேர்த்து நின்றன.

ஹன்டி பேரின்பநாயகம் இடதுசாரி சார்பாகச் செயற்பட்டதுடன், இடதுசாரி களுடன் தொடர்புகளை வைத்திருந்தார்.

1980 ஹன்டி பேரின்பநாயகம் நினைவுக்குழுவைச் சேர்ந்த ஒரேற்றர் சுப்பிரமணியம், என்.சபாரத்தினம், வி. சிவசுப்ரமணியம், ஏ.எஸ்.கனகரத்தினம் போன்றோர் இடதுசாரிகளாகவே அடை யாளம் காணப்பட்டனர்.

ஏ.எஸ்.கனகரத்தினம் இலங்கை - சீன நட்புறவுச்சங்கத்தின் வட/பிரதேச தலை வராக செயற்பட்டவர். அவரது காலத்தில் நானும் நட்புறவுச் சங்க அங்கத்தவ னாயிருந்தேன். நான் அவரிடம் ஒரு வருடகாலம் யாழ். இந்துக் கல்லூரியில் ஆங்கிலம் கற்றேன். அவர் இறுதிவரை ஒரு இடதுசாரியாகவே இருந்து வந்தார்.

இளைஞர் காங்கிரஸின் இலட்சியம், நடைமுறை என்பன அது ஒரு இடதுசாரிக் கட்சியாக உருப்பெறுவதற்கான சந்தர்ப் பங்கள் அதிகமாக இருந்த போதிலும் அது புத்தி ஜீவிகளை மட்டும் இலக்கு வைத்து செயற்பட்டதன் காரணம், அதன் வளர்ச்சி ஒரு வரையறைக்குட்பட்டதாக இருந்தது. புத்திஜீவிகளால் மட்டும் நாட்டின் வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, பெண்விடுதலை, சாதியத்திற்கெதிரான போராட்டம், இன ஐக்கியம் என்பனவற்றை கொண்டுவர முடியாது என்பதற்கு யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் ஒரு உதாரணமாக விளங் கியது.

இளைஞர் காங்கிரஸில் பல குறை பாடுகள் இருந்தபோதும், அக்காலகட்டத் தில் அது ஆற்றிய பணி பாராட்டத்தக்கது. இளைஞர் காங்கிரஸின் பணிகளில் இருந்து நாம் பாடங்களைக் கற்று அந்த இயக்கம் கொண்டிருந்த இலட்சியம் முழுமையாக அடைவதற்கு நாம் முயற்சி க்க வேண்டும். இன்றைய சூழலில் ஏற த்தாழ கடந்த ஒரு நூற்றாண்டில் பட்ட றிவாக தமிழ் மக்கள் மத்தியில் புதியதோர் பாதையும் பயணமும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அது நிச்சயம் அன்றைய யாழ்ப்பாண வாலிபக் காங்கிரஸ் முன்னெடுத்து நின்ற முற்போக்கான தமிழ்த் தேசியத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதாகவே அமைய வேண்டும்.

அத்தகைய முற்போக்குத் தமிழ்த் தேசியம் தான் இன்றைய காலத்தின் தேவையாகும். அத்தகைய சக்திகளுடன் நாட்டின் நேர்மையான இடதுசாரிகள் இணைந்து முன்செல்வதில் எவ்வித தடையும் இருக்க முடியாது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை தீ



-த.வி.ரிஷாங்கன்-

அதோ எரிகிறது ஏதோ!
யாரோ எரிக்கின்றார் எதையோ!
கரும் புகை மூட்டம் வானை முட்டியும்
எங்களை மூடியும் இருக்கிறது.
தீயும் நாற்றம் ஊரெல்லாம் பரவியிருக்கிறது.
நாசித் துவாரங்களுக்குள்
மல்லிகை வாசனை திணிக்கப்படுகிறது.
நமக்கேன் அது பற்றிய ஆராய்ச்சி
வேறு வேலைவெட்டி இருப்பின் பார்ப்போம்!
வாரீர்.

எரிவதும் எரிக்கப்படுவதும் நாமேயாயினும்
நமது நேரம் பொன்னானது எனவே
நமக்கேன் வீண் வம்பு .
எரிந்த பின்னும் எரித்து முடித்த பின்னும்
சொல்லி அனுப்புங்கள் வந்து வேடிக்கை பார்க்கிறோம்,
வீணான சவச் சாம்பலை.

சொற்களில் மாத்திரமே கவலையாய் பேசுவோம்,
வேண்டுமென்றால் கொஞ்சம்
முதலலைக் கண்ணீரும் வடிப்போம்

எங்களிடம் வேறெதையும் கேட்டு விடாதீர்.
எம்மால் எதையும்
தரவோ, செய்யவோ முடியாது.
நாங்கள் இப்படி இருக்கவே ஆக்கப்பட்டவர்கள் அறிவீர். (2)

எத்தனைஎத்தனைதீக்களில்நாம்தினமும்எரிந்துநிற்கின்றோம்
எம்மிடம் எதற்கும் கணக்கில்லை,
கணக்கு வைக்க யாரும் எங்களை விடுவதுமில்லை
தீச் சூட்டு வடுக்கள் பற்றியோ
கருகிய சாம்பல்கள் பற்றியோ
தீயை எம்மத்தியில் வைத்தவர் பற்றியோ
நாம் பேசுவதுமில்லை,
பேசப்போவதுமில்லை,
எங்களிடை இருக்கும் அவரை
அறிந்துகொள்ள நாம் விரும்புவதுமில்லை.

நெருப்பின் வடிவம் பற்றியோ
அதன் சுவாலைகள் செய்யும் அக்கிரமங்கள் பற்றியோ
எந்தக் கவலையும் கொள்ளாமல்
தினமும் மகிழ்ந்து குலாவியிருப்போம்
காண்பீர்.

★★★★★★

ஆயிரம் ஆண்டுகால பழங்கதைகள் உள்ளன எம்மிடம்
பல புதுமைப் புனைவுகளும் உள்ளன நம்மிடம்
அவை பற்றிப் பெருமை பேசிப் பேசியே
நாம் நமது காலத்தின் கடைசிவரை
வாழ்ந்து போவோமே அன்றி.

எடுப்புக்கெல்லாம் கேள்விகேட்டு
எதையும் யாரோடும் பகைத்துக்கொள்ளோம்.
அனைத்துக்கும் அடிபணியும் சமரசமே எங்கள் மந்திரமாகும்.

★★★★★★

அழகழகாய் விதவிதமாய்
எத்தனை எத்தனை தீச் சுவாலைகள் நம்மூர்களில்,
அத்தனையையும் மூட்டியவர்கள் பெரும் கெட்டிக்காரர்கள்,
இல்லை இல்லை பெரும் சக்திக்காரர்கள்,
இல்லை இல்லை அவர்கள் பெரும் புனிதர்கள்.

அவர்தம் கெட்டித்தனத்தை நாமே ஆக்கினோம்,
அவர்தம் சக்திக்கு நாமே உணவாயிருந்தோம்,
அவர்தம் புனிதத்துக்கு நாமே படியளந்தோம்,
அனைத்துக்கும் நாமே காரணமும் ஆனோம்.

எத்தனை எத்தனை தீச்சுவாலைகள் நம்மூர்களில்
நம்மத்தியில் .....

★★★★★★

சாதியெனும் ஓர் அழகிய தீ...
எரித்தவை ஓராயிரம்
அதில் எரிந்தவை பல்லாயிரம் (2)
மகிழ்வோடு கூடிக் களித்திருந்த இருந்த எம்மை
நீறு பூசி
குறுக்காலே நூல் போட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் மந்திரப் புகை போட்டு
வந்தவர்
அவர்
வகை வகையாய் கால் என்றும் கை என்றும்
தலை என்றும் மார்பென்றும்
நம் பிறப்பின் கதைகள் பல பேசியும்,
செய்தும்,
எம்மைப் பீடம் கட்டி அழகழகாய் எரித்தனர்.
இதுவே சொர்க்கம் எனும் கனாவில் நாம் எரிந்து சாம்பல் ஆனோம்.

வர்க்கம் எனும் பெரும் தீ...
எரித்தவை ஓராயிரம்
அதில் எரிந்தவை பல்லாயிரம்
நாம் என்றும் நமக்கான உழைப்பு என்றும் இருந்த நம்மிடம்
உழைப்பின் வகை சொல்லி
உழைப்புக்குச் சொந்தம் கூலியாக்கி
உழைப்பிலே முழுநேரமும் எம்மைக் கிடக்கச் செய்து
உழைப்பிலே நாம் கருகியபடி இருக்கையில்
அவர்கள் அதில் சுகமாய்க் குளிர் காய்ந்தனர்.
நாம் இயந்திரத்தின் கீழே எரிந்து சாம்பல் ஆனோம்.

மதம் எனும் மாபெரும் தீ ....
எரித்தவை ஓராயிரம்
அதில் எரிந்தவை பல்லாயிரம்
நமக்குள் இருந்த பயம் ஊறிச்
சுடராகப் பற்றி எரிந்தது
தீ.
சின்னதாயும் பெரிதாயும் ஆங்காங்கே யாருக்கெல்லாமோ
எம்மை எரித்து உணவாக்கியது
அத் தீ.
பெரும் போர்கள் செய்து அதற்கு நூல்களும் செய்து
புதிது புதிதாய்
பெரும் கதைகள் சொல்லிக்கொண்டே
தினமும் எங்கள் கைகளும் மனங்களும்
அதில் எரிந்தே சாம்பலாயின.

தேசியம் எனும் போலித் தீ
ஊரெல்லாம் புரையோடி இருக்கக் காண்பீர்
இருப்பின் அடையாளங்களிலும் எல்லாமுமாகவும்
புதிதாயும் வகைவகையாயும் அத் தீயை மூட்டிய வண்ணமே
இருக்கிறார்கள்.
எங்களை ஏதோவொரு கலவையாய்க் கலந்து
எரித்தும் விடுகிறார்கள் அதில்.
எதுவும் தெரியாமலே எங்கள் சுயங்களை
எரித்துச் சாம்பலாக்கினோம்.

இனம் எனும் ஒரு பொறித் தீ
நிறங்களுக்குள்ளும் தீயை வைத்து
எல்லாத் தலைமைகளையும் அதில் எரிய வைத்து
உரிமைக்கான தீ என்றாகி
சிந்தனைகளை எல்லாம் பொய்யாக்கி
கேள்விகளை எல்லாம் முடமாக்கி
முடிவில் முடிவேதும் இல்லாமல்
எல்லோரையும் எரித்துச் சாம்பலாக்கிப் போனது.

அதிகாரம் எனும் ஆசைத் தீ
இது பொல்லாத் தீ
ஆண்டாண்டு காலமாய் அடக்க முடியாத,
அடங்காது எல்லோரையும் அழிக்கும் கொடுந் தீ.
இந்தக் கருத்து, அந்தக் கருத்து என்று எல்லாப் பக்கமும்
சுடர் விட்டுப் பற்றியெரியும் தீ
யாருக்கெல்லாம் தேவையோ அவர்தம் கையேந்தியும்
கைவிட்டும், மண் விழுந்தோடியும் எல்லோர் கைகளுக்கும்
சேர்ந்தும்
மூட்டியவரையும் எரிக்கும் தீ
முழுமையாக எங்களை எரித்துச் சாம்பலாக்கி ஏப்பம் விடும்

எத்தனை எத்தனை தீச்சுவாலைகள் நம்மூர்களில்
நம்மத்தியில்......

★★★★★★
உங்கள் அடிமைகள் நாம்
எங்களை முழுமையாக எரித்து விடுங்கள்.
உங்கள் கனவுகளை
எங்கள் சாம்பல்கள் கொண்டு பூசி மெழுகி விடுங்கள்.
எங்கள் சாம்பல்கள் மீது காவியம் பாடுங்கள்.
எங்கள் சம்பல்கள் மேல் நின்று ஊளையிடுங்கள்.
ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்
நாங்கள் யாருமில்லா எங்கள் ஊர்களில்
நீங்கள் மட்டும் தனியே நிற்க வேண்டாம்.

நீங்கள் வைத்த தீயில் எரியாமலும்
உங்களால் எரிக்க முடியாமலும் போன
எங்களிற் சில இன்னும் எங்கேனும்
சாம்பல்களிற் உயிர்ப்போடு கிடக்கவே செய்யும்
தீயின் சூடு தாங்காமல்
தணியாமல் இருக்கவே செய்யும்
அவை மீண்டும்
சாம்பலின் சுடர் மிக எழும்
உங்களையும் எரித்துச் சாம்பலாக்கித்
தங்கள் காலடிகளில் புதைத்தும் விடும்
அறிவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு பெறும் எண்ணமில்லை

நடராஜ விநாயகன்

விளையாட்டு வீரர்கள் ஓய்வுபெறுவதென்பது எப்போதுமே சர்ச்சைக் குரியதொன்றாகவேயுள்ளது. ஏனைய துறைகளில் முதுமையின் பின்பே ஓய்வு கிடைக்கும், ஆனால் விளையாட்டுத் துறையில் மட்டும் தான் இளமையில் ஓய்வு பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையுள்ளது. இல்லையேல் புகழின் உச்சியில் இருப்பவர்கூட பேரிழந்து, புகழிழந்து அவமானப்பட வேண்டுமென்பது வரலாறு. இந்திய கிரிக்கெட்டும் இதற்கு விதிவிலக்கல்ல.

1980களின் இறுதியில் இந்திய கிரிக்கெட்டுக்குள் நுழைந்த சச்சின் டெண்டுல்கர் இன்று மிகப்பெரிய அழுத்தத்திற்குள் சிக்கியுள்ளார். கிரிக்கெட் உலகில் கால் நூற்றாண்டு காலத்தை எட்டவுள்ள சச்சின் ஓய்வுபெற வேண்டுமா, இல்லையா என்பது குறித்து இந்தியாவில் மட்டுமல்ல கிரிக்கெட்புகழ்கூறும் நாடுகளிலெல்லாம் வாதப்பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன.

புகழின் உச்சியிலிருக்கும்போது ஓய்வு பெறுவதென்பது சுயநலமென்பது சச்சினின் கருத்து. ஆனால் புகழின் உச்சியிலிருக்கும்போதே உலகில் பல வீரர்கள் ஓய்வுபெற்று மேலும் புகழ் பெற்றதுடன், பின்னர் வரக்கூடிய தேவையற்ற சர்ச்சைகளிலிருந்தும் தப்பித்துக்கொண்டது வரலாறு. இது சச்சினுக்கு தெரியாததல்ல. அவர் ஆடும் கிரிக்கெட்டிலும் சரி, அவர் ரசிக்கும் ஏனைய விளையாட்டுகளிலும் சரி "ஓய்வு" என்பது பெரும் பிரச்சினைக்குரியதொன்றாகவேயுள்ளது.

விளையாட்டுகளில் பிரதானமானவர்கள் வீரர்களும் ரசிகர்களுமே. வீரர்களின் திறமை உச்சத்திலிருக்கும் போது அந்த வீரரைப் போற்றிப் புகழும் ரசிகர்கள், தாங்கள் ரசிக்கும் விளையாட்டைத்தான் பிரதானமாகக் கருதுகிறார்களே தவிர, தாங்கள் ரசிக்கும் வீரர்கள் தவறுவிடும் போது அதனை ரசிப்பதில்லை. தங்கள் நம்பிக்கை நட்சத்திரம் தங்களை ஏமாற்றி விட்டதாகவே கவலையடைகின்றனர். கிரிக்கெட், உதைபந்தாட்டம், டெனிஸ் கூடைப்பந்தாட்டம், தடகளம் கூட இதற்கு விதிவிலக்கல்ல.

போட்டிகளில் தீர்ப்புகளை வழங்குபவர்கள் நடுவர்கள் அல்லது மத்தியஸ்தர்கள். ஆனால் போட்டியாளர்களின் (வீரர்கள்) தரத்தை தீர்மானிப்பவர்கள் ரசிகர்கள். இதனால் தான் எப்போது ரசிகர்களுக்கு வீரர்கள் கசக்கின்றார்களோ அப்போது வீரர்கள் ஓய்வுபெற வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். இதைத்தான் அந்தந்த விளையாட்டுகளை கட்டுப்படுத்தும் அமைப்புகள் கூட அளவு கோலாக வைத்துக் கொண்டு வீரர்களுக்கு நிர்ப்பந்தங்களை கொடுக்க முற்படுகின்றன. இந்த வலைக்குள் சிக்காத அல்லது சிக்க விரும்பாத வீரர்கள் சர்ச்சைகளுக்குள் சிக்குகின்றனர்.

இந்திய கிரிக்கெட்டில் சச்சின் ஒரு ஜாம்பவான். இதனை இந்திய ரசிகர்கள் மட்டுமல்ல கிரிக்கெட் புகழ்கூறும் நல்லுலகமெங்குமுள்ள ரசிகர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவரது சாதனைகள் குறித்து இங்கு ஆராய வேண்டியதில்லை. ஆனால் இன்றைய நிலையில் இந்திய கிரிக்கெட்டில் சச்சினின் வகிபாகமென்பது சர்ச்சைக்குரியதாகிவிட்டது. சச்சினை சர்ச்சைக்குரிய ஒருவராகப் பார்க்க இந்திய ரசிகர்களோ, உலக ரசிகர்களோ முற்படாத நிலையில் இந்திய கிரிக்கெட்டின் தற்போதைய வீழ்ச்சி நிலை, சச்சினின் ஓய்வு குறித்து அதிகமாக ஆராய்வதைத் தவிர்க்க முடியாத நிலையிலுள்ளது.

சச்சினின் ஓய்வு குறித்து பேசப்படும் போது, இந்திய அணியில் தற்போதைய நிலையில் சச்சினின் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்படுகிறது. இந்திய கிரிக்கெட்டில் மும்மூர்த்திகளாக வர்ணிக்கப்பட்டவர்கள் சச்சின், ட்ராவிட், லக்ஷ்மண். இந்த மும்மூர்த்திகளின் துணையுடனும் இளம் வீரர்களின் பங்களிப்புடனும் இந்திய அணி பல்வேறு சாதனைகளைப் படைத்தது. ஆனால் முன்னைய காலங்களைப் போலல்லாது இன்று கிரிக்கெட்டும், பந்து வீச்சின் வேகத்திற்கேற்ப நகர முற்படுகிறது.

டெஸ்ட் கிரிக்கெட், சர்வதேச ஒரு நாள் போட்டி, ருவென்ரி-20 என அதன் வடிவமும் மாறுபடுகின்றது. நவீன விஞ்ஞானத்தில் இன்று உலகமே கிராமமாகி விட்டதெனக் கூறப்படுகையில், கிரிக்கெட்டிலும் 5 நாள் டெஸ்ட் போட்டி இன்று 8 மணிநேர 'ருவென்ரி-20'க்குள் அடங்கிவிட்டது. மண்ணை உண்ட கண்ணனின் வாயைத் திறந்த யசோதை அவனது வாய்க்குள் முழு உலகத்தையும் கண்டது போல் இன்று கிரிக்கெட்டும் 'ருவென்ரி-20'க்குள் அடங்கி விடும் நிலையிலுள்ளதால், டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி ஜாம்பவான்களை ரசிகர்கள் மெல்ல மெல்ல மறக்கத் தொடங்கி விட்டனர்.



ஆனாலும், ஈழத்து கவிஞன் மஹாகவி கூறியது போல் "மப்பன்றி மழை காணா மண்ணில் சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது, ஏரேறாது எனினும் பாறை பிளந்து பயன் விளைவிப்பான் நம்மூரான்" என்பது போல் கிரிக்கெட்டின் பழைய வடிவங்களின் ஆபத்பாந்தான்களாக உள்ள மிகச்சில வீரர்களில் சச்சின் முன்னிலையிலுள்ளார். பழைமை பேணி புதுமையை தகர்க்க வேண்டுமென்பது அவரது நோக்கமல்ல. ஆனால் கால நீரோட்டமும் அவரை தன்பக்கம் இழுத்துவிட்டது. டெஸ்ட் போட்டிகளில் விரும்பியாடும் சச்சின், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாள் போட்டிகளிலும் ஐ.பி.எல். போன்ற "ருவென்ரி-20" யிலுமே ஆடுகிறார். இது, அவர் ஓய்வுபெற வேண்டுமெனக்கூறுவோரையும் சிந்திக்க வைக்கிறது. செத்துப் போய்க் கொண்டிருக்கும் டெஸ்டில் விளையாட விருப்பம், கைவிடப்படும் நிலையிலுள்ள ஒருநாள் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட போட்டிகளில் மட்டுமே பங்கேற்பு, இன்று கிரிக்கெட் உலகையே ஆக்கிரமித்து விட்ட "ருவென்ரி-20" யிலிருந்து விலகலாமென தனது நிலையுணர்ந்து சச்சின் போட்டிகளைத் தெரிவு செய்வதன் மூலம், இளம் வீரர்களுக்குரிய சந்தர்ப்பங்களை எந்த வகையிலும் தடுக்கவில்லை.




ஆனாலும் சச்சினின் ஓய்வு குறித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் பேசப்படுகிறது. முன்னைய சச்சின் இப்போது இல்லையென்பதே இதற்கு முன்வைக்கப்படும் காரணமாகிவிட்டது. சச்சின் எதிரணி பந்து வீச்சாளர்களை, தனது விரைவுக்கால் நகர்த்தல்களால் தாக்குதல் ஆட்டமாடி அயர வைப்பதைப் பார்ப்பது முன்பு கிரிக்கெட்டில் மிகவும் மகிழ்ச்சியானதருணங்களாகும். ஆனால் தற்போது அவர் ஓட்டங்களைப் பெறத் தடுமாறுவதைப் பார்க்க கஷ்டமாயிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது.

சச்சின், துடுப்பாட்டத்தில் உச்ச கட்டத்திலிருக்கும் போது சுழல் பந்து வீச்சாளர்களால் சச்சினைக் கட்டுப்படுத்தவே முடியாது. வேகமான கால் நகர்த்தல்களால் பந்து வீச்சாளர்களுக்கு ஒரு நிமிடம் கூட நிம்மதியைக் கொடுத்திருக்கமாட்டார். அவரது உச்சக்கட்ட ஆட்டத்தின் போது சுழல்பந்து வீச்சாளர்களை மட்டுமல்ல வேகப் பந்து வீச்சாளர்களையும் வெறுப்பேற்றி அவர்களை ஆக்ரோஷப்பட வைத்து ஒழுங்காக பந்து வீச விடாமல் செய்து ஓட்டங்களைக் குவித்த சச்சின் தற்போது சாதாரண பந்து வீச்சைக் கூட நிதானமாக ஆடுவது வேதனைக்குரியதென விமர்சிக்கப்படுகிறது.

முன்பெல்லாம் வலைப்பயிற்சியில் ஈடுபடாத அவர் தற்போது நீண்டநேரம் வலைப்பயிற்சி செய்வது அவருக்கே அவர் மேல் சந்தேகமேற்பட்டுவிட்டதா எனக்கேள்விஎழுப்பப்படுகிறது. அவரைப் போன்ற மிகப்பெரிய வீரர்கள் வலைப் பயிற்சியில் அதிக நேரம் ஈடுபடுவதை எவரும் பார்த்ததில்லை. ரசிகர்கள் ஏற்படுத்தும் நெருக்கடிதான் அவரை வலைப் பயிற்சியில் அதிக நேரம் செலவிடச்செய்கிறதெனவும் முன்னாள் மேற்கிந்தியக் கப்டன் லாரா போன்றவர்கள் இது போல் தங்களின் ஆட்டத்தின் போக்கைஒருநாளும் மாற்றிக் கொண்டதில்லை யெனவும் கிரிக்கெட் ஜாம்பவான்கள் சிலர் கூறியுள்ளனர்.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் சேர்த்து சச்சின், மிக நீண்ட நாட்களின் பின் நூறாவது சதம் பெற்றிருந்தார். அதனை அவர் பெறுவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. அதற்கிடையில் எழுந்த விமர்சனங்களெல்லாம் அவரைமுள்ளாகத்தைத்த போதும் அவற்றையெல்லாம் அவர் பொறுத்துக்கொண்டார். இது, கிரிக்கெட்டுக்கு அப்பால் அவரது குணவியல்பைக் காட்டியது. தற்போது ஓய்வு குறித்து மீண்டும் பேச்சுகளெழுந்தாலும், என்று நான் விரும்புகிறேனோ அன்று நானாகவே ஓய்வுபெறுவேனெனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே இந்தியாவில் தற்போது முடிவடைந்துள்ள 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் 2 ஆவது டெஸ்ட்டில் முதல் இனிங்ஸில் 17 ஓட்டங்களைப் பெற்ற சச்சின் 1ஆவது டெஸ்டில் பல பந்துகளைச் சந்தித்து குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைப் போல், விக்கெட்டில் பந்து பட்டு போல்டாக ஆட்டமிழந்தபோது, முன்னாள் இந்திய அணிக்கப்டனும் சாதனையாளனும் சச்சினின் மானசீகக் குருவுமான சுனில் கவாஸ்கர் "ஸ்டார் ரிவி" நேர்முக வர்ணனையில் தெரிவித்த கருத்துக்கள், ஓய்வு குறித்து சச்சினை அதிகம் சிந்திக்க வைத்திருக்குமென கூறப்படுகிறது.

சச்சினுக்கு வயதாகி விட்டது, கால் நகரவில்லையென கவாஸ்கர் வேதனையுடன் கூறியிருந்தார். விக்கெட்டுக்கு நேராக வந்த பந்தை காலை முன்வைத்து தடுத்தாடுவார் அல்லது பழைய சச்சினாக இருந்தால் அந்தப்பந்து நேராக பவுண்டரிக்குச் சென்றிருக்கும். ஆனால் கடந்த 2 டெஸ்ட்டிலும், பந்து அவரது கால்கள் நகர்ந்ததை விட வேகமாகச் சென்றதை கண்கூடாக அனைவரும் பார்த்தனர். கவாஸ்கரின் இந்தக் கருத்து இப்படியிருக்கையில் இந்திய அணிக்கே ஒரு முன்னுதாரணமாகவும் அணியில் இளைஞர்களின் வழிகாட்டியாகவும் தற்போதிருக்கும் மிக முக்கிய மான மூத்த வீரருமான சச்சின் அணியில் இருக்க வேண்டுமா, இல்லையா என்பதை அவரிடமே விட்டுவிடுவோம். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்து என்ற உயிர்க் கொல்லி

ரோட் மாஸ்டர்




**இலங்கையில் தினமும் வீதி விபத்துகளினால் சராசரியாக 7 பேர் கொல்லப்படுகிறார்கள். தலைக்காயங்களே பெரும்பாலான விபத்து மரணங்களுக்கு காரணமாகின்றது**

இலங்கை என்ற சிறிய தீவில் நாளாந்தம் 50 சதவீதத்திற்கும் மேலாக நாளாந்த தேவைக்காக குறுகிய, நீண்ட தூர வாகனப் பிரயாணங்கள் நடைபெறுகின்றன. இதில் நீங்கள், நான், ஏன் உங்கள் உறவினர், என்னுடைய உறவினர்கள், உங்கள் நண்பர்கள், என்னுடைய நண்பர்கள், இதற்கும் அப்பால் உங்களுக்குத் தெரிந்தவர்கள், எனக்குத் தெரிந்தவர்கள் இல்லாவிட்டால் தெரியாத மனிதர்கள் கூட இருக்கலாம் அல்லவா?

வீதி விபத்துகள் கவலையீனமாக இடம்பெறுபவை என்ற அடிப்படையில் மேல் சொன்ன யாராவது காயப்பட்டிருந்தாலும், கொல்லப்பட்டிருந்தாலும், வேண்டுமென்றே கொல்லப்படுவோர், காயப்படுத்தப்படுவோர் போன்று சட்ட ரீதியாக பாரதூரமான குற்றங்களாக கணிக்கப்படாவிட்டாலும் பாதிப்பு ஒன்று தானே.

வீதியில் இருக்கும் வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வது. இதனால் அந்த வாகனங்களுக்குள் இருப்போர், வெளியிலிருப்போர் அல்லது வீதியில் இருப்போர் காயங்களுக்குள்ளாவதும், உயிராபத்துக்கு உள்ளாவதும், வாகனங்களுக்கும் ஏனைய சொத்துகளுக்கும் சேதம் விளைவிப்பதும், வீதி விபத்து எனப்படலாம். வாகனச் சாரதிகளின் கவலையீனத்தால் ஏற்படுவதால் இது விபத்து எனப்படுகிறது.

அண்மையில் போக்குவரத்து பொலிஸ் திணைக்களத்தின் தகவல்களின் படி ஒரு நாளுக்கு 6 இலிருந்து 7 பேர் வரை வீதி விபத்துகளால் கொல்லப்படுகின்றனர்.

போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் புள்ளி விபரங்களுக்கமைய, 2012ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்திலிருந்து மே மாதம் வரை 15,982 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இதில் உயிராபத்தை விளைவித்த விபத்துகள் 991 ஆகும்.

இந்த ஆண்டில் ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் ஜனவரி மாதத்திலேயே கூடுதலான விபத்துகள் ஏற்பட்டுள்ளன, ஜனவரியில் நடந்த 3834 வீதி விபத்துகளில் 228 விபத்துகள் உயிராபத்தை விளைவித்துள்ளன.

புதிய தகவல்களின்படி மோட்டார் சைக்கிள்களால் 75 சதவீதமான வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதில் கூடுதலாகப் பாதிக்கப்படுவோர் 18 வயதிலிருந்து 35 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களே.

மோட்டார் சைக்கிள்களும் முச்சக்கர வண்டிகளுமே கூடுதலாக வீதி விபத்துகளில் சிக்குண்டு, அதிக சேதமுமடைகின்றன. வாகனச் சாரதிகளின் கவனமின்மையே வாகன விபத்துகளுக்கான முக்கிய காரணம் என்பதை பொலிஸார் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றனர்.

வாகனங்களை முந்திச் செல்லல், அதிவேகத்தில் செல்லல், சடுதியாக வாகனத்தைத் திருப்புதல், குடிபோதையில் வாகனங்களைச் செலுத்துதல், வாகனத்தின் இயந்திரங்களில் குறைபாடுகள், நடைபாதைப் பயணிகளினதும் வாகனச் சாரதிகளினதும் அலட்சியம், வீதிகளின் சாதகமற்றதும் சேதமடைந்ததுமான தன்மை, சாரதிகளின் சோர்வு போன்ற வற்றினால் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளைச் சாரதிகள் கடைப்பிடிக்காமையினால் வீதி விபத்துகள் ஏற்படுவதாக பொதுவாகக் கூறப்படுகிறது.

வாகனச் சாரதிகளின் கவனமின்மை என்பதில் அவர்கள் குடிபோதையில் வாகனங்களைச் செலுத்துவது முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது.

வாகனம் செலுத்துவதில் ஒழுங்கின்மை, அதிவேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல், பொருத்தமற்ற வீதிகளில் வாகனங்களை முந்திச்செல்ல முயற்சித்தல், வீதி விளக்குகளின் சமிக்ஞைகளைச் சரியாகப் பின்பற்றாமல் சடுதியாகத் திருப்புதல், குடி போதையில் வாகனத்தைச் செலுத்துதல், சாரதியின் சோர்வுக்குள்ளாதல் என்பன இரவு வேளைகளில் கூடுதலான வாகன விபத்துகள் ஏற்படக் காரணமாக அமைகிறது.

2006ஆம் ஆண்டின் வாகன விபத்து சம்பந்தமான அறிக்கைகளுக்கமைய, அவ்வாண்டில் இடம்பெற்ற 33, 339 விபத்துகளில் 16,765 விபத்துகளும் வாகனம் செலுத்துவதில் ஒழுங்கின்மையால் இடம்பெற்றுள்ளது.

சாரதிகள் மது போதையில் வாகனங்களைச் செலுத்தும் போது தங்கள் சுய நினைவை இழந்து செலுத்துகிறார்கள். இதனால் பல பாரதூரமான விபத்துகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலங்களில் இடம் பெற்றுள்ளன.

ஜுன் 24 அன்று ஐந்து உயிர்களைக் காவு கொண்ட வீதி விபத்தொன்று பொத்துஹர, குருநாகல் பகுதியில் இடம்பெற்றது. தங்கள் உயிர்களைத் தொலைத்த ஐவரில் மூன்று ஆண்களும், இரு பெண்களும் அடங்குவர். இந்த ஐவரும் ஒரு திருமண வைபவத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியிலே ரஞ்சனாகம என்ற இடத்தில் குறித்த வீதி விபத்தில் சிக்குண்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியின் சாரதி இன்னொரு வாகனத்தை முந்திச்செல்ல எத்தனித்த போதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்ததாவது, ஐவரும் பயணித்த முச்சக்கரவண்டியில் மது அருந்தி விட்டுப் பயணம் செய்ததற்கான சாட்சியாக ஒரு சாராயப் போத்தல் கிடைக்கப்பெற்றுள்ளது. சாரதி மது அருந்திவிட்டு வண்டியைச் செலுத்தியதாலேயே விபத்து நேர்ந்ததாக வைத்திய பரிசோதனைகளில் நிரூபணமாகியுள்ளது.



தலையில் ஏற்பட்ட பலத்த காயங்களாலேயே இவர்கள் மரணித்துள்ளனர்.

வாகனச் சாரதியினரின் சோர்வுத்தன்மையும் வீதி விபத்துகளுக்கு வழிவகுக்கிறது. அதாவது, சாரதிகள் மிக நீண்ட தூரமாக வாகனங்களைச் செலுத்தும் போது, ஓய்வின்மை காரணமாக கடுமையான சோர்வுக்குள்ளாகின்றனர். இது வீதியில் பயணிக்கும் மற்றவர்களுக்கு மிகுந்த அச்சுறுத்தலாக அமைகிறது. ஆகவே நெடு தூரம் பயணிக்கும் சாரதிமார் ஒரு சில நிமிடங்களோ அல்லது மணித்தியாலங்களோ ஓய்வெடுத்து விட்டு தங்கள் பயணங்களைத் தொடருதல் நல்லது.

வாகனச் சாரதிகள் விபத்துக்கான காரணமாக சேதமடைந்த வீதி விளக்குகளையும், செப்பனிடப்படாத வீதிகளையும் குறைகூறுகின்றனர். அத்தோடு வாகனங்களின் சமிக்ஞை விளக்குகளை எதிரே வரும் வாகன ஓட்டுநர்கள் தேவையில்லாமல் எரிய விடுவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். இந்த விளக்குகளின் அதி கூடிய ஒளி காரணமாகச் சரியாகக் கவனம் செலுத்த இயலாமல் விபத்துகள் நேரிடச் சந்தர்ப்பங்கள் உண்டு என்றும் எச்சரிக்கின்றனர்.

வாகனச் சாரதிகள் மட்டுமல்ல வீதியில் செல்லும் பாதசாரிகளின் கவலையீனம் கூட வீதி விபத்துகளுக்கு காரணமாக அமைகிறது. இவர்கள் கூடுதலாக தமக்காக வழங்கப்பட்டிருக்கும் பாதசாரிகள் கடவையில் (pedestrian crossing) பாதையைக் கடக்காமல், தங்கள் எண்ணப்படி சடுதியாகத் தேவையற்ற இடங்களில் வீதியைக் கடக்கும் போது வாகனச் சாரதிகளுக்கு வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமையால் விபத்துகள் ஏற்படுகின்றன.

ஆனால் பாதசாரிகள் சரியாகக் கடவையில் கடக்க முற்பட்டாலும் சரியாக கடவையில் நிறுத்தாமல் செல்லும் வாகனச் சாரதிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இவற்றுடன் இயந்திரக் கோளாறுகளுடைய, வீதியில் செலுத்த முடியாத நிலைமையில் உள்ள வாகனங்களாலும் வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன.

பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இயங்கும் போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் கே.அரசரட்ணம், வாகன எண்ணிக்கையே வீதி விபத்துகளுக்கான முக்கிய காரணம் என அண்மையில் ஊடகங்களுக்குச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதாவது ஏறக்குறைய 4 இலட்சத்து 50 ஆயிரம் புதிய வாகனங்கள் மோட்டார் வாகனப் பதிவகத்தில் பதியப்பட்டுள்ளன. இதில் 2 இலட்சத்து 50ஆயிரம் மோட்டார் சைக்கிள்களாகும். அத்துடன் நாளாந்தம் 600 மோட்டார் சைக்கிள்கள் மோட்டார் வாகனப் பதிவகத்தில் பதியப்படுகின்றன.

தற்போது இங்கையின் வீதிகளில் ஏறத்தாழ 2.7 மில்லியன் வாகனங்கள் பயணம் செய்கின்றன. இதில் கூடுதலாக இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்களே அடங்குகின்றன.

அண்மையில் வெளியான தகவல்களின்படி மோட்டார் சைக்கிள்களில் அதிகமாக இளம் வயதினரே பயணிப்பதாகவும், அவர்கள் போக்குவரத்து விதிகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை என்றும் கூறப்படுகிறது. இவ்விளைஞர்கள் அவசரமாகவும், வேகமாகவும், திகிலூட்டும் வகையிலும்,சாகசம் செய்யும் வகையிலும் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துகிறார்கள்.

அத்துடன் தலைக்கவசம் அணியாமல் பாதுகாப்பற்ற வகையில் துணிவு என்ற வகையில் செலுத்துகின்றனர். இதனால் மோட்டார் சைக்கிள் விபத்துகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

அரசாங்கம் வாகனங்கள் மீதான இறக்குமதி வரியை பெப்ரவரி மாதத்தில் குறைத்தது, இதன் விளைவாகத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் குவிந்தும் கிடக்கின்றன. வாகனங்களை வாங்குவதற்கு நிதிக் கொம்பனிகளினாலும் வங்கிகளினாலும் கடன் வசதிகளும் தவணைக் கொடுப்பனவு வசதிகளும் செய்து கொடுக்கப்படுவதனால் வாகனத்தை நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன் தாராள பொருளாதார நிலைமையினால் வாகனங்களை வைத்திருப்பது தனியொருவரின் அந்தஸ்தை உயர்த்துவதாகக் கொள்ளும் மனப்பிரமை ( mental complex) கொண்டிருப்பதனாலும் தனிப்பட்ட வாகனங்களைபாவிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதில் கவனிக்கத்தக்கதாவது, பெப்ரவரி மாதம் குறைத்த வாகன இறக்குமதி வரியை மே மாதம் மீண்டும் அரசாங்கம் அதிகரித்துள்ள போதும் வாகனக் கொள்வனவு குறைந்ததாக இல்லை.

இதனையடுத்து முக்கிய காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் ஒழுங்கின்மையைக் கூறலாம். உதாரணமாக ஹெட்டியாவத்தையிலிருந்து ரத்மலானை வரை பயணிக்கும் 155 என்னும் இலக்க பஸ் மிகவும் மெதுவாகவே பயணிக்கும், 30 நிமிடங்களில் செல்ல வேண்டிய இடத்துக்கு 1 மணித்தியாலத்தின் பின்பே செல்ல வேண்டி நேரிடும்.

அதே போல மலையகத்தை எடுத்துக் கொண்டால் கொழும்பிலிருந்து கண்டி செல்ல 2 மணித்தியாலங்களே எடுக்கும். ஆனால் தற்போது 3 தொடக்கம் 4 மணித்தியாலங்கள் எடுக்கிறது. முன்பெல்லாம் கொழும்பிலிருந்து ஹட்டன் வரை செல்ல 3 மணித்தியாலங்கள் எடுக்கும். தற்போது குறைந்தது 5 மணித்தியாலங்கள் வரை பயணிக்க வேண்டியுள்ளது.


முச்சக்கர வண்டிகளில் பயணிக்க விரும்பினாலும் கட்டணம் அதிகம் என்பதால் கட்டுப்படியாவதில்லை. வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவது இலகுவான விடயமல்ல. அதனால் வாகனமொன்றைச் சொந்தமாக வாங்கி விட்டால் என்ன என்ற வாதம் பிரபலமாகி வாகனக் கொள்வனவை நோக்கி மக்களைத் தள்ளுகிறது.


அண்மைக்காலமாக வாகனச் சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரத்தை விரைவாகவும் போதிய பயிற்சி அற்ற நிலையிலும் பெற்றுக்கொள்வதற்காக பிறழ் செல்வாக்குச் செலுத்துவதாகவும், இதில் கையூட்டல் முக்கியமாக இருப்பதாக அறிய முடிகிறது.

போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் வீதி விபத்துகளை கட்டுப்படுத்துவதற்காக பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் வீதிப் போக்குவரத்து பொலிஸார் சட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்தாத சம்பவங்களையும் அறிகிறோம். சில பொலிஸார் கையூட்டலுக்காக வீதிப் போக்குவரத்து விதிகளை மீறியவர்களை சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப வைத்த சம்பவங்கள் சில அம்பலப் படுத்தப்பட்டதையும் நாம் அறிவோம்.

வீதி விபத்துகளைத் தடுக்க சட்ட, அறிவூட்டல் நடவடிக்கைகளுக்கு அப்பால் வீதி, வாகனப் பிரயோகம் தொடர்பாக முறையாகப் பரிபாலிக்கும் திட்டங்கள் அவசியமாகும். ●

# இயற்கையின் அழகும் அட்டகாசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராய்! நீ வாராய்..!

கலையுலகம்



தமிழாகரன்

## சினிமா ஒரு நவீன கதைசொல்லி

இயக்குநர் என்ற முறையில் நான் செய்ய முற்படுவதெல்லாம் விடயங்களை உண்மையாகக் காட்டுவதற்கு மாறாக உயிரோட்டத்தோடு காட்டுவது தான்.

– இங்க்மார் பெர்க்மென் –

## சினிமாவில் எது உண்மை?

இன்று சினிமாவில் நாடகத்தன்மை எந்தளவுக்கு கெடுக்க முடியுமோ அந்தளவுக்கு கெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் என்னைப்பொறுத்தவரையில் உண்மையான தேசிய சினிமா இந்த நாடகத்தன்மையில் இருந்துதான் உருவாக முடியும். அதற்காக உண்மையான திறமைமிக்க இயக்குநர்கள் தங்களின் முழு அறிவுத்திறனையும் உபயோகிக்கவேண்டும். மிசோகுச்சி, குரோசோவா,கினுகாசா போன்ற இயக்குநர்கள் "நோ" "காபுகி" போன்ற நாடகப்பாணியில் இருந்துதான் தங்கள் கை வண்ணம் மூலம் தங்களின் உயரிய கருத்துகளை வெளிக்கொணர்ந்தார்கள் என்பதை மறக்கக்கூடாது.

–ரித்விக் கட்டக்–



தமிழ்மொழி தெரியாமல் தமிழில் இலக்கியத் தரமிக்க பல வெற்றிப் படங்களை இயக்கி மகத்தான சாதனை புரிந்தவர் அமெரிக்கரான எல்லீஸ். ஆர். டங்கன். இவர் முதன் முதலாக "சதிலீலாவதி' என்னும் படத்தை இயக்கி தமிழ்த்திரைப்பட உலகில் நுழைந்தார்.

டங்கன் 1909ஆம்ஆண்டுஅமெரிக்காவிலுள்ள ஓஹியோ மாநிலத்தில் பார்டன் என்ற சிற்றூரில் ஒரு தபால் அதிகாரியின் மகனாக பிறந்தார். பள்ளிப்படிப்பை முடித்தவுடன் கையில் ஒரு பாக்ஸ் கேமராவுடன் ஸ்பெயின் வழியாக பல ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்தார். அங்குள்ள மக்களின் வாழ்க்கைக் கோலங்களையும் மரபுகளையும் இயக்கி வனப்புகளையும் பல்வேறு கோணங்களில் படம்பிடித்தார். இதனால் இவரைத் தேடி பரிசில்களும் பாராட்டுகளும் தேடிவந்தன. கலையார்வ உந்துதலால் தாயகம் திரும்பிய டங்கன் தெற்கு கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் சேர்ந்து திரைப்படக் கலையைப் பயின்றார். இவருடன் கல்வி கற்ற மாணவர்களுள் எம்.எஸ்.டாண்டன் என்ற இந்தியருமொருவர்.

டாண்டன் இந்தியாவுக்கு வந்த பிறகு தன் சக மாணவர்களான எல்லீஸ்.ஆர் .டங்கன் மற்றும் மைக்கேல் ஓமலோங் ஆகியோரை சினிமாத் தொழில் செய்யும் நோக்கில் இந்தியாவுக்கு வரவழைத்தார். மைக்கேல் ஓமலோங்தான் 1937இல் "நவயுகன்" என்ற தமிழ்ப்படத்தை இயக்கியவர். கல்கத்தாவில் அயன்தாஸ் என்பவர் தயாரித்து வந்த "நந்தனார்" என்ற தமிழ்ப் படத்தை அப்போது இயக்கிக் கொண்டிருந்த டாண்டன், தனது நண்பர் டங்கனையும் அதில் துணை இயக்குநராக பணியாற்ற வைத்தார். "நந்தனார்" (1935) படம் தான் கே.பி.சுந்தராம்பாள் ரூபா ஒரு இலட்சம் சம்பளம் பெற்று சாதனை படைத்த படம்.

1936 இல் எஸ்.எஸ்.வாசன் எழுதிய "சதிலீலாவதி" என்ற நாவலை கோவை ஏ.எம். மருதாசலம் செட்டியார் திரைப்படமாகத் தயாரிக்க முன்வந்தார். அதன் போது முதலில் டாண்டனையே இயக்குநராக்க விரும்பினார். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாண்டனின் பலத்த சிபாரிசின் காரணமாக டங்கனுக்கே அந்த இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. இப்படத்துக்கு வசனம் எழுதிய பிரபல நாடகாசிரியர் கந்தசாமி முதலியார். இவரது மகன் எம்.கே. ராதாவை கதாநாயகனாகவும் ''லங்காதகனம்' படத்தில் சீதையாக நடித்த எம்.ஆர்.ஞானம்பாளை நாயகியாகவும் டங்கன் தேர்வு செய்தார்.

இயக்குநர் டங்கன் நாயகன் கிருஷ்ண மூர்த்தி (எம்.கே.ராதா) இலங்கைக்கு தப்பிச் செல்லும் காட்சிகளை இலங்கையிலேயே படம் பிடித்தார். இப்படத்தில் மதுவிலக்கு பிரசாரமும் ஆங்கில நடனமும் உண்டு. துப்பறியும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரங்கையா நாயுடுவாக எம்.ஜி.ஆர் நடித்தார். அப்போது சம்பளமாக 300 ரூபாவை இவர் பெற்றுக் கொண்டார். நயவஞ்சக நண்பனின் சூழ்ச்சியினால் குடிகாரனாகி கொலைப் பழியும் சுமத்தப்பட்டு நாட்டைவிட்டு ஓடி ஒழியும் ஒரு அப்பாவியின் கதைதான் சதிலீலாவதி. இப்படம் 28.03.1936இல் வெளிவந்து பெரும் வெற்றியைப் பெற்றது.

சதிலீலாவதிப் படம் இயக்குநர் டங்கனுக்கு மட்டுமல்ல எம்.கே.ராதா, எம்.ஜி.ஆர் ஆகியோருக்கும் முதற்படம். இப்படத்தின் வெற்றியுடன் இயக்குநர் டங்கனுக்கு நிறையப் படம் வர ஆரம்பித்தன. சுமார் 15 ஆண்டுகாலம் தொடர்ந்து பணியாற்றி பல புகழ்பெற்ற படங்களையும், கலைஞர்களையும் உருவாக்கினார்.

சினிமா ராணி டி.பி.ராஜலட்சுமியும் மகாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தியும் நடித்த ''சீமந்தினி'' என்ற புராணப்படத்தையும் டங்கன் இயக்கினார். விதிமுடியப்போகும் நிலையில்தன்கணவன்சந்திராங்கதனை சோமவார விரதம் இருந்து சீமந்தினி காப்பாற்றுவதாக கதை. வங்காள கமரா மேதை ஜித்தன் பானர்ஜியும் டங்கனும் இணைந்து படத்தை வெற்றிபெற வைத்தனர். அமெரிக்காவில் ஒப்பனைக் கலையைக் கற்றிருந்த டங்கன் தானே ராஜலட்சுமிக்கு ஒப்பனை செய்தார்.

தமிழ்க் கவிஞர் ச.து.சு.யோகி கதை வசனம் எழுதிய ''இரு சகோதரர்கள்'' படத்தையும் டங்கன் இயக்கினார். இப்படத்தை கோவை பி.ராமசாமி தயாரித்தார். கூட்டுக்குடும்பத்தில் பிறந்த இரு சகோதரர்கள் சபாபதியும் பசுபதியும் தத்தம்மனைவிகளோடுசேர்ந்து குடும்பச் சொத்துக்காக சண்டையிடும் கதை. கே.பி.கேசவனும் கே.கே.பெருமாளும் இரு சகோதரர்களாக நடித்தனர். இதில் எம்.ஜி.ஆர். ஒரு முஸ்லிம் இளைஞராக நடித்தார். டங்கனின் வெற்றிப்பயணத்தில் ஓர் இமாலய வெற்றிப் படமாக இப்படம் அமைந்தது. 1937 இல் வெளிவந்த ''அம்பிகாபதி'' எம்.கே. தியாகராஜ பாகவதரின் நடிப்பில் சேலம் எஸ்.எஸ். தொட்டன்னச் செட்டியார் தயாரித்தார் முதலாம் குலோத்துங்கன் சோழ நாட்டை ஆண்ட போது புலவர் கம்பனின் மகன் அம்பிகாபதிக்கும் இளவரசி அமராவதிக்கும் இடையே மலர்ந்த காதல் கதை இது. அதுவரை தமிழ்த் திரையுலகம் கண்டிராத நெருக்கமான காதல்க் காட்சிகளை வெகு சிறப்பாக டங்கன் படமாக்கியிருந்தார்.

தினமணி உதவியாசிரியராக இருந்த தமிழ்ப் புலவர் இளங்கோவனை



அம்பிகாபதி படத்தின் மூலம் வசனகர்த்தாவாக டங்கன் அறிமுகம் செய்தார். இப்படத்தில் ஒட்டக்கூத்தராக நடித்த டி.பி.எஸ்.மணியும் இணைந்து வசனம் எழுதி தமிழ்த்திரையுலகில் வசனப்புரட்சியை தொடக்கிவைத்தனர். பாகவதர் அம்பிகாபதியாகவும் எம்.ஆர். சந்தான லட்சுமி அமராவதியாகவும் செருக்களத்தூர் சாமா கம்பராகவும் பி.பி.ரங்காச்சாரி குலோத்துங்கனாகவும் நடித்தனர். இந்தப் படம் அற்புதக் கலைஞர்களின் சங்கமத்தில் உருவானது. படம் 52 வாரம் ஓடி சரித்திரம் படைத்தது.

வில்லியம் ஜே.மொய்லாண் என்பவருடன் இணைந்து டங்கன் ''காளமேகம்'' (1940), ''சூர்ய புத்திரி' (1941) முதலான படங்களை இயக்கினார். காளமேகம் படத்தில் நாதஸ்வர மேதை டி.என். ராஜரத்தினம்பிள்ளை நடித்தார். இப்படங்களும் டங்கனின் தனித்தன்மையை வெளிப்படுத்தின. தொடர்ந்து இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமி நடித்த ''சகுந்தலை'' எனும் திரைப்படத்தையும் இயக்கினார். இப்படத்தில் இசைமேதை ஜி.என்.பால சுப்பிரமணியம் துஷ்யந்தனாக நடித்தார். இங்கு துஷ்யந்தன் - சகுந்தலை காதல் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டது. இருவரும் பாடும் ''ம மோஹன அணங்கே' என்ற பாடல் அந்தக் காலத்தில் ''சுப்பர் ஹிட்'' பாடல். துறையூர் ராஜகோபால சர்மாவின் இசையில் பாபநாசம் சிவன் எழுதிய பாடல்களையும் எம்.எஸ்.கணவர் டி.சதாசிவம் எழுதிய வசனங்களையும் பொருத்தமாகக் கையாண்டு காப்பியச் சுவை குன்றாமல் டங்கன் இப்படத்தை இயக்கியிருந்தார். சதாசிவம் இப்படத்தை தயாரித்திருந்தார். இப்படம் நூறு நாட்கள் ஓடி வெற்றி பெற்றது.

டி.ஆர்.மகாலிங்கம், ஆர்.பாலசரஸ்வதி, என்.எஸ்.கே. முதலானோர் நடித்த ஜோதிமலர் (அல்லது) தாஸிப்பெண் என்ற படத்தை தயாரித்து இயக்கினார். இப்படத்தில் எம்.ஜி.ஆர். சிவபெருமானாக வந்து சிவதாண்டவம் ஆடினார். இப்படம் 1943 இல் வெளிவந்தது. ஆனால் இப்படம் எதிர்பார்த்தளவு வெற்றிபெறவில்லை. மீண்டும் சதாசிவம் தயாரிப்பில் எம்.எஸ்.சுப்புலட்சுமி கதாநாயகியாக நடிக்க ''மீரா'' என்னும் திரைப்படத்தை இயக்கினார். 16ஆம் நூற்றாண்டில் மீரா வாழ்ந்த ராஜஸ்தானிலுள்ள ஜெய்ப்பூர், உதய்ப்பூர் மற்றும் சித்தூர், துவாரகை, பிருந்தாவன், மதுரா, ஜமுனை நதிக்கரை ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடந்தது. திரைக்கதை வசனத்தை கல்கியுடன் சதாசிவம் இணைந்து எழுதினார். மீராவை மணக்கும் மன்னன் ராணாவாக வி.நாகையாவும் தளபதி ஜயமல் பாத்திரத்தில் எம்.ஜி.ஆரும் நடித்தனர்.

யமுனை நதியோரம் நட்சத்திரம் ஒன்று வானில் எரிந்து தெற்கு நோக்கி விழும் காட்சியை ஜித்தன் பானர்ஜியின் கேமரா வெகு இயல்பாக படம் பிடித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கல்கி எழுதிய "காற்றினிலே வரும் கீதம்" என்ற பாடல் எஸ்.வி.வெங்கட்ராமனின் இசைக்கும் எம்.எஸ்.இன் குரலுக்கும் அழியாப் புகழைத் தந்தது. ஒரு இன்னிசைச் சித்திரமாக உருவாக்கப்பட்ட மீரா 1949இல் செக், டொரான்டோ, வெனீஸ் போன்ற அயல்நாட்டு திரைப்பட விழாக்களில் கலந்து விருதுகளைப் பெற்றது. இப்படம் இந்தியிலும் தயாரிக்கப்பட்டு மாபெரும் வெற்றி பெற்றது.

டங்கனின் புகழ் மென்மேலும் பெருகி வந்தது. இதனை அறிந்த மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் தனது நிறுவனம் தயாரித்த 'பொன் முடி', 'மந்திரகுமாரி' ஆகிய படங்களை இயக்கும் பொறுப்பை டங்கனிடம் வழங்கினார். பாரதிதாசனின் 'எதிர்பாராத முத்தம்' என்ற நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட படம் பொன்முடி (1950). படத்தில் நரசிம்மபாரதி, மாதுவிதேவி நடித்தனர். வித்தியாசமான கமராக் கோணங்கள் மூலம் படத்தை இயக்கினார். குறிப்பாக காதலர்கள் உருண்டு புரளும் காதல் காட்சியை ஆங்கிலப் படங்களுக்கு நிகராகப் படமாக்கியிருந்தார் டங்கன்.

கலைஞர் மு.கருணாநிதியின் வெற்றி பெற்ற நாடகக்கதை "மந்திரகுமாரி". கொடியவனாகவும் கொள்ளைக்காரனாகவும் உலவிய பார்த்திபன் ஒரு ராஜ குருவின் மகன். மந்திரகுமாரியைக் காதலித்து மனைவியாக்கிக் கொள்கிறான். தன் சுயரூபத்தைத் தெரிந்துகொண்ட அவளை ஒரு மலையுச்சிக்கு அழைத்துச் சென்று தள்ளிவிட முயன்றான். கொடியவன் பார்த்திபனாக எஸ்.ஏ.நடராஜன் நடித்திருந்தார். இப்படத்தில் இடம்பெற்ற "வாராய் நீ வாராய்" என்ற உச்சக் கட்டப்பாடல் காட்சி ஏற்காடு மலையைச் சுற்றி எடுக்கப்பட்டது. டங்கன் அங்கேயே தங்கியிருந்து இதனைப் படமாக்கினார்.

அந்த நாளிலேயே மூன்று கேமராக்களைப் பயன்படுத்திப் படமாக்கினார் டங்கன். மாதுவிதேவி தன் கணவனை மலையிலிருந்து தள்ளிவிடும் காட்சியில் நடராஜனைப்போன்ற டம்மியைச் செய்து அவரது உடைகளையே அணிவித்து உருட்டிவிடச் செய்தார். காட்சி இயற்கையாக அமைந்தது. "வாராய் நீ வாராய்" பாடல் ஜி.ராமநாதனுக்கும் திருச்சி லோகநாதனுக்கும் வாழ்நாள் சாதனைப்பாடலாக அமைந்தது. இப்படம் முடிவதற்குள் டங்கன் தனது மனைவியுடன் அமெரிக்கா சென்றுவிட்டதால் மீதிப்படத்தை டி.ஆர்.சுந்தரமே இயக்கி வெளியிட்டார். படம் நூறு நாட்களுக்கும் மேல் ஓடி வெற்றி பெற்றது.

தமிழ்சினிமாவில் எல்லீஸ்.ஆர்.டங்கன் வருகை பல்வேறு புதிய தடங்கள் உருவாகக் காரணமாயிற்று. இயக்குநர் ஒருவரின் ஆளுமைத்திறன் எப்படி திரைப்படத்தின் முழு இயக்கத்தையே மாற்றியமைக்கும் என்பதற்கு டங்கனின் திரைப்பங்களிப்பை தொகுத்துப் பார்த்தால் தெளிவாகப் புரியும். இவரது படங்கள் மூலம் தமிழில் ஹாலிவுட்பாணி அறிமுகப்படுத்தப்பட்டது. டங்கனால் பட்டை தீட்டப்பட்ட கலைஞர்கள் தான் பின்னர் தமிழ் சினிமாவின் திசைப் போக்கைத் தீர்மானித்தார்கள். இயக்குநருக்கான அந்தஸ்து, தகுதி எப்படி இருக்கும் என்பதை டங்கன் நிரூபித்தவர்.

**எல்லீஸ்.ஆர்.டங்கன் படவரிசை இயக்கியவை :**

01. சதிலீலாவதி (1936- தமிழ்)
02. சீமந்தினி (1936 - தமிழ்)
03. இரு சகோதரர்கள் (1936 - தமிழ்)
04. அம்பிகாபதி (1937- தமிழ்)
05. காளமேகம் (1940 - தமிழ்)
06. சகுந்தலை (1940 - தமிழ்)
07. சூரிய புத்திரி (1941 - தமிழ்)
08. தாஸிப்பெண் (அல்லது) ஜோதிமலர் (1943 -தமிழ்)
09. வால்மீகி (1945 - தெலுங்கு)
10. ரிட்டர்னிங் சோல்ஜர் (1945-தமிழ்)
11. ரிட்டர்னிங் சோல்ஜர் (1945-தெலுங்கு)
12. மீரா (1945 - தமிழ்)
13. மீரா (1947 - ஹிந்தி)
14. பொன்முடி (1950 - தமிழ்)
15. மந்திரகுமாரி (1950 - தமிழ்)

1994இல் இந்திய அரசு டங்கனுக்கு "சத்யஜித்ரே' விருது வழங்கி கௌரவித்தது. இதனைப் பெற்றுக் கொள்வதற்காக டங்கன் இந்தியா வந்தார். பிலிம் சேம்பர் அரங்கில் இவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. அப்போது எம்.எஸ். சுப்புலட்சுமி தனது கணவர் சதாசிவத்துடன் கலந்து கொண்டு மீரா படத்தில் இடம்பெற்ற பஜனையை உள்ளம் உருகப் பாடி டங்கனையும் உருக வைத்தார்.

டங்கன் இயக்கிய தமிழ்த்திரைப்படங்கள் தமிழ்த்திரையுலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க படங்களாக பல்வேறு சிறப்புகளுக்கும் தகுதிகளுக்கும் உரியவையாக விளங்கின. இன்றைய திரைப் படக்கலை மாணவர்களுக்கு டங்கன் இயக்கிய படங்கள் பெரும் பாடங்களாகக் கற்றுக் கொடுப்பவையாகவே உள்ளன. சினிமா பார்ப்போரின் கண்களை இன்னும் சற்றே அகலத்திறக்க உதவுகின்றன.

சினிமா மொழி தனக்கு முன்பிருந்த பல்வேறு கலை வடிவங்களை வெகுசர்வ சாதாரணமாக பயன்படுத்திக் கொண்டது. அவற்றைத் தன்னோடு இணைத்து இழைத்துக் கொண்டது. இவற்றை எவ்வாறு டங்கன் சாத்தியப்படுத்தியுள்ளார் என்று பார்ப்பதன் ஊடாகவே டங்கனின் தனிச் சிறப்புகளை நாம் இனங்காணலாம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# அறங்காவலர்களுக்கு ஒரு வேண்டுகோள்

## தொண்டாற்றலுக்குப் புதிய சிந்தனை



தெ.ஈஸ்வரன்
மொரிஸியசுக்கான கௌரவ தூதுவர்

'அன்புதான் சிவம்' என்று திருமூலர் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். இதைச் சொல்லாத மதங்களில்லை. "அகம் பிரமாஷ்மி" நான் இறைவன் என்று (மனிதன்தான், இறைவன்) வேதங்களும் கூறுகின்றன.

மனிதன் படுகின்ற துயரத்தைப் பார்த்து துடித்தார் வள்ளலார். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் பசியினாலிளைத்தே, வீடுதோறிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன், நீடிய பிணியால் வருந்துகின்றோரென்னேருறக் கண்டுளந்துடித்தேன், ஈடின்மானிகளா யேழைகளாய்நெஞ் சிளைத்தவர் தமைக் கண்டே யிளைத்தேன்" என்று வருந்தினார்.

சிவயோக சுவாமிகள் "நீ கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை எனச் சாதனை செய். கடவுள் உள்ளும் புறமுமுள்ளவர்". என்று சொன்னார்.

தாயுமான சுவாமிகள் பூஜைக்கு மலர் பறிக்கச் சென்றார். தோட்டத்திலே மலர்கள் பூத்துக் கிடந்தன. ஒரு பூவைப்பறிக்க செடியில் கை வைத்தார். துடித்து கையை எடுத்துவிட்டார். "ஐயோ பறிக்கின்ற மலரில் நீயல்லவா இருக்கின்றாய்" என்று அவர் மலரைக் கொய்யவில்லை. "பன்மலர் எடுக்க மனமும் நண்ணேன்". மலரினுள் இறைவன் இருக்கின்றான் என்று எண்ணி மலரை பறிக்காமலே விட்டுவிட்டார் தாயுமான சுவாமிகள். இவ்வாறு நமக்கு முன் இவ்வுலகத்திலே தடம் பதித்த அனைத்து ஞானிகளும், புனிதர்களும், பெரியார்களும் "மனிதனுள் தான் இறைவன் இருக்கின்றார் அதனால் மனிதன் இறைவன் என்று படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறார்கள். சுவாமி விவேகானந்தர் யாருடைய நெஞ்சம் ஏழைகளுக்காக துயரத்தில் அழுமோ அவனையே" நான் மகாத்மா என்பேன்.

கடைசியாக ஒன்று சொல்வதென்றால் வள்ளலார் ஒரு வரம் கேட்டார் இறைவனிடம் "இறைவா உன்னுடைய அருள் பலத்தால் இசைத்த போது, இசைத்த போதெல்லாம் உயிர்கள் தாம் வருந்தும் வருத்தத்தை தவிர்க்கும் நல்வரம் தரவேண்டும்" என்று கேட்டு அழுதார். சுருங்கக் கூறின் மனிதன் தெய்வம். மனிதன் இறைவன். அவன் எல்லா உயிர்களிலும் இருக்கின்றான். ஆகவே மனிதனுடைய வருத்தத்தை பசி பிணியை தவிர்க்க வேண்டும் என்று எல்லாப் புனிதர்களும் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

இலங்கைத் திருநாட்டில் ஆயிரம் கோவில்கள் இருக்கின்றன. நல்ல வசதி படைத்த கோவில்கள் நிறைய இருக்கின்றன. இந்தக் கோவில்களுக்கு நிறைய வருமானமும் இருக்கின்றது. வருமானத்திலிருந்து கோவிலை பராமரிப்பதற்கும், உற்சவங்கள் செய்வதற்கும், வருமானத்தின் ஒரு பகுதியை செலவழித்தது போக மிகுதியாக ஒரு பெரிய தொகை மிஞ்சுகிறது. இந்த மிஞ்சுகிற தொகை மக்களின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டால் அறங்காவலர்கள் இறைவனின் ஆசீர்வாதத்திற்கு உரியவராவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இந்த வருமானம் கோவிலுக்கு வரும் பக்தர்களால் கொடுக்கப்பட்டது. இதை நல்ல முறையில் நிர்வாகம் செய்யவேண்டிய பாரிய பொறுப்பு அறங்காவலர்களைச் சேர்ந்தது.

> "பன்மலர் எடுக்க மனமும் நண்ணேன்"

நம் நாட்டில் அநேகமான கோவில்கள் அறநெறி பாடசாலைகளை நடத்துகின்றன. இது அறங்காவலர்கள் செய்யும் பெரிய தொண்டு. நம் குழந்தைகளுக்கு சிறுவயதிலிருந்து நல்ல போதனைகளையும், வாழ்க்கை முறைகளையும் கற்பித்து வந்தால் அவர்களது எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும். இந்தப் பாடசாலைகளை நடத்துவதில் நல்ல அக்கறை எடுத்து தகுதி பெற்ற ஆசிரியர்களை வைத்து நல்ல பழக்கங்களை கற்றுக்கொடுப்பதுடன், நமது புராணங்களையும் சேர்த்து சொல்லிக் கொடுத்தால் இன்றைய குழந்தைகள் நாளைய சிறந்த தலைவர்களாவார்கள்.

இத்துடன் நிற்காமல் கோவிலைச் சுற்றி வாழும் மக்களினுடைய பசிப்பிணியை அகற்றும் தொண்டில் கோவில்கள் சிறிது கவனம் செலுத்தினால் சிறப்பாக இருக்கும். முதலில் கோவில் வாசலிலே அமர்ந்து பிச்சை கேட்கும் மனிதர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள். அவர்களுக்கு நாம் ஒரு வாழ்வு அமைத்துக் கொடுக்க முடியாதா? பிச்சைக்காரர் இல்லாத கோவில்கள் என்று பேர் வாங்கக்கூடாதா? வாசலிலே அமர்ந்து பிச்சை கேட்பவர்களுக்கு கோவில்கள் ஒரு வாழ்வு அமைத்துக் கொடுக்கக்கூடாதா? நாம் சற்று வித்தியாசமாக சிந்தித்துப் பார்க்கக் கூடாதா? இன்றைய கோவில் அறங்காவலர்களில் அநேகர் வியாபாரிகள். பலர் தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். ஏதோ ஒரு வழியில் இவர்களுக்கு நிரந்தர வருமானத்தை உண்டுபண்ணி இவர்கள் வாழ்வை பயனுள்ளதாகசெய்துகொடுக்கமுடியாதா? மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற வாசகங்களை பலமுறை கேட்டிருக்கிறோம். ஆனால் சேவை செய்வதற்கு துணிச்சல் இருக்கிறதா? தலைநகரிலுள்ள இந்துக்கோவில்கள் ஒவ்வொன்றும் பத்துப் பேருக்கு வாழ்வு கொடுத்தால் நம் தலைநகரில் பிச்சைக்காரர்களே இருக்க மாட்டார்கள்.

"சுமித்திரையோ" என்று ஒரு நிறுவனம் கொழும்பில் இருக்கிறது. இந்த நிறுவனத்தைப் பற்றி வெகுவாக விளம்பரம் செய்வார்கள். இந்த விளம்பரத்தில் "மன அழுத்தமா?, ஏன் பிறந்தீர்கள் என்று நினைக்கிறீர்களா? சொல்லொணா துயரமா?, எங்களிடம் வாருங்கள்" என்ற வசனங்கள் மட்டும் இருக்கும். அங்கு சென்றால் வருகிறவர்களை வரவேற்று ஒரு தேநீர் கொடுத்து பாதிக்கப்பட்டவர்களுடன் பேசுவார்கள். அவர்களின் மனக் குறைகளைக்கேட்டு ஆறுதல் சொல்லி மதச்சார்பற்ற பிரார்த்தனை, தியானங்களைப்பற்றிய அறிவுறுத்தல்களைச் சொல்லி, வந்தவர்களின் மன நிலையை மாற்றி அனுப்புவார்கள்.

இன்று நம் நாட்டில் தற்கொலைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. மன அழுத்தம் உள்ளவர்கள் இந்த நிலையத்திற்குச் சென்று பெரும் ஆறுதலடைகிறார்கள். "சுமித்திரையோ" செய்யும் பெரும் தொண்டு இது. இதிலே தொண்டு செய்பவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட அன்பு உள்ளம் கொண்ட இலவசத் தொண்டர்கள். தொலைபேசி ஊடாகவும் இந்தத் தொண்டர்களுடன் பேசலாம். இம்மாதிரியான ஒரு தொண்டை நமது இந்து நிறுவனங்களும் சிந்தித்துப் பார்க்கலாமே.

இந்த நிறுவனத்தில் நான் மூன்று மாத காலம் இருபது ஆண்டுகளுக்கு முன் பணி செய்தபோது அவர்கள் எவ்வளவு பெரிய தொண்டைச் செய்கிறார்கள் என்பதை நான் உணரக்கூடியதாக இருந்தது. இந்த நிலையத்திற்கு போதைவஸ்திற்கு அடிமையானவர்கள், குடிகாரர்கள் என்று பலதரப்பட்டவர்கள் வருவார்கள். எனினும் இந்த நிறுவனத்திற்கு வந்ததினால் திருந்தி தற்கொலை எண்ணத்தையும், வன்முறைகளையும் கைவிட்டோர்கள் அநேகர். அண்மையில் வெள்ளவத்தையில் நடந்த சம்பவம் மனித சமுதாயத்தையே வெட்கப்பட்டு தலை குனியுமாறு செய்துவிட்டது.

நம் கோவில்களில் நடத்தப்படும் சிறந்த சொற்பொழிவுகளினால் வன்முறை எண்ணங்களை நம் மக்கள் கைவிடக்கூடிய வாய்ப்புண்டு. மனந்திருந்தும் வகையில் பேசக்கூடிய சொற்பொழிவாளர்களை அழைத்துவரும் இந்து நிறுவனங்களுக்கு கைகூப்பி நன்றி சொல்கிறேன். இந்த நிகழ்ச்சிகளை சற்று குறுகிய இடைவெளிகளில் ஏற்படுத்தினால் இன்னும் அதிக பயன் தரும். சற்று புதிதாக சிந்தனை செய்து தொண்டாற்ற நாமும் முன்வருவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MOST FAVOURITE SRI LANKAN WEBSITE
BEST WEB
2010

'வெண்கல' விருது வென்ற யாழ் மண்
இணையத்தளத்திற்கு சிறு விளம்பரதாரர்களை
அன்புடன் வரவேற்கிறோம்!

அனைத்து சிறு விளம்பரங்களும் முற்றிலும் இலவசம்!

யாழ் மண்
Yarl Mann Connect with Jaffna
www.yarlmann.lk



மேலதிக தகவல்களுக்கு : +94-773-186-987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




All Models of Computer printer Ribbons



Electronic Typewriter Ribbons

Inkjet Cartridges, Inkjet Refills

Laser Printer Toners,




Digital Duplicating Inks, Black & Colour



Digital Stencil Master Rolls

Photocopy Papers, Roneo Papers

Toner for any copies







Computer Accessories & Papers

Fax Papers, Fax Ink Film Rolls & Cartridges

Paper, Board Packing Materials

All types of Office Stationery







RAINBOW STATIONERS (PVT) LTD.




# Rainbow Stationers (Pvt) Ltd.

**IMPORTERS, DEALERS IN PAPER & STATIONERY**

No. 18, Maliban Street, Colombo 11, Sri Lanka.
Voice : 2433906 (Hunting) 2433907, 2433908 Fax : +94 11 2433904
e-mail: rainbowst@sltnet.lk Website : www.rainbowsts.com

## *Join the Largest Stationery House*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.